அகிலத்திரட்டு வசனம்

புலவர் கு. பச்சைமால் M. A.

அகிலத்திரட்டு வசனம்

புலவர் கு. பச்சைமால் M.A.
சாமிதோப்பு

பூவாணி பதிப்பகம்
சாமிதோப்பு 629704
குமரி மாவட்டம்

முதற் பதிப்பு: 1971 ஆகஸ்ட்
இரண்டாம் பதிப்பு; 1982 ஆகஸ்ட்

★

பூவாணி வெளியீடு — 1.

உரிமை பதிவு

அகிலத்திரட்டு வசனம்
(அகிலம் வசனகாவியம்)

★

ஆசிரியர்:

புலவர் கு. பச்சைமால் *M. A.*
சாமிதோப்பு 629 704
குமரி மாவட்டம்

★

வெளியிடுவோர்:

திருமதி நா. பன்னீர்செல்வம் பச்சைமால்
சாமிதோப்பு 629 704
குமரி மாவட்டம்

★

அச்சிட்டோர்:

அசிசி அச்சகம்
நாகர்கோவில் 629 001

விலை ரூ 4-50

முகவுரை

கண்ணனின் அவதாரமாகக்
கலியழிக்க வந்தவர் பகவான் வைகுண்டர்!

அவர் வரலாற்றைக் கூறும் அற்புதக் காவியம் அகிலத்திரட்டு!

இதில் கூறப்பட்டுள்ள யுக - புராண - இதிகாசக் கதைகளும் பகவான் வைகுண்டர் வரலாறும் கற்போர்க்குக் களிப்பு ஊட்டுபவை.

வைகுண்டரின் **'சகாதேவன் சீடர்'** எனப் புகழ்பெற்ற **அரிகோபாலன் சீடர்** கி. பி. 1841-ல் இதனைப் பாடினார்.

"அகிலத்திரட்டுக் கவிதைகளைப் படிக்க முடியாததால் அதனை வசனத்தில் தர வேண்டும்" என்ற அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 1971-ல் **'அகிலம் வசன காவியம்'** என்ற பெயரில் வெளிவந்த நூல் இப்போது 'அகிலத்திரட்டு வசனம்' என்ற பெயரில் உங்கள் கரங்களில் தவழ்கிறது.

ஏறக்குறைய 13,500 வரிகளையுடைய அகிலத்திரட்டின் அனைத்துச் செய்திகளையும் தக்க பாட்டு வரிகளுடன் இதில் அமைத்துள்ளேன்.

இதனை இப்போது வெளியிடத் தூண்டுதலாகவும் துணையாகவும் நின்ற ஆசிரிய நண்பர், அம்மாண்டிவிளை **திரு. சு. செண்பகப் பெருமாள்** அவர்களுக்கும் இம்முயற்சிகளில் எப்போதும் துணை நின்ற தர்ம சீடர்கள் **திரு. நா. பாலரசு, B. A., திரு நா. பால்நாடார்** ஆகியோருக்கும், நன்முறையில் அச்சிட்ட நாகர் கோவில் **அசிசி அச்சகத்தார்க்கும்** என்றும் என் நன்றி உரியது.

அகிலத்திரட்டை கதைபோல் படித்துப் புரிந்துகொள்ள இது ஒன்றே கையேடுபோல் உள்ளது.

அன்பர்கள் வாங்கிப் பயனடைவார்களாக.

சாமிதோப்பு,
26—8—1982.

அன்புடன்,
ரு. பச்சைமால்.

படையல்

மனித
அவதாரன்

மண்ணகத்துப்
பெருந்தெய்வம்

புனித
வைகுண்டர்

பொன்னடிக்கே
படைக்கின்றேன்!

பொருளடக்கம்

	நூல் வரலாறு	1— 5
1.	நீடிய யுகம்	6— 8
2.	சதிர் யுகம்	9— 10
3.	நெடிய யுகம்	11— 13
4.	கிரேதா யுகம்	14— 18
5.	திரேதா யுகம்	19— 28
6.	துவாபரயுகம்	29— 47
7.	கலியுகம்	48—121
8.	தர்மயுகம்	122—126

வைகுண்டர் வாழ்வு காலக் கணிப்பு:

வைகுண்டர் பிறப்பு — கி. பி. 1809

வைகுண்டர் திருச்செந்தூர் கடலில் மறைந்தது — 1833 மார்ச் 1 (வெள்ளிக்கிழமை)

வைகுண்டர் விஞ்சைபெற்று வெளிப்பாடு — 1833 மார்ச் 3 (1008 மாசி 20 ஞாயிற்றுக்கிழமை)

வைகுண்டர் நிறைவு — 1851 ஜூன் 2

அ

அகிலத்திரட்டு

வசனம்.

நூல் — வரலாறு

அகிலத்திரட்டு:-

அகிலத்திரட்டு!
உலகத்தின் அறத் திரட்டு!
எட்டு யுகச் செய்திகளைத்
தித்திக்கும் தமிழில் கூறும் காவியத் திரட்டு!

இவ் வகிலத்திரட்டின் செய்திகளைப் பிரபஞ்சத்தின் தொடக்கத்திலேயே, திருமால் அருளிச் செய்ய தேவர்கள் மேருமலையில் பொறித்து வைத்தனர். உலகத்தில் நடைமுறையாக வேண்டிய இச்செய்திகளை ஒவ்வொரு யுகத் தொடக்கத்திலும் திருமாலுக்கு வியாகர முனிவர் நினைவு படுத்துவார்.

அம்மானை:- கலியுகத்தில் நாராயணரே வைகுண்டராக அவதரித்துக் கலியழிய வழிசெய்தபின், வைகுண்டலோகத்தில் வைத்துக் கலியுகத்தில் நடந்தவைகளைக் கூறும்படி இலட்சுமிதேவி தன் நாயகனாகிய வைகுண்ட நாராயணரிடம் கேட்டபோது இந்நூற் செய்திகளை அவர் அவளுக்கு உரைத்தார். அம்மாவுக்கு அய்யா உரைத்ததால் இது 'அம்மானை' **ஆயிற்று**.

சகாதேவன் சீடருக்கு:— இதை வையத்து மக்கள் எல்லாம் அறிவதற்காக நாராயணரே வைகுண்டராக அவதரித்தபோது தன் சீடர்களில் ஒருவரும்—**'சகாதேவன் சீடர்'** எனப் பெயர்பெற்ற சீலனும் தவக்கவியும் — தாதுமணம் சிறக்கும் தாமரைக் குளங்கள் நிறைந்த தாமரைக்குளம் என்ற ஊரில் வாழ்ந்த இராமகிருஷ்ணன் நாடாரின் மகனுமான **'அரிகோபாலன் சீடருக்கு'** 1016-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27-ம் தேதி, வெள்ளிக்கிழமையன்று அவர் தூக்கத்தில் இருந்தபோது அவர் அருகில் சென்றிருந்து **'ஏரணியும்'** என்ற சொல்லைக் காப்பாக எடுத்துக் கொடுத்து, ''நான் உன் அகமிருந்து மேல் நடப்பெல்லாம் உரைப்பேன், நீ வையகம் அறிய இதனைக் காவியமாகப் பாடு''—என ஆணையிட்டு அருள அரிகோபாலன் 'அகிலத் திரட்டு அம்மானை' என்ற அருங் காவியத்தைப் பாவலர்களும் மெச்சும் வண்ணம் பாடினர்.

அகிலத்திரட்டு!
அகிலத்தின் அருள் திரட்டு!

ஏரணியும் மாயோனுகிய திருமால் நீடிய யுகம் முதல் கலியுகம் வரை உலகில் அவதாரம் செய்து அநீதியையும் அநீதியாளரையும் அழித்து நீதியை நிலைநாட்டியதையும், அவருடைய தர்ம யுகச் செய்திகளையும் கூறும் புராண வரலாற்றுத் திரட்டு!

கலியுகத்தில் கலியை அழிக்கவேண்டிய காரணத்தின் பொருட்டு திருமாலே வைகுண்டராகத் தோன்றித் தவமிருந்து சான்றோரைக் காத்த உண்மைகளைக் கதையாகக் கூறும் கதைத் திரட்டு!

கவிதை அழகும்—கற்பனை நயமும்—சமய உண்மைகளும்—அவதார மகிமைகளும்—அற்புதங்களும் நிறைந்த காவியத் திரட்டு!

செந்தூர்க் கடலில் சேர்புகழ் மாயன் மகரமாகத்தன் மனையாளன இலட்சுமியையே நிறுத்தி அவள் திருவயிற்றில் தன் அவதாரமாகப் பொலியப்போகிற கிருஷ்ண சடலத்தில்

தோன்றிய சப்பூரணனைச் செலுத்தி—மூன்றுநாள் தூய்மை செய்து—மனுப்பிறப்பின் களங்கங்களை நீக்கி—நாரண வைகுண்டராக மாற்றி—விஞ்சைகளும் உரைத்து, ''தென் குமரி நாடான, நாதாந்த வேதம் நாடுகின்ற, அகத்தீசுவரரும் தாணுமாலையரும் அமர்ந்திருக்கின்ற, ஆகமக் கூத்து ஆடுகின்ற, அச்சமில்லா பூமி''யான தெச்சணத்துக்கு அனுப்பி சான்றோரைக் காத்த சரித்திரத் திரட்டு!

வைகுண்டர் வரலாறான இப்பெருந்திரட்டு, ''பாண்டவர் தமக்காய்த் தோன்றிப் பகையெலாம் முடித்த'' மாயத் திருமால் கலியன் வந்த விசனத்தால் கைலை சென்று பின் சான்றோர்களைக் காப்பதற்காக இந்த பூமியில் வைகுண்டராகப் பிறந்த ஞாயத்தை உரைக்கிறது.

பத்துத் தலையுடைய அரக்கனை அழித்த ஸ்ரீ ராமபிரானே இக் கலியில் வைகுண்டராக அவதரித்தார். சீதை சிறையிருந்ததுபோலச் சிறையிருந்தார். சான்றோருக்கு மண்ணும் தண்ணீரும் கொடுத்தே சகல துயரங்களையும் போக்கினார்— என்ற அருட் சரிதையை விவரிக்கிறது

யுகத்தொகை:— வைகுண்டர் விதித்தபடி, 'குறோணிக்கு பூதக் குருமுனி புத்தி சொன்னான்; மல்லோசிவாகனனுக்கு உரோமரிஷி புத்திசொன்னான்; சூரபர்ப்பன்-சிங்கமுகாசூரனுக்கு வீரவாகுதேவர் புத்தி சொன்னார்; இரணியனுக்குப் பிரகலாதன் புத்தி சொன்னான்; இராவணனுக்கு விபீஷணன் புத்தி சொன்னான்; துரியனுக்குப் பீஷ்மர் புத்தி சொன்னார். இவ் ஆறு யுகங்களிலும் இவர்கள்கூறிய புத்தியைக் கேளாததால் ஏழாவது கலியுகத்தில் வைகுண்டரே நேரில்வந்து புத்தி சொன்னார். அப்படியும் அவன் மனந்திருந்தவில்லை. அதனால் அய்யா கலியை அழிக்கப்போகிறார். பொன்பதியான துவராபதி தோன்றப்போகிறது. தர்மயுகம் மலரப் போகிறது. கலியுகத்தில் கலியனுக்குப் புத்திசொன்ன அய்யா நாராயண வைகுண்டரே கலியனை அழித்துத் தர்மயுகத்தில் ஆட்சிக்கு வரப்போகிறார்' என்ற நீண்ட யுக வரிசைச் செய்தியெல்லாம் நுட்பமாக உரைக்கிறது

அரிகோபாலரின் அவையடக்கம்:- இத்தகைய பெருங்கதைக் காவியத்தை ஒரு சாதாரண மனிதன் பாடிவிட இயலுமா? முடியுமென்று முயன்றால் அது மயிலாடக் கண்டு வான்கோழி ஆடியது போலவும்; தேனீக்கள் தேன் வைப்பதைக் கண்டு கடந்தை தாடுகட்டத் தொடங்குவது போலவுமே ஆகும்.

இதை ஒரு மனிதன் செய்ததாக யாரும் நினைக்கவேண்டாம். மனிதனுள் தெய்வம் நின்று இதனை நடத்தி முடித்தது. அரிகோபாலனின் மனதுள்ளகமிருந்து வைகுண்டரே இதைச் செய்தார்—என்றுதான் கூறவேண்டும். 'நாதன் உரையைத் தொகுத்தளித்தவரே அரிகோபாலன்' என்ற அழகுத் தமிழ்க் கவிஞர். இக்காவியத்தின் கருத்தெல்லாம் கலியுகக் கண்ணன் வைகுண்டருடையது. காவிய அமைப்பு அய்யா தன் அன்புச் சீடனுக்கு அருளிக் கொடுத்தது.

நூலின் பயன்-யுகத் தர்மம்!:- இக் கலியுகத்திலும் அனைவர் வாழ்விலும் தர்மம் நிலைபெற இக்கதையைச் சொல்வதும் கேட்பதும் இன்றியமையாதது. உவமை கூற முடியாத இக்கதையைச் சொல்வதும்—கேட்பதும் யுகத் தர்மம் ஆகும்.

எல்லோரும் அறியவென்றே இதை எம்பெருமான் சீடர் அகமிருந்து செந்தமிழில் செப்புவித்தார். இதனை எல்லோரும் கற்றறியும் வண்ணம் 'வசன காவியமாய்' அன்புக்கொடி மக்கள்வசம் சேர்ப்பதும் ஒரு யுக தர்மமே ஆகையால் இப்பணியும் அய்யா அருளால் நிறைவேறியது.

அகிலம் என்பது நமக்காகவே அவதரித்த நம் 'நாதன் உரை'. 'மாநூல்'. சோதியுட நீதம்'. 'தெய்வ மெய் நீதம் வந்த செய்தி'. 'வச்சுகந்து பார்த்தால் வழிதெரியும் இவ் வேட்டில்'. வைகுண்டர் வரலாற்றைக் கதையாய்ப் படித்தோர்க்கு உள்வினைநோய் தீரும்.

இதை,

"வாசிக்கக் கேட்டு மகிழ்ந்திருந்த அன்போர்க்குப்
பூசித்து நின்ற பூரணங்கள் கிட்டும்''.

நூல் வாயில்

எத்தகைய பெரும் புலவராலும் வருணிக்க இயலாத அளவுக்கு வளஞ் சிறந்தது கைலை மலை. 'கைலை வளமை கட்டுரைக்கக் கூடாதது!''

அக் கைலையில்—

தேவர்கள் எல்லோரும் சூழ்ந்திருக்க பிரமனும்—திருமாலும் சிவனும் ஒருங்கே ஒரு சிங்காதனத்தில் வீற்றிருந்தார்கள். அப்போது, ''ஈரேழு உலகும் இரட்சித்த உத்தமியாளான, மங்காத தேவி மாதுதிரு லட்சுமியாள்'' அங்குவந்து நாராயணர் பாதத்தைத் தொழுதாள்.

தொழுத அந்த அகில அன்னை தன் கணவரான நாராயணரைப் பார்த்து, ''தேவர்க்கெல்லாம் தலைவரே! என் அன்பு மணவாளரே!! நீர் என்னைத் திருமணம் முடித்துக் 'கோவரி குண்டமாகிய' கைலையில் இருத்திவிட்டுப் போய் விட்டதேன்? யுகத்துக்கு யுகம் தாங்கள் அவதரிக்க வேண்டிய அவசியம் என்ன? அந்த யுகாவதாரங்களிலே தாங்கள் செய்த அற்புதங்கள் யாவை?'' எனக் கேட்டாள்.

அப்போது, நாதத் திருமால் தன் மனையாள் இலட்சுமி தேவிக்கு எட்டு யுகச் செய்திகளையும் கூறினார்.

இச்செய்திகளையே அகிலத் திரட்டென்னும்-அருங் காவியமாகப் படைப்பதற்காகக் கலியுக அவதாரத்தில் வைகுண்டர் தன் சீடரான அரிகோபாலனுக்குக் கூறினார்.

அவர் கூறியது என்ன?

அரிகோபாலன் 'அகிலத்திரட்டில்'
திரட்டிப் படைத்தது என்ன?

இங்கே நடைதிறக்கப்படுகிறது—
அகிலவசனக் கோவிலுக்குள் நுழையுங்கள்...
காவியக் காட்சிகள்—உயிர்
ஓவியக் காட்சிகளாகத் தீட்டிவைக்கப்பட்டுள்ளன.

1. நீடிய யுகம்

நீடிய யுகத் தோற்றம்:- ''ஏகம் ஒரு பரமானது. 'இம்' என்றொரு வாயுவில் சக்தி விளைந்தது. சக்தியில் சிவனும் சிவத்தில் சக்தியும் தோன்றியது. சக்தியில் நாதம் தோன்றியது. நாதத்தில் விஷ்ணுவும் உருத்திரரும் மயேச்சுரரும் தோன்றினர். அதே நாதத்தில் அண்ட பிண்டமும் தோன்றியது.''

அதன்பின் ஒரு யுகம் தோன்றியது, அந்த யுகத்திற்கு என்ன பெயரிடுவது என்று சிவனும் பிரம்மாவும் மாலும் யோசித்தனர். முன் ஆகமங்களையெல்லாம் பார்த்து 'நீடிய யுகம்' எனப் பெயரிட்டனர்.

பின்பு, அவ்வுகத்தில் யாரை இருத்தலாம் என்று தீவிரமாகச் சிந்தித்தனர். அப்போது சிவன் ஒரு வேள்வி வளர்த்தார். அந்த வேள்வியிலே பெரிய மலைபோன்ற தோற்றத்துடன் குறோணி பிறந்தான்.

குறோணி இயல்பு:- குறோணி, ''அறந்தான் அறியா அநியாயக் கேடனுமாய், பிண்டம் நிறையும் உடம்புடைய பொல்லாதவனுமாய்'' இருந்தான். அவனுக்கு முகம் கண்கள் எல்லாம் முதுகில் இருந்தன. அவன் கோடி கால்களும் கோடி கைகளும் கோடி நாலு முழம் உயரமும் உடையவனாக இருந்தான்.

பிறந்த உடனேயே அவனுக்குப் பெரும் பசி தோன்றியது. உணவுக்காக மண்ணில் உள்ள எல்லாவற்றையும் விழுங்கினான். அப்படியும் அவனுக்கு வயிறு நிறையாமல்

> "கைலை தனைக்கண்டு கண்கள்மிகக் கொண்டாடி
> ஆவி எடுத்து அவன் விழுங்கத் தொடங்கினன்''.

திருமால் அப்போது கைலையில் இருந்தார். குரோணி கைலையை விழுங்கத் தொடங்கிய உடன் மால் தப்பி ஓடி மண்ணுலகம் புகுந்து சிவனை நினைத்துத் தவம் இருந்தார்.

ஆறு யுகத்திலும் அரக்கர் தோன்ற வழி வகுப்பு:- மாலின் தவத்தில் சிவபெருமான் ஒரு சந்நியாசி போலத் தோன்றி 'மாலே நீர் என்னை நினைத்துத் தவம் மேற்கொண்டது ஏன்?' என்று கேட்டார்.

அதற்கு மால், 'சிவனே தங்கள் வேள்வியில் பிறந்த குரோணி தீராத பசியால் உலகமெல்லாம் விழுங்கிவிட்டான். கைலையையும் எடுத்து விழுங்க நிற்கிருன். அதனல் பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. எனவே தாங்கள்,

> "பிறவி செய்த பாவி முகமும் அவன் உடம்பும்
> துண்டு ஆறதாகத் தொல்புவியில் இட்டிடவும்
> கண்ட கண்ட மாய்ப்போட கடிய வரம் எனக்குத்
> தண்தமிழீர் நீரும் தரவே தவசிருந்தேன்!"-

என்ருர்.

அதுகேட்ட சிவன் திருமாலே குரோணியை நீர் அழிக்க முயல்வது சரியே. ஆனல்........கேடன் குரோணியை ஆறு துண்டமாக்கி விட்டெறிந்தால் அவன் துண்டு ஆறும் மேலும் ஆறு யுகங்களிலே உமக்குப் பகையாய் வந்து பிறக்கும். நீரும் யுகத்துக்கு யுகம் அவன் குலமழித்கப் பிறந்து தீர வேண்டும். இறுதியில் கலியுகம் வரும். அதில்தான் அரக்கர் குலத்தை அடியோடு அழிக்க ஒரு ஏற்பாட்டினைத் தொடங்க முடியும் என்று கூறுனர்.

குரோணி வதை: எவ்வாருயினும் பரவாயில்லை. இப்போது இக்கொடியவன் குரோணியைக் கொன்ருல் அதுவே போதும் எனக் கூறி—உறுதி பூண்டு அவனை ஆறு துண்டாக வெட்டிக்கொல்ல வரம் பெற்ருர். அழிப்புக் கடவுளாகிய சிவ பெருமான் அவருடைய பணியைத் திருமாலிடம் ஒப்படைத் தார்.

வரம்பெற்ற மாயன் குரோணியை ஆறு துண்டாக வெட் டிப் புவியில் போட்டுவிட்டு அவன் உதிரத்தைக் 'கொந்து கொந்தாகக் குளம்போல் குண்டு வெட்டி' அதில் விட்டு உயர்ந்த பீடம் போட்டார். நீடிய யுகம் அழிந்தது.

பின்,

அந்த உயர்ந்த பிண மேட்டில்
சதிர் யுகத்தினைப் படைத்தார்.

2. சதிர் யுகம்

சதிர்யுகத்தில் குண்டோம சாலி:- சதிர்யுகம் தொடங்கியது. சதிர் யுகத் தொடக்கத்தில் குரோணியின் ஆறு துண்டங்களில் ஒன்று அரக்கனாகப் பிறவி எடுத்தது. இவ்வரக்கன் 'மகாமல்ல குண்டோம சாலி' எனப்பெயர் பெற்றான்.

குண்டோம சாலிக்கு முந்நூறு கைகள். கால்களும் முந்நூறே. அவன் கைகளின் நீளம் நானூறு ஆயிரம் முழம். இவ்வளவு பெரிய உருவம் கொண்டவனாக அவன் இருந்தாலும் எப்போதும் 'அட்டைபோல சுருண்டு அம்மி போலே கிடப்பான்'.

இவனாலும் உலகுக்குப் பெருங்கேடு ஏற்பட்டது. மண்ணகத்தில் மட்டுமல்ல விண்ணகத்தில்கூட யாரும் அமைதியாக வாழ முடியவில்லை. எனவே அவனை அழிப்பதற்கு மாயன் திட்டமிட்டார்.

மாயன் சூழ்ச்சி:- உலகைச் சுற்றி ஒரு கடலை உண்டாக்கி அதில் தூண்டில் போட்டுக் குண்டோம சாலியைக் கொல்ல எண்ணினார். உடனே, மலையைத் தூண்டிலாக்கி அதில் தேவரைப் புழுவாக இட்டு தூண்டிலை வேதமாகிய கயிற்றில் கட்டி அக்கயிற்றில் வருணனை மிதப்பாங் கட்டையாகக் கட்டிக் கையில் எடுத்துக்கொண்டு வாயுவைத் தோணியாக்கி அதில் ஏறிக் கொண்டார். தோணியை மூவாதி மூவர் தள்ளிவந்தனர்.

குண்டோமசாலி வதை:- மாயனின் தோணி கடலினுள் சென்றது. அவர் கடலில் தூண்டிலைப் போட்டார். இரைதேடி அலைந்த குண்டோமசாலி மாயனின் மாயத்

தூண்டிலைக் கண்டான். அந்த – ''சதிர்யுகமாண்ட சண்டித் தடிமூடன் எதிரே வருகின்ற இரையைக் கண்டாவி'' தூண்டில் தனை விழுங்கினன்,

தூண்டிலே அவனுக்கு எமனுயிற்று. தூண்டில் குண்டோமசாலியின் உள்ளே செல்ல அவன் உயிர் வெளியே சென்றது.

அவன் இறப்பது மட்டும் போதாது, அவ்வுகமே அழிய வேண்டும் என்றெண்ணிய மாயத் திருமால் அந்த பாவி மடிந்தவுடன் – 'தாவிச் சலத்தால் சதிர்யுகத்தினை அழித்தார்'.

3. நெடிய யுகம்

தேவர்கள் வேண்டுகோள்:- சதிர்யுகத்தை மால் அழித்தவுடன் தேவேந்திரன் முதலாகத் தேவர்களும் முனிவர்களும் படைப்புக் கடவுளைப் பணிந்து வணங்கி,

**''பரமனே நீர் படைத்த யுகம் இரண்டதிலும்
வரமேதும் கேட்டு வாழ்ந்தவரைக் கண்டிலமே''.**

''ஆகவே ஈசுவரரே இனி பிறப்பவன் ஆணவம் மிக்கவனாய் தங்களிடம் பெரிய வரங்கள் பெற்று வாழுபவனாய் கோட்டையும் படையும் ஆட்சியும் உடையவனாய் மணம் புரிந்து வாழ்பவனாய் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களையே இனி நீர் படைக்க வேண்டும்'' - என வேண்டினர்.

ஒரு துண்டில் இரு அரக்கர்கள்:- அதற்கிசைந்து முன்னுள்ள துண்டுகளில் ஒன்றினை எடுத்து இரண்டாகப் பிழந்து இரண்டுக்கும் பிரம்மா உருப்படைத்தார். சிவாயப் பொருள் சீவ நிலை கொடுத்தார். உபாயப் பொருளான மால் உல்லாசம் கொடுத்தார். ஒரு துண்டிலிருந்து இப்போது இரு அரக்கர்கள் எழுந்து நின்றனர்.

சிவன் சூழ்ச்சி:- அப்போது மால் சிவனிடம் இவர்களுக்கு என்ன பெயரிடலாம் எனக் கேட்டார். அவர் அதற்குத் ''திறந்தான் பெருகும் திருமாலே! கேளும், இந்த அசுரர்க்குப் பெயரிடுவதற்கு நானோர் உபாயம் செய்கிறேன்'' என்று கூறி, ஆதிகைலாசத்தில் நிஷ்டையில் இருந்த கருதி முனியின் தவத்தை அழிக்குமாறு இந்த அரக்கர்களை ஏவினார்.

ஆளுக்கு ஐம்பது தலையும் நூறு கைகளும் நூறு கால்களும் நூறு கண்களும் இரண்டு கலம் பற்களும் பெற்ற இம் மாபெரும் அரக்கர்கள் சிவன் ஏவல் படி கருதி முனியின்

தவத்தினை அழிக்கத் தாவிச் சென்றார்கள். சென்றவர்கள் 'கண் கவிழ்ந்த மாமுனியை'' வாரி எடுத்துக் கடலில் வீச ஆர்ப்பரித்து நின்றனர்.

சுருதிமுனி சபதம்:- அப்போது ''கலைமேல் பரந்த கடிய முனியான அச்சுருதிமுனி'' ஏனடா என் தவத்தைக் கலைக்கப் பார்க்கிறீர்கள்? நீங்கள் என்னை எடுத்து இக் கடல் மேல் போட்டாலும்,

''பங்கயக் கண் மாயன் பக்கமதில் நான் சேர்ந்து
ஓர் அம்பாய் உரு வெடுத்து
உங்களிருபேரை ஊடுருவ அறுத்து
இந்தக் கடலில் எடுத்து எறிந்து
உங்கள் ஊரை ஒக்க கரிக்காடாக்கி
நானும் வைகுண்ட நற்பேறு பெற்றிருப்பேன்''

என்று சாபமிட்டார். அரக்கர்கள் அவர் சாபத்தை உணராமல் அவரைக் கடலில் எறிந்தார்கள். கர்ம விதிப்படியே சுருதிமுனி மந்திர புரக்கணையாய் மாலின் பக்கத்தில் கடலலைக்குள் இருந்தார்.

அரக்கர்களுக்குப் பெயரிடல்:- அசுரர்கள் விரைந்தோடி சிவனிடம் வந்து, முனிவன் சாபத்தை நினைத்து அஞ்சி பல வரங்களைக் கேட்டனர். அவர்கள் கேட்டபடி சிவபெருமான் எல்லா வரங்களையும் கொடுத்தருளினார். அவர்கள் இருவருக்கும் தில்லை மல்லாலன், மல்லோசி வாகனன் எனப் பெயரும் இட்டார்.

வரம்பெற்ற அரக்கர்கள் மிகுந்த திடம்பெற்று வையத்தின் உயிர்களையெல்லாம், வதைத்துக் கொலையாட்சி புரிந்தனர். தேவர் முனிவர்கள்கூட அமைதியாய் வாழ முடியவில்லை இவர்கள் கொடுமை தாங்காமல் தேவர்கள் சிவனிடமே முறையிட்டனர்.

சக்தி கூறிய வழி! அரக்கர் வதை:-தேவர்கள் முறையீடு அதிகரிக்கவே சிவன் தனக்குக் 'காவலாய் நித்தம் கைக்குள் இருக்கின்ற பெண்ணமுதைப் பார்த்து' மடப் பாவி யான மல்லோசி வாகனனும் தீயனிலும் தீயன் தில்லை மல்லா லனும் செய்கின்ற கொடுமைகளையும் கூறி அவர்கள் பெற் றுள்ள வரங்களையும் எடுத்துக் கூறினர். அப்போது தேவி தன் நாதனிடம்:

''எத்தனை வரம் இவர்கள் பெற்றிருந்தாலும் இவர்களை அழிப்பதற்கு அலைமேல் துயிலுமொரு ஆண்டி உண்டு கண் டீரே, அவர் பக்கத்தில் கணையாய் வளரும் சுருதிமுனி இருக் கிருனே; அவர்களை அழைத்தால் இவர்களை அழித்திடலாம்'' என்று யோசனை கூறினள்.

அதனை மெச்சிய சிவன் உடனே மாலினை நினைத்தார். மால் உடனே அலையிலே வளர்ந்த கணையினை எடுத்து சிரித் துக்கொண்டே அரக்கர்மேல் தொடுத்தார். நெடியயுகம் நீறு பட்டழிந்தது.

''அம்புப் பகையாலும் அதிகமால் பகையாலும் கெம்பிய சூரர் கெட்டழிந்தனர்.'' இவ்வாறு நெடிய யுகம் அழிந்தது.

4. கிரேதா யுகம்

அரக்கர் இருவர்:- நெடிய யுகத்தில் தில்லை மல் லாலனையும் மல்லோசிவாகனனையும் கொன்று அறம் நிலை நாட்டிய திருமால் பின்பு சிவனிடம் வந்து இன்னும் ஒரு யுகத்தை இப்போது படைக்க வேண்டுமென்று வேண்டினர். உடனே சிவனும் தொன்னூல் மறையெல்லாம் பார்த்து நெடி யயுக மழிந்தால் மேல் வரவேண்டியது கிறேதா யுகமாகும். மாலே முன்னுள்ள குரோணியைப் பிளந்த துண்டிலே ஒன்றை யெடுத்து இரண்டாகப் பிளந்து அசுரர்களைப் படைப்போம் என்ருர். மால் மகிழ்ந்து இசைய ஒரு துண்டினை இரண் டாகப் பிளந்து **சிங்கமுக** சூரன் என்றும் **சூரபர்ப்பன்** என்றும் இரண்டு அரக்கர்களாய்ப் படைத்தார்.

இவ்வசுரர்களுக்கு முறையே தலை தொண்ணூருயிரம். இவர்கள் மலையையும் தூக்கும் பலமுடையவர்களாகப் பிறந் தனர். இவ்வாறு சூரர்களைப் படைத்து ஊருக்குப் போங்கள் என்று விடைகொடுத்தார் ஈசர்.

விடை வேண்டிப்போன சூரர்கள் நாடாண்டிருத்தார்கள் இவ்வாறு நாடாண்டு வரும் நாளிலே மேலும் தங்களுக்குப் பல வரங்கள் வேண்டும் என அவர்கள் நினைத்தார்கள்.

சூரபர்ப்பன் தவம்:- உடனே சூரபர்ப்பன் சிவனைக் காண வேள்வி வளர்த்துச் செம்புக்குடம் நிறுத்தி தவம் நின் ருன். அத்தவத்தில் சிவன் வராததால் அவன் மிக வருத்த முற்று அதே வேள்வியில் விழுந்து இறந்தான்.

சகோதரப் பாசம்:- தன் உடன் பிறந்தான் வேள் வித் தீயில் விழுந்த உடன் மிகு துயர் உற்ற சிங்கமுகசூரன் தன் தலைகளை ஒவ்வொன்ருய்ப் பறித்துத் தீயிலிட்டான்.

இவன் செயலைக் கண்டு சிவன் இரங்கி உமையாளோடு அவனுக்குக் காட்சிதந்து உனக்கு என்னவரம் வேண்டும்

எனக் கேட்க அவன் முதலில் என் சகோதரன் உயிர்பெற்றெழ வரம் வேண்டும் என்றான். சிவன் அவ்வாறே அருள சூரபர்ப்பன் தீய்ந்த தீயிலிருந்து மீண்டும் உயிர்பெற்று எழுந்தான்.

அப்பொழுது சிவன் அவர்கள் சகோதரப் பாசத்தினைக் கண்டு இரங்கி உங்களுக்கு ஏதுவரம் வேண்டும் எனக் கேட்க சூரர்கள் ''உன்னால்கூட வெல்ல முடியாத வரமும்-உன் கைலைமலையைப் பெறும் வரமும் இந்திரன் முதலியவர்கள் எங்களுக்கு ஏவல் செய்யும் வரமும் வேண்டும்'' எனக் கேட்டனர்.

வரம் கொடுத்து வாழ்விடம் இழந்த சிவன்:- வாக்கு மீறாத-வல்லோனான சிவனீசன் அவ்வாறே கொடுத்தருளினார். இவ்வரத்தால் சிவன் தானிருக்கும் கைலையையும் இழந்தார். பின் செய்வதறியாது அவர் தன் தேவியுடன் திருமால் இருக்கும் அலைகடற் பள்ளிக்கருகில் சென்று அமர்ந்தார்.

எல்லா வரமும் பெற்றதால் அரக்கர்களுக்குப் பொல்லா நினைவுகளும் ஆணவமும் தோன்றின. அவர்கள் தேவர்களைக் கூடத் துயரப்படுத்தினர். தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர்.

உடனே சிவன் மாலோடு ஆலோசித்தார். உடனே மால் அரக்கர் இருவரையும் கொல்ல "ஆறுமுகனாய்" வடிவெடுக்க உளம் கொண்டார்.

திருமாலின் முருகாவதாரம்:- அவ்வெண்ணப்படி மாயோன் "கந்தன்" எனப்பெயரும் பூண்டு கந்தைத் துணியுடுத்து வேல்பிடித்து வெண்ணீறணிந்து உத்திராட்ச மாலையணிந்து ஒரு சந்நியாசிபோல ''நன்னுதானாவெனவே நாலஞ்சி கவிதான் பாடி — சக்தியைச் சூலமாக ஏற்று சூரர் இருந்த இடத்திற்கு அண்மையில் ஓரிடத்தில் பாடி வீடமைத்து அதில் தங்கி இருந்து ஒரு தூதுவனைத் தூதுவிட்டார்.

மாயன் சொல்லியனுப்பியபடி சூரர்களைக் காணவந்த

தூதன் அவர்களைக்கண்டு — ''கைலைத் தேவர்களைச் சிறையிலிருந்து விட்டு — கொலையாட்சியை நிறுத்தி நீ அறவோனாய் சீமையை அரசாள வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் இன்று கழித்து எட்டாம்நாள் கந்தசாமியார்க்கும் உனக்கும் போர். தயாராக இரு''. என்று கூறினான்.

அரக்கர் ஆணவம்:- தூதனுரை கேட்ட சூரர்கள் மிகு சினமடைந்தனர்.

''ஆரடா நீதான் அறியாயோ என்பலங்கள்
பாரடா உந்தன் கந்தன் படுகிறதை".

எந்தன் வலுவும் பெலமும் அறியமாட்டாய் நீ நாங்கள் அனைத்து வாமும் பெற்றவர்கள் எங்களுக்கஞ்சி சிவன்கூட கடலுக்குக் குடிபோய் விட்டதை நீங்கள் அறியவில்லை போலிருக்கிறது. உன்தன் கந்தசாமிக்குத் துணிவிருந்தால் போருக்கு வரச்சொல்'' என்று சினந்து கூறி அனுப்பினர்.

மாலின் அறிவுரை:- தூதன் கொண்டுவந்த மறுமொழியைக் கேட்ட கந்த சுவாமியான திருமால் சினம் கொண்டார். ஆயினும் பொறுமையோடு சூரர்களுக்குப் புத்தி மிக உரைத்தார். அசுரர்களைப் பார்த்து

''பர்ப்ப! கிரீடப் பவுசு இழவாதே
அற்பமிந்த வாழ்வு அநியாயம் விட்டுவிடு!
''மரணம் வந்து ஜீவன் மாண்டுபோகும் பொழுது
நன்மையது கூட நாடுமே யல்லாது
தின்மை வாராது தேவரையும் விட்டுவிடு"

என்று புத்தி கூறினர். அதற்கவர்கள்,

"இரந்து திரிகின்ற இரப்பவனுக்கு உள்ளபுத்தி
பரந்த புவியாளும் பாரமுடிக் காவலர்க்கு
ஏற்குமோ ஞானம் இரப்போர்க்கு அல்லாது
ஆர்க்குமே செல்லாது ஆண்டிவுன் ஞாயமது"

என்று எடுத்தெறிந்து பேச மாயன் போர் தொடுத்தார். சக்தியாகிய சூலத்தை எடுத்தெறிந்தார். போரில் முதலில் சிங்கமுக சூரன் இறந்தான். பின் சூரபர்ப்பனும் வீழ்ந்தான்.

அரக்கன் அவமதிப்பு:- இறக்கப்போகும் தருவாயில் சிங்கமுக சூரன் ''இரப்பனே என்னைக் கொல்ல உன்னால் இயலாது. நீ வேலாயுதத்தால் என்னைக் கொன்றாய் அல்லாமல் என்னை வெல்ல முடியுமா?'' என இகழ்ச்சி பேச மாயன் அவன் குறை உயிரையும் போகவைத்தார்

சக்தி சாந்தி மூழ்கியது:- அரக்கர் உயிரழக்க சூலமாய்ப் பிறந்த சக்தி தன் பாவம் தீர்க்கப்படவேண்டும். என்று வேண்டினாள். உடனே நாராயணர் சாந்தி வளர்த்துக் கொடுத்தார். சக்தி அதில் முழ்கி — சாபம் தீர்ந்து செம்மை யடைந்து கைலை ஏகினாள்.

சக்தி சூலத்தால் இரு அரக்கர்களையும் சங்காரம் செய்த தாலும் அவர்கள் தன் வீரத்தை இழிவுபடுத்தியதாலும் மாலுக்கு மனநிறைவு ஏற்படவில்லை. எனவே அவர் சூர பர்ப்பனை அதேயுகத்தில் இரணியனாய்ப் படைத்தார்.

இரணியன் தோற்றமும் வதையும்:- சூர பர்ப்பனை இரணியனாய்ப் படைத்த எம்பெருமான் நாராயணனே அவனை அழிக்க அவனுக்கு மகனாக அவதரித்தார். இரணியன் இப்பிறவியிலும் மாலை அவமதித்து 'நானே கடவுள்' என ஆணவம் கொள்ளப் பிரகலாதனாய் தோன்றிய மால் அவனை நோக்கி நீ முன் பிறவியில் என்னிடம் ''வேலாயுதத்தாலே நீ என்னைக் கொன்றாய். இல்லாவிட்டால் உனக்கு ஏலாது என்று கூறினாயே, இப்போதுபார் ஆயுதங்கள் அம்பு அஸ்திரம் வாளில்லாமல் வாயிதமாய் என் நகத்தால் வகிர்ந்திடுவேன்'' என்றுரைத்து,

"வாயில் நடையில் வைத்து மாபாவி சூரனையும்
நெஞ்சையவர் நகத்தால் நேரே பிழந்து வைத்தார்",

இரணியன் அவமதித்தான்:- அதன் பின்னும் இரணியனாகப் பிறந்த சூரபர்ப்பன் ஆணவம் அடங்காமல் ''நீ பத்து மலையைப் பார நகமாய்ப் பதித்து, இத்தலத்தில் என்னை இறக்கவைத்தாய் அல்லாது ஏலுமோ உன்னால் இரப்பனே.........?'' என்றிகழ்ந்தான்.

மாயன் சபதம்:- மாலான வேதன் மாக்கோபம் கொண்டார். அரக்கனே உன்னை இன்னுமிந்த உலகில் பிறவிசெய்து கொல்லாமல் விடமாட்டேன். உன் நல் காலம் இப்போது கிரேதா யுகம் முடியப்போகிறது. திரேதா யுகம் வரட்டும், அப்போது உன்னைக் கேட்டுக்கொள்கிறேன் என்று கடிந்துகூறி இரணியனை இரணசங்காரமிட்டு அன்று கிரேதா யுகமழித்தார்.

5. திரேதா யுகம்

இராவணன் படைப்பு:- திரேதா யுகத்தில் சிங்கமுக சூரன் – சூரபர்ப்பன் – இரணியன் என்ற மூவரையும் அழித்து மூதுலகில் அறம் நிலைநாட்டிய அய்யா நாராயணர் செந்தூர்க் கடலில் சிலநாள் தங்கி இருந்துவிட்டு மீண்டும் சிவனிடம் வந்து முன்யுகத்தில் அரக்கர் பேசிய ஆணப் பேச்சுக்களைக் கூறி மீண்டும் யுகம் படைக்க வேண்டினர்.

உடனே திரேதா யுகத்தினைப் படைத்தார்கள். அதற்கு அசுரனைப் படைக்க முன்னுள்ள துண்டில் ஒன்றையே பயன் படுத்தினர். சிவன் அசுரனைப் படைக்கப்போகும் நேரத்தில் மாயன் ''இவன் என்னை அவமதித்துப் பேசியதால் இவனைப்

''பத்து சிரசும் பத்திரண்டு கண் காதும்
தத்துவங்க ளோடே தான்படையும்
என்றுரைத்தார்".

மால் வேண்டியபடியே இராவணனைப் பத்துத் தலையோடு படைத்த சிவன் முன்பு விட்ட ரத்தத்தை அரக்கர் குலமாய் படைத்தார். இராவணனுடைய தலைகள் ஒவ்வொன்றும் நாலு முழம் உடையதாய் இருந்தது

விபீஷணன் - திரிசடை:- அரக்கனையும் அரக்கர் குலத்தையும் படைத்தஉடன் மாயன் தன் மேனியின் வியர் வையை உருட்டி 'விபீஷணனாகவும்' இலட்சுமியின் சடையில் ஒரு சிறுபகுதியைத் திரித்துத் '*திரிசடை*'யாகவும் படைத்தார்.

இராவணன் பெற்ற வரங்கள்:- பின்பு அரக்கனான இராவணன் ஈசுவரனை வணங்கி வரம் வேண்டி னன். உனக்கு ஏது வரம் வேண்டும் என்று சிவன் கேட்க ''யான் கேட்கும் வரங்களையெல்லாம் தருவதாகத் தங்கள் மூத்தமகன் கணபதியின் பேரில் ஆணையிட்டுத்தாரும்'' —என

அரக்கன் கேட்டான். சிவன் அவ்வாறே ஆணையிட்டுக் கொடுக்க அரக்கன்,

''மூன்று லோகத்திலுள்ள மூவாதித் தேவர்களும்
வேண்டும் பல ஆயுதமும் விதவிதமாய் அம்புகளும்
சூரியர் சந்திரர் என் சொற்கேட்டு
நடக்கவேண்டும்" -

என்பது முதலாக மூன்றரைகோடி வரங்கள் கேட்டான் அவ்வாறே சிவன் கொடுத்தருளினார்.

சிவனிட்ட சாபம்:- அப்போது அலைமேல் துயிலும் அச்சுதனார் மாலின் தேவி இலட்சுமி நல்ல அலங்காரக் கோலமுடன் அவ்விடத்தில் வந்து உமையாள் அருகில் அமர்ந்தாள்.

அவளைக்கண்டு இராவணன் மோகத்தால் மயங்கினான் அழிவதறியாமல் அன்னையைக்கண்டு தன்னை மறந்து மயங்கி நின்றான்.

அந்த நேரத்தில்,

"கேட்ட வரங்களெல்லாம் கெட்டியாய்
கொடுத்த ஈசன்
நட்டமுடன் சீதை நகையா லழிவாய்''.

என்று சாபம் கொடுத்தார்.

திருமால் சூழ்ச்சி:- ஈசன் கொடுத்த வரங்களையெல்லாம் கொண்டு அரக்கன் அங்கிருந்து கிளம்பினான். அவ் வரங்களை இராவணன்,

''கொண்டு போகும்போது குன்றெடுத்த மாயவரும்
கண்டு மறித்து கவுசலமிட்டு
அரைக் கோடி வரமாய் ஆக்கிவிட்டார்.
அவன் சரக்கோடி மூணும் தான்
தோற்றுப் போனான்''.

மூன்றரைக்கோடி வரம் பெற்று அதில் மாயனிடம் மூன்று கோடியைத் தோற்றுவிட்டு அரைக்கோடி வரத்தோடு மீண்டு வந்த அரக்கன் விரைந்து தன் நகருக்கு வழிநடந்தான். அப்போது வழியில் திருமாலை நினைத்துத் தவமிருந்த ஒரு முனிவனை மிதித்தான்.

இராவணனுக்கு முனிவன் சாபம்:- உடனே அம்முனிவன் வெகுண்டு பலவசை கூறி இராவணனை, ''உன் தலையை அறுக்க இராமபாணம் பிறக்க நான் தவமிருப்பேன். அதுவே உன்னை அழிக்கும்'' என்று சாபமிட்டான். சாப மிட்டபடி அவன் இராமபாணம் பிறக்கத் தவமிருந்தான். தவம் பன்னிரண்டு ஆண்டு நடைபெற்று நிறையும் காலம் வந்தது. முனிவன் தவம் நிறையும்காலம் இராவணன் அழிவு தொடங்கும் காலமாக அமைந்தது.

இராமபாணமும் வில்லும் பிறந்த கதை:- அந்த நேரத்தில் கைலையில் சிவன் ஒரு வேள்வி வளர்த்தான். முனிவன் இராமபாணம் பிறக்கத் தவமிருப்பதால், திருமால் அந்த வேள்வியில் தன் கால் நரம்பு ஒன்றினை உருவிப் போட்டு 'இது இராமபாணம் ஆகுக' என்றருளினான். திருமாலின் கால் நரம்பு இராமபாணமானது.

அதே வேள்வியில் திருமகள் தன் கையின் சுண்டுவிரல் நரம்பு ஒன்றினை உருவிப்போட்டு இது அந்த இராமபாணத் துக்கு ஏற்ற வில்லாக சமையட்டும் என்று அருளினாள். இராமபாணத்துக்கு ஏற்ற வில்லொன்று சமைந்தது.

இராம அவதாரக் காலமும் இராவணன் அழிவுகாலமும் நெருங்கி வந்தது.

இராவணன் கொடுமை:- இராவணன் உலகத்து உயிர்களை மிகவும் இம்சித்தான் வானவர் தேவர் கூட வாழ முடியவில்லை தேவரும் வானவரும் இறையவரிடம் முறையிட்டனர். அதைக்கேட்டு திருமால் மிகவும் வருந்தினார். உடனே அவர் சிவனிடம் சென்று

"பள்ளி யுறக்கம் பரிவாய் வருகுதில்லை
தள்ளினல் தேவரையும் தற்காப்பார் யாருமில்லை"

என்றுகூற, நாம் யாதுசெய்யலாம் என்று சிவன் கேட்க மாயன், இது இராமாவதாரம் ஏற்பட ஏற்ற காலம் என்பதைச் சுட்டிக்காட்டினர்.

தசரதன் தினகரன் தவம்:- இதே நேரத்தில் தங்களுக்குப் பிள்ளை இல்லாமல் பெரிதும் வருந்தி **தசரதனும் ஜனகன்** என்ற **தினகரனும்** தவம் இருந்தனர்.

இராமாவதாரம்:- இவர்கள் கைலை முனிவர்கள். முற்பிறவியில் தசரதனுக்குத் **'துகவீசு'** என்றும் ஜனகனுக்கு **'சுகசீலன்'** என்றும் பெயர்.

இராமாவதாரத்துக்கு இதுவே ஏற்ற நேரம். என்னைத் தசரதன் மகனைகப் படையும் இலட்சுமியைத் தினகரன் மகளாகப் படைத்து விடும் என்று மாயன் கூற சிவன் அவ்வாறே படைத்தார்.

திருமகள், சீதையாகப் பெட்டியில் வில்லோடு தினகரனுக்குக் கிடைத்தாள். திருமால் இராமனை அம்போடு தசரதனிடம் பிறந்தார்.

இலக்குவன் முதலியோர் பிறத்தல்:— பின்னும் திருமால் சிவனிடம் பாற்கடலில் தனக்கு அரவணையாகக் கிடந்த ஆதி சேடனை இலக்குவனைகவும் மெத்தையைப் பாரதனைகவும் தலையணையைச் சத்துருக்கனைகவும் தேவர்களை வானரமாகவும் - மராமரங்களாகவும் பூவர், சுகுமுனிவர், விசுவகர்மர் ஆகியோரை அமைச்சர்களாகவும் படைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள சிவன் அட்டியின்றி அவ்வாறே படைத்தார்.

"பாணமது தன்னலும் பத்தினியாள் கற்பாலும்
நாணமது கெட்டரக்கன் நல்லபத்து தலையிழந்து

அழிவதறியாமல் அகங்காரம் மிகக் கொண்டு
அவனிதனைத் துயர்ப்படுத்தி ஆண்டான்"
—கொலையாட்சி.

இராவணக் குலத்தை.

''முடியடி வேரில்லாமல் முழுதும் அறுப்பதற்கு
வேண்டும் பிறவியெல்லாம் விமலன் அருளிமிக
தாண்டவ சங்காரம் தானின்றுர் அம்மானே''.

''சீதை வளரத் திரு வில்லும் தான்வளர
கோதை குழல் சீதை கோமான் மிகவளர
சீராமர் பிறப்போர் சிறப்பாய் வளர்ந்திடவே
இராமர் குலங்கள் இரகசியமாய் வளரவே''—

இராவணன் அழிவை நோக்கி விரைந்து கொண்டிருந் தான்.

சீதைக்கு மணப்போட்டி, இராமர் வெற்றி: இக்காலத்தில் தினகரன் தேவி தன் மணாளனை அணுகி 'அம்பும் வில்லும் வளர ஆயிழையும் தான் வளர பக்குவங்களாச்சே பைங்கிளிக்கு மாலையிட' எனக் கூறி நின்ருள்.

உடனே தினகரனுர் வில் வளைத்தால் அல்லவோ சீதைக்கு மணம் நடப்பது? என்று கூறிக் கலைக்கோட்டு மாமுனியை வரவழைத்துத் தன் எண்ணத்தைத் தெரிவித்தார்.

காலமிது நற்காலம் கல்யாணம் நடைபெறும் என்றறிந்த கலைக்கோட்டு முனி உடனே மிதிலையிலிருந்து அயோத்திக்கு விரைந்து இராமனுக்கு உரைத்து அவனை உடன் கூட்டிக் கொண்டு மிதிலைக்கு வந்தான்.

கலைக்கோட்டு முனியின் யோசனைப்படி தினகரனும் மண் ணகத்து வேந்தர்க்கெல்லாம் தன் மகளுக்கு சுயவரம் என்ற செய்தியைச் சொல்லியனுப்பினுன்.

சீதையை மணம் செய்ய சித்தம் மிகவிரும்பி ''இராவண சூரன் இராமர் முதலானவரும், இராமகுலச் சாதி நல்ல

மன்னர் வந்தார்'' வந்தவர்களில், வில்லை ''இராமரெடுத்து, இராம சரம் ஏற்றி ஸ்ரீராமர் மணம் செய்தார் சீதைத் திரு மாதை'', சீதையை மணந்து சீராமன் மங்களகீதத்துடன் அயோத்தி வந்து கன்னித் திருவோடும் தம்பியர் துணையோடும் வாழ்ந்திருந்தான்.

கைகேயி சூழ்வினை:- அந்தக்காலத்தில் ''மாதா கைகேசியம்மை தாழ்ந்த மொழிசொல்லி தம்பி பரதனையும் நாடாள வைக்கவேண்டும்'' என்றுகூற இராமனும் சீதையும் இலட்சுமணன் துணையோடு காடேகினர். காட்டில் அண்ண னுக்கும் அண்ணிக்கும் கண்ணின் இமைபோல இலக்குவன் காவலிருந்து துணைபுரிந்தான்.

சிவ வாளும் அரக்கன் பலியும்—ஒரு நாள் இலட்சுமணன் இராமனுக்கும் சீதைக்கும் கனிபறிக்கப்போ னான். அந்த காட்டில் சூர்ப்பனகையின் மகன் தன் தந்தை யைக் கொன்ற மாமன் இராவணனை அழிக்கத் தவமிருந் தான். அவனைச் சுற்றி ஒரு ஆலமரம் வளர்ந்து மறைத்து நின்றது இதனை அறியாத இலட்சுமணன் அதனருகோடு வழி நடந்தான். அப்போது சிவன் அனுப்பிய வாள் ஒன்று வானின்வழி பறந்து வந்தது. அதைக்கண்ட இலட்சுமணன் அதன் குறிப்பை உணர்ந்து அதைக் கையேற்று ஆலமரத் தால் பொதியப்பட்டு ஆலாய் வளர்ந்திருந்த சூர்ப்பனகையின் மகனை வெட்டி வீழ்த்தினான். அவன் உதிரம் ஆருகப் பெருக் கெடுத்தோடியது.

சூர்ப்பனகை மோகம்:—இதனை அறிந்த சூர்ப்ப னகை அலறித் துடித்துக்கொண்டு ஓடிவந்தாள். வந்தவள் இலட்சுமணனைக் கண்டு காமமுற்றாள் தன் மகன் இறந்ததை மறந்த அவள் இலட்சுமணனிடம் ''நாடி என்னைத் தாவும் என்று நாணமில்லாது உரைத்தாள்.'' அவர் மௌனம் சாதிக்க அவள் இராமனையும் கண்டாள். அவள் மோகம் உடனே இராமன்மேல் சென்றது தன்னை மணந்துகொள்ள வேண்டுமென்று இராமனிடம் இரந்தாள். அவன்,

"என்பாரி இங்கே இருக்க, ஒருபேர்கள்
தன் பாரி தன்னை நான் விரும்பேன் போடி"—
என்ருன்.

அடங்காக் காமத்துக்குத் தண்டனை:-அவன் தன்னை அணையமாட்டான் என்பதனை அறிந்துகொண்ட அவள் மீண்டும் இலக்குமணனிடம் வந்து தகாத முறையில் உறவாடினுள். அவர் எரிச்சலடைந்து இந்த அடக்கமற்ற அரக்கிக்குப் பாடம் படிப்பிக்க எண்ணம் கொண்டு "பறபோடி என்று பம்பத்தன மூக்கரிந்தார்."

பழிக்குப்பழி! சூர்ப்பனகை திட்டம்:-மூக்கும் முலையும் முகமும் வடிவும் இழந்த அரக்கியான அவள் உடனே தன் உடன் பிறந்தவனை இராவணனிடம் ஓடிவந்து,

"காட்டி லொரு பெண் கமலத் திருமகள்போல்
நாட்டி லொவ்வாக் கன்னி நான் கண்டதில்லை
யண்ணே
உந்தனுக் காகுமென்று உற்றவளை நான் பிடித்தேன்
எந்தனுட மூக்கரிந்தார்".

என்று கூறி கோவென அழுது புலம்பினுள்

காமசூரன்:—இராவணனுக்கு தங்கையின் புலப்பம் பெரிதாகத் தோன்றவில்லை காட்டிலொரு பெண் கமலத் திருமகள்போல் இருப்பதேன்? அவள் என் வீட்டில் இருந்தால், தீராத விருந்தல்லவா? என்றெண்ணி மாமோகம் கொண்டு, காட்டில் உள்ள அந்த அற்ப மனிதர் இருவரையும் வென்று அந்த பெண்ணைக் கொண்டு வந்திடலா மென்றெண்ணி "நாட்டமுடன் *சீதை* நகையால் அழிவாய்" என்ற சிவனுடைய சாபத்தையும் மறந்து காட்டுக்கு ரதமூர்ந்து வந்தான்.

சிறையில் சீதை:—இவன் வந்தநேரம் இராமரும் அவரைத் தொடர்ந்து இலட்சுமணரும் மானின்மேல் மனம் வைத்துப் போயிருந்தனர்.

இராவணன் உடனே தேரிலே அம்மை தன்னைத் திருடிக்
கொண்டு ஏகினான். சீதையைக் கொண்டுசென்ற அரக்கன்
அவள் தன் மோகத்துக்கு இணங்காததால் கொடுஞ் சிறையி
லிட்டான்.

அம்மையை அரக்கன் சிறையெடுத்துக் கொண்டு போவ
தைக் கண்டு பாரிலே உள்ள பட்சி பறவைகளும் கதறி மி
அழுதன.

இராம இலட்சுமணர் துயரம்:— மானின்
பின்சென்ற இராம இலட்சுமணர் திரும்பிவந்து சீதையை
காணாமல் கலங்கினர்.

''மலங்கியே இலட்சுமணர் மண்ணில் புரண்டழுதார்
என்னே மணியே எனைப்பெற்ற மாதாவே
பொன்னே யழுதே பெற்றவளே என்றழுதார்"

இராமர்,

''அன்ன மயிலோடும் அன்றிற் குயிலோடும்
புன்னை மலரோடும் புலம்பி மிக வழுதார்.
பெண்ணமுதைக் கண்டீரோ எனப்
பிதற்றி மிகக் கேட்டழுதார்"

அனுமன் முதலியோர் வரவும் செய்தி கூறலும்:— இவ்வாறு இராம இலட்சுமணர் மிக வருந்தி
ஒரு சோலை நிழலில் வந்தமர இராமன் இலட்சுமணன் மடியில்
துயின்றான். அப்போது 'அஞ்சனையாள் பெற்ற மகன்
அனுமன்' அங்கு வந்தடைந்தான். அவனைத் தொடர்ந்து
சுக்கிரீவனும் சாம்பவனும் பிற வானர வீரர்களும் ஒவ்வொ
ருவராய் வந்து பணிந்து நின்றனர்.

அவ்விடத்தில். அம்மையை அரக்கன் தூக்கித் தேர்மீது
கொண்டு செல்லும்போது—

'கருடன் மிக மறித்துக் கேலியிட்ட ஞாயமெல்லாம்'
இராம இலட்சுமணர் கேள்விப்பட்டனர். தீ பாவியான

இராவணன் திருமகளை அவன் கோட்டையிலே சிறைவைத்திருப்பதனையும் அறிந்தனர்.

இராமனின் போர்த்திட்டம்:— உடனே இராமன் மிகவும் சினம்கொண்டான். இராவணனை வெல்லத் துணிந்தான். எழுபது வெள்ள வானரங்களையும் முழுவதும் வருத்தி ஒப்பமிட்டு எம்பெருமாள் விசுவகம்மாளனையும் அனுமனையும் அழைத்து இராவணனோடு போர்புரிய வேண்டும் என்றார்.

உடனே அனுமான், படைநடத்தி இலங்கை செல்வதற்கு வசதியாக மலைகளையெல்லாம் பெயர்த்தெடுத்து கடலுக்குள் பாலமிட்டான்.

அனுமன் தூது:— பின் இராமபிரான் அனுமனை இராவணனிடம் தூதாக அனுப்பினான். அனுமன் உடனே இலங்கை சென்று இராவணனைக் ''கண்டு முடுக்கிக் கருத்தழியத் தான்பேசி இலங்கையைக் குப்பையிடத் தீக்கொழுத்தி, மால்கொடுத்த கணையாழி மாது கையில் கொடுத்து வால் கொண்டு வீசி வனங்காவு தானழித்து'' — ஒரே குதியாய்க் குதித்துவந்து இராமர் பாதம் பணிந்து நின்றான்.

எல்லாம் உணர்ந்த இராமபிரான் இலங்கைக்குப் படை நடத்திச்சென்றார். இதைப்பார்த்து விபீஷணனும் ''அடைக்கலம் என்று அவர் பாதம் சேர்ந்தார்''.

இராவணன் வதை:— பின் இராம, இராவணப் போர் நடந்தது. அதில் இராவணன் ''படையெல்லாம் தோற்றுப் பரிசழிந்தான் கடகரியும் தோற்றுக் கையிழந்தான் அம்மானே''. அவனுடைய பத்துத் தலையும் பார்மீதில் அற்று வீழ்ந்தது.

இராவணன் குற்றுயிரும் குறை உயிருமாய்க் கிடக்கும் நேரம் இராமபிரானாக வந்த திருமால் அவனிடம், இராவணா உன் குலங்களையெல்லாம் நானே யுகம் யுகமாக அழித்து வருகிறேன். நீ ஆணவங்கள் பேசினாயே அம்பொன்றால்

அழிந்தனேயே, உன் அதிகாரமும் பலமும் ஆட்சியும் என்ன
யிற்று? திறம்போலத் தோன்றினாலும் மறம் திறமாகாது
அறமே திறமாகும். அறமழிய ஆண்டதனால் அறத்தா
நிலையழிய வேண்டியதாயிற்று'' - என்று கூறினர்.

இராமனை அவமதித்தல்:—உடனே இராவண
மிகுந்த சினம்கொண்டு திருமாலை அவமதிக்கும் முறையில்.

''ஏண்டா மழுப்புகிறாய் இராமனே கொல்லுவது
தம்பியெனப் பிறந்து சத்துருப்போல் தான்
சமைந்
என் பலங்களெல்லாம் எடுத்துரைத்தான்
உந்தனுக்
ஆகையால் நீ வென்றால் - அல்லாமல்
வெல்லுவையோ போ" - என இறுமாந்தான்.

இராமர் சபதம்:— உடனே மாயன் மிக வெகுண்
சரி இராவணா இன்னும் உன் ஆணவங்கள் சிறிதும் அழி
வில்லை.

ஒவ்வொரு யுகத்திலும் சாகும்போது உன் சாவுக்கு
ஒவ்வொரு காரணம் கற்பித்துக் கொள்கிறாய். இப்போது உ
தம்பியால் வென்றேன் என்கிறாய்.

ஆகையால் —

''பின்னொரு யுகத்திலே உனை விட்டகலாத
நூறு பிறப்புடன் பிறவி செய்து
இன்னொரு ஆளின் கையால்
இறந்திடச் செய்வேன் உன்னை" -

என்று சபதமிட்டா

இராவணன் அழிவோடு திரேதாயுகம் அழிந்தது.

6. துவாபர யுகம்

1. கஞ்சன் வதை

திரேதாயுகம் முடிந்தபோது அசுரனாகிய இராவணன் ''என் தம்பியாலே தான் நீ என்னைக் கொன்றாய் இல்லாவிடில் நீ என்னை வெல்லமுடியாது'' என இராமனாய் அவதரித்திருந்த திருமாலிடம் கூறியதால் சினமுற்ற மாயன் உடனே துவாபர யுகத்தினைப் படைத்திட வேண்டும் என சிவனிடம் வேண்டினார்.

துரியோதனாதிகள்:— மால் யோசனைப்படி சிவன் துவாபர யுகத்தினைப் படைத்தார். துவாபர யுகத்தில் கும்பகருணனைக் கஞ்சனாகவும் இராவணனை யுகக் கொடியவனான துரியோதனனாகவும் படைக்கக் கூறினார்.

முன், குரோணியைக் கூறிட்ட துண்டத்தில் ஒன்றினை எடுத்து நூற்றியொரு பங்குவைத்து அதில் முதல் துண்டைத் துரியோதனனாகவும் மீதித் துண்டுகளை அவன் தம்பியராகவும் படைத்தான். மேலும் துரியோதனாதிகளுக்குப் பகையாக நின்று — ''இன்னொரு ஆளின் கையால் அழிப்பேன்'' — என்ற சபதம் நிறைவேற அறங்காக்கும் பாண்டவரையும் படைத்தனர்.

பாண்டவர்:— பரதன், இலக்குவன், சத்துருக்கன், விபீஷணன், சாம்புவன் ஐவரையும் முறையே தருமாதிகளாகவும் முன்பு சீதைக்குத் தோழியாயிருந்த சடையில் பிறந்த திரிசடையைத் துரோபதையாகவும் வாயு பகவானை வசுவாசு தேவனாகவும் வாலியைக் கர்ணனாகவும் படைக்குமாறு கூறியருளினார். சிவன் அவ்வாறே படைத்தான். இதே நேரத்தில் அறம் நிலைநாட்ட ஐவருக்குத் துணையாகத் தான் நின்று, இன்னொருவன் கையால் உன்னை நான் வதைப்பேன் என முற்பிறவியில் இராவணனிடம் கூறிய சபதத்தினை நிறைவேற்ற

தான் கண்ணனாகி அவதரிக்க உளம் கொண்டார். இலட்சுமி உருக்குமணியாக அவதரிக்க அருளினார்.

மாயன் சூழ்ச்சி:— கிருஷ்ணாவதாரத்திற்காக அப்போது ஒரு சூழ்ச்சியை மாயன் கையாண்டார். தேவருலகத்துப் பெண்களாகிய தெய்வகி, உரோகிணி என்ற இரு பேரும் கங்கையில் புனித நீராடிவிட்டு மேலோகம் செல்ல வழிநடந்தனர். அப்போது வழியில் மாயன் சிறு மதலை வடிவெடுத்து அழுதுகொண்டு கிடந்தார்.

இவ்வழுகைக் குரல்கேட்டு 'நெய்நிதியக் கன்னி நெடிய விழிரோகிணி'யும் உடன்வந்த அவள் அக்காள் தெய்வகியும் குழந்தை கிடக்கும் இடத்திற்கு வந்து குழந்தையைக் கண்டனர்.

> ''காலில் சிவசக்கரமும் கையில் மால் சக்கரமும்
> மேலில் சக்தி சக்கரமும் விழிசரசு சக்கரமும்
> வாயு பகவான் வடிவு மிகப்போல
> ஆயும் பலகல்வி ஆய்ந்த அச்சுதர்போல்''

—மதலை கிடப்பதைக் கண்டு இதுபோல் குழந்தை எங்குமே கண்டதில்லை என அவர்கள் கொண்டாடிக் குழந்தை தொடர்ந்து அழுதுகொண்டே இருந்ததால் 'வண்டு சுற்றும் மெல்லியர்' இருவரும் குழந்தையை எடுத்து மார்போடணைத்துப் பாலூட்டி கைலைக்கு மகவைக் கொண்டுபோக முடியாததால் அங்கே கிடத்திவிட்டுப்போய்விட்டனர்.

சிவலோக மாதர்க்குப் புதுப்பிறவி:—குழந்தைக்கு அமுதூட்டிய மகளிர் இருவரும் நேரே கைலையில் சிவன் முன்வந்தனர். இவர்கள் செயலையறிந்த சிவன் அருளால் மீண்டும் அவர்கள் மார்பில் பால் இளகிப்பாய அதைச் சாட்சியாக வைத்துச் சிவன் அவர்மேல் குற்றம் சாட்டி அவர்கள் இருவரையும் அழித்து மறுபிறவி செய்ய உளங்கொண்டார்.

இதை உணர்ந்த இருதேவ மகளிரும் தமக்கு இனி பிறவியே வேண்டாம் எனத் துதித்து மன்றாடினர்.

''அல்லாய்ப் பகலாய் அருளாய் நிற்போனே,
ஆதிப் பொருளே அனாதித் திருவுளமே,
எட்டாப் பொருளே எளியார்க்கு எளியோனே,
முட்டாத செல்வமே முதலே முழுமணியே,
பெண்ணும் ஆணாகிப் பிறப்பில்லா நின்றோனே,
கருவி தொண்ணூற்றாறும் காவலைந்து பேருடனே,
உருவு பிடித்து உயிர்ப்பிறவி செய்தோனே,
மௌவ் வொவ்வு மாகி வருந்தியவ்வு மொவ்வாகி,
செவ்வவ் வாய்நின்ற சிவனே சிவமணியே"......

இனி எங்களுக்குப் பிறவியே வேண்டாம் என மன்றாடினர்.

அதற்குச் சிவன் இசையாமல் போகவே மண்ணுலகில் பெண்ணாகப் பிறந்தால் ஏற்படும் துயரங்களையெல்லாம் எடுத்துக்கூறி தங்களை எப்படியும் பிறவி செய்தே தீருவதென்றால் கைலை பூமியில் உலவும் தெய்வப் பசுப்போலவாவது பிறவி செய்திடுங்கள் எனக் கெஞ்சினர்.

அதற்கு சிவன் அவர்களிடம், 'பெண்களே மாயன் துவராயுகத்தில் போய்ப்பிறக்க உபாயமாய் உங்களையும் அன்னை முறையாய் ஆக்க நினைத்திருக்கிறார். திருமால் அப்படி நினைத்தால் நானென்ன செய்யமுடியும்? நீங்கள் திருமாலின் தாயராகவே பிறக்கப் போகிறீர்கள் எனவே கவலை வேண்டாம் என்றுகூறி மேலும் நீங்கள் காட்டில் கண்டு பாலளித்த குழந்தையின் அழகை ''வாயு மகா தேவன் வடிவென்ற இச்சையினால்'' வாயுவின் அவதாரமாகிய வசுவாசுதேவன் உங்கள் கணவனாக மண்ணக வாழ்வில் வருவான் என்றும் கூறி அவ்விரு மாதரையும் கஞ்சனுக்கு நெருங்கிய உறவில் தங்கையராகப் படைத்து அவனோடேயே வளருமாறு செய்தார்.

கஞ்சன் தங்கையர்: —முன் பிறவியில் கும்பகருணனாக இருந்த அரக்கன் இப்போது கஞ்சனாகப் பிறந்து மதுரா

புரியிலிருந்து நாடாண்டான். அவன் தங்கையராகத் தெய்வ கியும் உரோகிணியும் பிறந்துவந்து உடன் வாழ்ந்தனர்.

கஞ்சன் செயலும் சையோகன் சாபமும்:-

கஞ்சன் மிகக் கொடியவன் அவன் 'மாலை நினையான் மறையை மிக நினையான், ஆலயங்கள் கோயில் அழிந்த மடம் வையான், ஆவுதனை யடைத்து அதற்கிரைகள் போடான்' அப்படி இருக்கும் நாளில் ஒரு நாள்.........

கஞ்சன் தன் தங்கையர் இருவரையும் உடன் கூட்டிக் கொண்டு காட்டில் வேட்டையாடி வந்தான். அப்பொழுது அக்காட்டில் தவம் செய்யும் கையோக முனிக்கென்று வாய்த்த மாம்பழம் ஒன்றினைப் பறித்துத் தன் தங்கையருக்குக் கொடுத் தான். இதையறிந்த சையோக முனி வெகுண்டு ''மங்கை யர்க்கு வந்த மகனால் அழிவை'' யென்று கஞ்சனுக்குச் சாபமிட்டார்.

இச்சாபத்தினைக் கேட்டு அரண்மனைக்கு வந்த கஞ்சன் மிக அஞ்சி தன் சோதிடவல்லுனனான 'சோதிரிசி' யை அழைத்து சையோக முனியின் சாபம் பற்றிக் கேட்டான். சோதிரிசி சையோக முனிவன் வாக்கு மெய்மையையு சோதிடப் பலனையும் உணர்ந்து ''அவன் இட்ட சாபம் பலி கும் நீ உன் தங்கை மகவாலேயே அழிவாய்'' என்று உறு செய்தான்.

கஞ்சன் திட்டமும் நாரதர் யோசனையும்

இதைக் கேட்டு அஞ்சிய கஞ்சன் தன் தங்கையர்க்கு ம முடிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்து அவர்களைக் கன்னி களாகவே இருக்க வைத்தான்.

இதையறிந்த நாரதர் அப்பெண்கள் மேல் இரக்கமும் கண்ணன் அவதாரத் தொடக்கத்தில் விருப்பமும் கொண் கஞ்சனிடம் வந்து ''வாழாத மங்கையரை வைத்திருந்தா இராச்சியத்தில், தர்மம் தலைகெடுங்காண் சாத்திரத்துக் ஏராது, மானம் வரம்புகெட்டு மநுநீதி தானழிந்து, ஊன ம

அக்குடும்பம் உலகத்துக் கேராது, நாட்டை அழிக்குமடா நல்ல கன்னி காவல் வைத்தால்''

என்று அவனுக்கு அறிவுறுத்தி, 'அவர்களுக்கு மணம் முடித்து விடுவதுதான் சிறந்தது. திருமணம் முடிந்து அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைக் கொன்று விட்டாலும் கூடப் பரவாயில்லை'—என்று கூறக் கஞ்சனும் அதற்குச் சம்மதித்து தங்கையர்க்கு மணம் நடத்தத் துணிந்தான்.

வசுதேவன் திருமணம்:— அவ்விருவருக்கும் மாப்பிளை தேடி இறுதியில் கஞ்சன் தனக்குப் படிப்பு சொல்லித் தந்த ஆசிரியருக்கே தன் தங்கையரைக் கொடுத்திடலாம் என நினைத்து ஓலைவிட்டான். ஓலைகண்ட வசுதேவன் விரும்பி வந்து தெய்வகியையும் உரோகிணியையும் மணந்து அழைத்துச்சென்று இன்பமுடன் வாழ்ந்தான்.

தங்கையர்க்குத் தந்த துயர்:— இரு மங்கையரும் வயிற்றில் கருத்தாங்கி மகவுகள் வளர்ந்தன இதையறிந்த கஞ்சன் இருவரையும் சிறையில் வைத்தான் அவர்கள் அழுது புலம்பினர் இறைவனிடம் முறையிட்டனர்.

'மூவாதி முத்தன் — சித்தர்க்குச்சித்தர் பக்தர்க்கு நித்தர்' ஆகிய நெடுமாலை வேண்டினர். ''கிட்டரொர்க்குக் கிட்டாத கிருஷ்ணு, உச்சிக் சுளியே உம்மென்ற எழுத்தோனே, அச்சுச் சுளியே அம்மென்ற எழுத்தோனே, அச்செழுத்தும் எட்டெழுத்தும் ஆதியோ வென்றெழுத்தும், நெஞ்செழுத்தும் எட்டெழுத்தும் நீயாகி நின்றேனே, என்றொருபத் தென்னிரண்டு இவ்வே நடுவாக, ஒன்றெழுத்தாய் நின்ற உடைய பெருமானே'', எங்கள் சகோதரனைய் வாழ்ந்து எங்களை இப்போது வாழாமல் அழிக்க முயலும், 'முத்திகெட்ட புத்தியுள்ள மூர்க்கன்' கொடுமைகளைத் தவிர்த்து எங்களை வாழவிடும் என்று கெஞ்சி மன்றாடினர்.

பிள்ளைக் கொலையாழி:— இது முதல் பலமுறை தெய்வகி ரோகிணியோர்க்குப் பிறந்த பிள்ளைகளைக் கஞ்சன்

கொன்று வந்தான் கஞ்சன் கொடுமையால் தேவரும் வருந்தினர். ஒவ்வொரு முறையும் கஞ்சன் வசுவாசன் மக்களைக் கொன்று விடவே தேவர்களும் — இலட்சுமி முதல் முனிவர் மக்கள் அனைவரும் இறைவனைத் தொழுதிறைஞ்சினர். இக் கொடுமை நீங்க வேண்டினர். ''கண்ணாகி மூக்குக் கருணைகராகி, மண்ணாகி வேத மறையாகி நின்றோனே, மெய்யனுக்கு மெய்யாய் மேவி இருப்போனே, பொய்யனுக்குப் பொய்யாய்ப் பொருந்தி இருப்போனே, செல்வத்திருவாய் செவ்வாகி நின்றோனே, கல்வித் தமிழாய்க் கனபொருளாய் நின்றோனே. ஆயனே எங்கள் ஆதி நாராயணரே, மாயனே கஞ்சன் வலிமைதனை மாற்றுமையா'' — என்று தேவர் முறையிட்டனர்.

இலட்சுமி முறையீடு:— இலட்சுமி தேவியும் தன் நாயகனிடம் வந்து ''என்னைப்போல் பெண்ணல்லவோ இவன்தான் இடும் முறையம், வன்னமுள்ள மாலே மன திரங்கிக் காருமய்யா'' - என்று வேண்டினாள்.

உடனே திருமால்,

''வந்து பிறப்பேன் காண் மாபாரதம் முடிக்க
நந்தி குலம் வாழ நாம் பிறப்போம் கண்டீரே
சாரமிலா கஞ்சன்தனை வதைத்துப் பூமியுட
பாரமது தீர்ப்போம் பாரதமும் முற்றுவிப்போம்''.

என்று அவளுக்கு உறுதிகூறி சங்கு வண்ண மல்லோன் இலட்சுமியை உருக்குமணியாய் பிறக்குமாறு அருளி ''உங்களுக்கு நல்ல உதவிமிகச் செய்வதற்கும், அங்குவந்து தோன்றி ஆயருடன் வாழ்வேன்'' என்று உருக்குமணியாகப் பிறக்கப் போகும் இலட்சுமிக்கும் உறுதியளித்தார்.

கிருஷ்ணாவதாரம்:— சிவன் கூறியபடி மால் தன் வயிற்றில் வந்து பிறக்க வேண்டுமென்று தெய்வகி தவமிருந்தாள். வியாகரரும் மாலிடம் மேருமலையில் எழுதியுள்ள யுகக் கணக்குப்படி தாங்கள் கிருஷ்ணாவதாரம் எடுக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது என்று கூறலாயினர். இப்போதும்

வயிற்றில் மகவிருந்ததால் இரு தங்கையரையும் மைத்துன ரையும் கஞ்சன் சிறையிலடைத்தான்.

வாணன் என்ற வாண நரபாலன் கஞ்சனை அழிக்க, செந்தமிழ் சேர் மாயன் படை வீரரான பச்சைமால், சிறையி லிருந்த தன்னிகரில்லாத தையல் தெய்வகன்னியாள் வயிற்று மகவாக உருவாகிப் பிறந்தார். அதே நேரத்தில் அயோதை வயிற்றில் பகவதி மகளாகப் பிறந்தாள்.

கண்ணன் பிறந்த உடன் சிறைக் கதவுகள் தகர்ந்தன. தாய்தந்தையர் விலங்குகள் உடைந்து சிதறின. அவர்கள் பிறந்த குழந்தைகளோடு புறப்பட்டு இல்லம் அடைந்தனர்.

குழந்தை மிகமிக அழகாக இருந்தது. அதைக்கண்டு தெய்வகி மிக மகிழ்ந்தாள். ''கண்ணனே சீவகனே கரிய முகில் மாயவனே வண்ணனே தெய்வேந்திரனே' என்று — ஏத்திப்பாடினாள்.

அவள் உள்ளத்தில் ஒரு பெரிய அச்சம் பிறந்தது. கஞ்சன் வந்து இம்முறையும் மகனைக் கொன்றுவிடுவானோ என்றெண் ணிப் புலம்பினாள். இக்குழந்தையை எப்படியும் காப்பாற்றித் தீரவேண்டும் என்று உறுதிகொண்டு வசுதேவன் தன் மகனை எடுத்துக்கொண்டு அயோதை இல்லம் சென்று அவள் மகளைப் பெற்றுக்கொண்டு கண்ணனை அவளிடம் கொடுத்துவிட்டு வந்து விட்டான்.

கஞ்சனின் தோல்விப்படலம்:— தன் தங்கை யர்க்குக் குழந்தைகள் பிறந்திருப்பதை சேவகரால் அறிந்த கஞ்சன் விரைந்து வந்தான். தொட்டிலில் கிடந்த மகவைக் கண்டான் அதைக் கொல்ல நினைத்துத் தொட்டிலில் கிடந்த மகவைத் தூக்கினான். மகவை அசைக்கவே அவனால் முடிய வில்லை. அப்போது தொட்டிலில்கிடந்த குழவியாகியபகவதி ''என்னை எடுத்துக் கொல்ல உன்னால் இயலாது உன்னை வதைக்க உற்ற எங்கள் அச்சுதரும் ஆயர்பாடியினில் வளருகிறார்''.........என்று கூறினாள். இதைக்கேட்ட கஞ்சன் மேலும் கலக்கமடைந்தான்.

கண்ணன் அயோதை இல்லத்தில் — ஆயர்பாடியில் வளர்ந்து வந்தான். உடனே கஞ்சன் தன் ஏவலரிடம் ஆயர் பாடிக்குச் சென்று தனக்குப் பகையாக வளரும் மகவைத் தேடிக்கொண்டு வருமாறு ஆணையிட அவர்கள் சென்று தெய்வகி போன்ற சாயலில் உள்ள ஒரு குழந்தையைக் கண்டு வந்து கஞ்சனிடம் கூறினர்கள்.

குழந்தைமேல் படைவிட்டான் கோழை: உடனே கஞ்சன் முதலில் "மூரி" என்ற பூதத்தினை ஏவிக் கொல்லப் பணித்தான். கண்ணனுை குழந்தை மூரியைக் கொன்றது. பின் பல அரக்கர்களை அனுப்பினன். கண்ணன் அவர்களையும் கொன்ருன் பின் கண்ணன் குழலூதி பசுக்களை மேய்த்துத் திரியும் காட்டில் வைத்தே அவனைக் கொன்றுவிட வேண்டுமென்று "**காளியன்**" என்ற அரக்கனை ஏவினன். கண்ணன் காளியனையும் கொன்ருன்.

நந்தனுக்குத் தூது:—எப்படியும் கண்ணனைக் கொல்ல வேண்டுமென்று எண்ணிய கஞ்சன் பின் ஒரு தூது வனை கண்ணனின் வளர்ப்புத் தந்தையாகிய நந்தனிடம் அனுப்பி பிள்ளையை மதுரைக்குக் கொண்டு வருமாறு கட்டளை யிட்டான்.

கஞ்சன் வதை:—இதையறிந்த கண்ணன் தன் துணைவர்களோடு யாருக்கும் சொல்லாமல் மதுரைக்குப் பயண மாகி கஞ்சனோடு நேரில் போரிட்டு 'கஞ்சன் குடலைக் கண்ணி யறத் தான் பிடுங்கி வெஞ்சினத்தால் விட்டெறிந்தார் திக்க திலே' பின் மதுராபுரி ஆட்சியை **உக்கிர சேனன்** என்பவ னிடம் ஒப்படைத்து விட்டுத் திரும்பும் போது கஞ்சனின் மாமனுன **சராசந்தன்** போருக்கு எழுந்தான். சராசந்தன் பீமனுல் சாகவேண்டியவன் என்று பண்டை விதியிருப்பதை நினைந்து மாயன் அவனைக் கொல்லாமல் விட்டு விட்டு கட லுக்குச் சென்று துவரம் பதியில் அமர்ந்தார்.

உருக்குமணி திருமணம்:—இவ்வேளை மாலுக் கென்றே மண்ணில் பிறந்த உருக்குமணியை ஒரு அரசனுக்கு

மணம் செய்விக்க அவள் தந்தையாக இருந்தவன் ஏற்பாடுகள் செய்தான். இதை நாரதர் நாயகனை திருமாலுக்குக் கூற உடனே அவர், ''மேகத்திருமாலை முக்கோடிப் பொன்னதுக்கு, வேகத்தாலுண்டு பண்ணி விரைவாய்க் கொடு நடந்தார்'' அத்தாலியை உருக்குமணிக்கு அணிவித்துத் தன் உரிமை மனையாளாக்கி பாற்கடலுக்கே அழைத்துச் சென்றார். அதைத் தொடர்ந்து மனோன்மணி முதலிய மாதர் மணிகளையும் மணம் புரிந்தார்.

2. துரியோதனன் வதை

இதற்கிடையில் மண்ணில் பிறந்திருந்த பாண்டவரும் துரியோதனாதிகளும் பலவித வித்தைகளும் கற்றுத்தேர்ந்தனர். துரியோதனன் அத்தினபுரத்திலும் பாண்டவர் 'தாய் நாடு வானத் தமிழ்க் குரு நாட்டில்' குரு நகரிலும் இருந்து நாடாண்டனர்.

சகுனி சூதாட்டமும் பாண்டவர் வன வாசமும்:—பாண்டவர் அற ஆட்சி கண்டு பொறாமை கொண்ட துரியன் ''பழுது சூதாடி வென்று வஞ்சகமாய்ப் பாவி வனத்தில் துரத்திவிட, வனவாசம் தன்னில் வந்திருந்து ஐபேரும் இனமானது போலே இருந்தார்''

சூரிய பாண்டம்:—அப்போது நாரதர் கண்ணனிடம் வந்து துரியன் அழிவுகாலம் நெருங்கி விட்டதை எடுத்துக் கூற கண்ணனும் நாரதரும் காட்டுக்குச் சென்று தருமராதியைக் கண்டு

''பதறாதே பாண்டவரே பத்தியுள்ள பஞ்சவரே
கதறாதே ஐவரையும் காத்தருள்வோம்''-

என்றுரைத்தார்.

அப்போது ஐவரும் தேவியும் அண்ணலை வணங்கி நிற்க தருமர் கண்ணனிடம் தங்களுக்கு அன்னம் படைக்க வேண்டுமென வேண்டினார்

உடனே திருமால் சிவனை நினைத்து சூரியபாண்டம் என்ற பாத்திரத்தைப் பெற்று சிவனிடமிருந்தே ஒரு அரிசியையும் வருத்தித் தருமரிடம் இந்த மெய்ப்பாண்டத்தினையும் அரிசையையும் கொடுத்து,

''என்பேர் அரிதான் எனை நினைந்து பாண்டமதில்
அன்பரே நீரை அது நிறைய விட்டவுடன்
என்பேர் அரியை எடுத்ததில் இட்டதுண்டால்
அன்பாக எல்லோர்க்கும் அமுதாய் வளரும்''

—என்றார்.

தருமன் அவ்வாறே செய்ய அமுது வளர்ந்தது அனைவரும் உண்டு மகிழ்ந்தனர்.

கண்ணன் தூதும் பாண்டவர்க்குத் துணை புரிதலும்:—முன்பு துரியன் கூறியபடி பாண்டவர் வன வாசம் செய்தனர். பன்னிரண்டு ஆண்டுகளும் கழிந்த உடன் அவர்களுக்காக மாயன் தூதுசென்றார். 'தாழ்போற புத்தி தான் கொண்ட அரவக் கொடியோன், எள் போல் இடங் காண் ஈயேன்' என்றுரைத்தான்.

உடனே மாயன் துரியனையும் அவன் கூட்டத்தாரையும் அழிக்கக்கருதி, ''வன்ன விசயனுக்கு வாளிபல கொடுத்து, வீமனுக்கு நல்லவிசை தண்டாயுதம் கொடுத்து, தருமன் சகாதேவர்க்கு சக்தி சூலங் கொடுத்து, நகுலனுக்கு ஆயுதமும் நல்ல பரிகொடுத்து, புகலான தர்மருக்குப் பொறுமை அரி கொடுத்து, மங்கை துரோபதைக்கு வாய்த்த கனல் கொடுத்து'' —பாரதப் போரைத் தொடங்கி விட்டான்.

போரில் துரியன் படை முழு அழிவு கண்டது. எல்லோரும் இறக்க இறுதியில் 'வெல்லாரும் வெல்லா, விச கர்ணனும்' மாண்டதினால் சொல்லொணுத் துயருக்காளானான் துரியன்.

துரியன் வீமன் போர்:—இறுதியில் துரியன் போர்க்கோலம் பூண்டு போரில் குதித்தான். அவனை பீமன்

எதிர்த்தான் தமிழ் வீமன்—துடி வீமன்—மரியாதை வீமன்—அருட்பலம் காட்டினான். அவனை வெல்ல முடியாதென உணர்ந்த துரியன் சூழ்ச்சியால் வென்று விட எண்ணி வீமா, இப்படியே போர் செய்தால் நம்மில்யாரும் தோற்பதில்லை. ஆகவே நாமிருவரும் உயிர்ப்பலம் இருக்கும் இடமுரைத்துப் போரிடுவோம்''—என்றான்.

வீமன் சம்மதித்துத் தனக்கு உயிர்ப்பலம் இருக்கும் இடத்தினைக் கூறினான். துரியன் உண்மையைக் கூறாமல் பொய் கூறினான். பின் நடந்த போரில் பீமன் துரியன் கூடியபடி உயிர்ப்பலம் தங்கும் இடத்தில் அடித்தான் அவன் விழவில்லை. அவன் மாறி பீமனை அடித்தான். பொய்யுரையா பீமன் உண்மையான இடத்தினைக் கூறியதால் அடிப்பட்ட உடன் மயங்கினான். 'திலர்த முள்ள மாயனை' எண்ணினான். அந்நேரம் மாயக் கண்ணன் துரியனுக்கு உயிர்ப்பலம் வலது தொடையில் என்பதைக் கண்ணால் குறித்துக் காட்ட ''அடித்தானே பீமன் அதுதான் குறியெனவே''. உடனே துரியன்—''மூடற்ற மாமரம்போல் முறிந்து கீழ் தான்விழுந்து, கூடற்ற உயிர் போல் குலைந்து வீழ்ந்தனன்.''

கண்ணனின் நினைவு கூர்தலும், துரியனின் இகழ்ச்சி மொழிகளும்:—ஒவ்வொரு யுகத்திலும் வீண் வம்பு பேசித் தன் தோல்வியை ஒப்புக்கொள்ளாத இவ்வரக்கனிடம் இப்போது திருமால் நெருங்கி அவன் அழிவை நினைவுறுத்தி தான் கூறியதை நிறைவேற்றி விட்டதாகக் கூறினான். அதற்கு துரியன் 'இப்போது என்னை வீமனே கொன்றான் உன்னால் ஆகாது'—என உரைத்தான். சினம் கொண்டார் செயராமன்.

கண்ணன் சபதம்:—உடனே அவர், ''உன்னை இன்னமிந்த உலகிலொரு பிறவி, சின்ன பின்னமாகச் சிரசொன்றாய்ப் படைத்து. அறிவு புத்தியோடு ஆணவங்கள் தன்னோடும், செறியும் கலையோடும் சிறப்போடும் தான் படைத்து, என் பேரிலன்பு இருக்க ஒரு சாஸ்த்திரமும் தன் போத மறியத் தான்படைத்து என்பின் நின்றவனால் பேசாதே மாழவைப்பேன்'' என்று கூறினார் துரியன் உயிர்போனது.

கர்ணனுக்கு மோட்சம்:-பின்பு களத்தில் இறந்து கிடந்த கர்ணனுக்கு மோட்சம் கொடுப்பதற்காக மாயன் அவ் விடம்வ ந்தார், உடனே வியாகரர் அங்குவந்து, 'இந்த பாவிக்கா மோட்சம் அருள்வது'? எனக் கேட்டார். அதற்கு மாயத்திருமால் ''இவன் முற்பிறவியில் வாலியாய்ப் பிறந் தவன், இராவணனோடு கூடியிருந்தவன் இராமசரத்தால் சாகும்போது என்னைப் பணிந்தான். ஆகையினாலும்:

''பாற்கடலில் அமுது கடைய என்னை ஏவல் கொண்ட மாயவரே இராவணனைக் கொல்ல என்னை ஏன் ஏவக் கூடாது?'' என்று உண்மை நெஞ்சுடன் கேட்டதாலும்;

பாண்டவர்மேல் வாக்களித்தபடி ஒரு அம்புக்குமேல் விடாத உத்தமன் ஆகையாலும் இவனுக்கு மோட்சமீய வேண்டும் என்று கூறி மோட்சமளித்தார்.

பாண்டவர் ஆட்சியும் பரந்தாமன் ஸ்ரீரங் கப் பயணமும்:—எல்லை வைத்த பாரதப்போர் முடிந்தது. பாண்டவர் நாடாண்டார். மோட்சத்திறவோன் ஆகிய மாயன் பாண்டவர் வலிமையும் உலகுக்குத் தீங்கென் றெண்ணி அவர் வலிமையைக் குறைத்து ''நூல்படி நடந்து வாரும்'—எனக் கட்டளையுமிட்டார். துவாபர யுகத்தில் எடுத்த கிருஷ்ண சடலத்தைப் பருவதா மலையில் போட்டுவிட்டு 'சத்' உருவாய்ச் சீரங்க மாபதியில் சென்றிருக்க எண்ணிப் புறப் பட்டுச் சென்றார்,

3. சான்றோர் பிறப்பு

கண்ணன் பயணம்:—கண்ணன் கஞ்சனையும் துரி யனையும் அழித்துத் துவாபர யுகத்தில் அறத்தை நிலை நாட்டிப் பாண்டவர்கள் நாடாளும் வாய்ப்பினை ஏற்படுத்தி ஸ்ரீரங்கம் புறப்பட்டுப் போகும் வழியில் அரிகோண மலைக்கு வந்தார்.

அமுதகங்கையில் ஆடிய மங்கையர்;—அரிகோணமலை அற்புதங்கள் பல நிறைந்த மலை. இந்த

மலையில் **அயோக அமுதவனம்** என்ற ஓர் அழகிய வனமிருக்கிறது. அங்கு எப்போதும் முனிவர் பலர் தவமிருப்பர்.

இந்த வனத்துக்குக் கிழக்கே மிகுந்த வனம் சூழ்ந்த **புட்டாபுரம்** இருக்கிறது. மேற்கே பூங்கா அமைந்துள்ளது. வடக்கே **ஸ்ரீரங்கம்** இருக்கிறது. தெற்கே **திரிகோணவனம்** பரந்து கிடக்கிறது.

இந்த அயோக அமுதவனத்தில் **அமுதகங்கை** ஓடுகிறது. இதில் தேவமாதர்கள் நீராட வருவது வழக்கம் இங்கே சிவனுக்குச் சேவைச் செய்யும் (1) **மரகதம்** (2) **வல்லி** (3) **வள்ளி** (4) **சலிகை** (5) **சரகதக் கன்னி** (6) **சரிதை** (7) **அரிமடவை** என்ற ஏழு கன்னியரும் தினமும் வந்து நீராடி கங்கையைத் திரட்டி எடுத்துச்சென்று சிவனுக்கு நீராட்டுவது வழக்கம்.

மாயச் சன்னியாசி:— அன்றும் அவர்கள் வழக்கம் போல நீராடி கங்கை திரட்டவரும்போது திருமால் ஒரு சன்னியாசிபோல அங்குவந்து, இன்று கங்கையைத் திரட்டி எனக்கு நீராட்டுங்கள்' என அவர்களிடம் கூறினார். அதற்கவர்கள் ''எருதேறி நித்தம் இறவாதிருக்கின்ற, ஒருவனுக்கேயல்லாது ஊழியங்கள் செய்வதில்லை'' என்றுகூறி மறுத்து விட்டனர். இதைக்கேட்ட சாரங்கனாகிய கண்ணபெருமான் நீங்கள் கங்கையைத் திரட்டுவதைப் பார்ப்போமென அறை கூவி சான்றோரைப் பிறப்பிக்க இதுவே தக்க நேரம் என மனங்கொண்டார்.

ஏழுலோகத்து வித்து:— உடனே சிவலோகத்தில ஒரு வித்தும், சத்திலோகத்தில் ஒருவித்தும், வைகுண்ட லோகத்தில் ஒரு வித்தும், வேதாலோகத்தில் ஒருவித்தும், சண்டன் லோகத்தில் ஒருவித்தும், இராமன் லோகத்தில் ஒரு வித்தும், இந்திரலோகத்தில் ஒருவித்துமாக ஏழு வித்துக்களை எடுத்துக்கொண்டு இவ்வித்துக்களை இவ்வேழு கன்னியரின் கர்ப்பத்திலும் செலுத்திச் சான்றோரைப் பிறப்பிக்க எண்ணி கங்கைக் கரையடைந்து நின்றார்.

மாயநெருப்பில் மங்கையர் காய்ந்தனர்:— அப்போது ஏழு கன்னியரும் நீராட கங்கையில் இறங்கினார்கள். குளிர்தாங்க முடியாமல் நடுங்கிக் கரையேறினார்கள். அப்போது மாயன் அங்கே தீயாய் வளர்ந்து நின்றார். அவர்கள் அங்கே தீயாய் வளர்ந்துநின்ற மாலை அணைத்தனர். அணைய ஏழு வித்தும் ''உன்னித் திருமால் ஓங்கார மோகத்தால், மங்கையேழு பேர்க்கும் வயிற்றிலுற்ற தம்மானே'' ஏழு வித்துக்களும் திருமால் மூலம் ஏழு மங்கையரின் வயிற்றிலும் கர்ப்பமாக வளர்ந்து அவ்விடத்திலேயே ஏழு மகவாய்ப் பிறந்தது.

கன்னியர் கடுந்தவம்:— கனலை மிகக் கண்டா விகற்பினைக் கண்ணனுக்கே காணிக்கையிட்டுப் பரிசாக ஏழு பிள்ளைகளைப்பெற்ற ஏழு மடவாழும் இனி சிவலோகம் செல்வது சிறப்பல்ல என்று முடிவுபண்ணி இங்கே அனலாய் நின்றது கண்ணனே என்பதுணர்ந்து பிள்ளைகளைக் கண்ணால்கூட எட்டிப் பார்க்காமல் இப்பிள்ளைகள் பெரும்பேறு எய்திடவும் இவர்களை எமக்குத்தந்த சன்னாசி உருவில்வந்த சாரங்கமாயன் தங்களை மணக்கவும் வேண்டுமென நிச்சயித்து தெற்கு முகமாய்த் தேவி ஏழுபேரும் தவம் மேற்கொண்டனர்.

மங்கையர்கள் தவம் மேற்கொண்டதால் கொடுத்த பிள்ளையை மாயன் தானே எடுத்துக்கொண்டுவந்து பிள்ளைகளை யாரிடம் கொடுத்துவைப்பது? அமுதூட்ட யாது செய்வது? என்று யோசித்தார்.

பாலருக்குப் பால்:— அந்த நேரத்தில் தேவேந்திரனின் பசுக்கள் அங்கே மேயக்கண்டு சீங்குழலை எடுத்து ஊதினான். உடனே பசுக்கள் மாயனிடம் வந்து நிற்க அவைகளிடம் 'சங்குதனில் பாலுமிழ்ந்து தருக' வென மாயன் கேட்க அவை அவ்வாறே கொடுத்துச் சென்றன.

இவ்வாறு தேவேந்திரன் பசுக்கள் திருமாலின் பாலர்க்குத் தினமும் பால் கொடுத்து மீள்வதால் அவற்றின் கன்றுக்குக் கூட பால் இல்லாமலானது. இதையறிந்த இந்திரன் இப்படிப் பால் கறந்துவிட்டு விடும் காட்டுத் திருடனைக் கண்டு போரிட்டு வெல்ல படையுடன் காட்டுக்கு வந்தான்.

இந்திரன் போர்க்கோலம் பூண்டுவர மாமுனிவனைக் காட்டில் நின்ற மாயன் ஒரு சூலத்தை அவன்மேல் எறிந்தார். சூலத்தின் வலிமைகண்ட இந்திரன் 'யாரோ வெல்ல முடியாதவர் இவர்' என உணர்ந்து திரும்பிப்போய்விட்டான்.

தேவேந்திரன் பசுக்களில் பாலுண்டு சான்றோர் வளர்ந்தனர். இனி பிள்ளைகளை யாரிடம் கொடுத்து வளர்க்கச் செய்யலாம் என்று திருமால் சிந்தித்தார்.

காளிக்கு சிவன் கட்டளை:— அக்காலத்தில் சிவபெருமான் புட்டாபுரம் காளியை அழைத்து நீ தக்கனை அழித்துவரவேண்டும் என்று ஆணையிட்டார். ஆண்களால்கூட அழிக்க முடியாத வரம்பெற்ற தக்கனை அழிக்கப் பூணாரம் பூண்டதன்னைச் சிவன் ஏவியவுடன் காளி, ''என்னோடு உதவிக்கு வர எனக்கு வீரப் புதல்வர்களைத் தாரும்'' — எனக் கேட்டாள்.

உடனே சிவன் ''மரித்துப் பிறக்காத மாகாளியே உனக்கு, தரித்துப் பிறக்கத் தகாது'' ஆகையால் நீ திருமாலை நோக்கித் தவம் மேற்கொள்வாயாக'' என்று ஆலோசனைகூறி நீ அவ்வாறிருந்தால் அவர் தன் மக்கள் எழுவரையும் உனக்குத் தருவார் என்றும் கூறினார்.

காளி தவம்:— உடனே காளி தவம் மேற்கொண்டாள். தவத்தில் மால் தோன்றி என் குழந்தைகளை நீ பெற்றால் இக்குழந்தைகளுக்கு நீயே முழுப்பொறுப்பு. இவர்களுக்கு ஏதேனும் குறை நேர்ந்தால் நான் உன்னையே தண்டிப்பேன். இதற்கு ஒப்புக் கொண்டு நீ சத்தியம் செய்து தந்தாலே நான் குழந்தைகளைத் தருவேன் என்று கூற அவளும் அவ்வாறே உறுதி செய்து குழந்தைகளை ஏற்றாள்.

பாலருக்குப் பெயரிடுதல்:— பின் குழந்தைகளுக்குப் பெயரிடுவதற்கென தேவர்சங்கம் கூடியது. திருமால் குழந்தைகளைச்சிவன் முன் வைத்துத் தாங்களே முதல் பெயர் இடவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அப்போது இவ்வெழுவருக்கும் தனித்தனிப் பெயர்களை யிட்டு இவர்களைப் பிரித்துவிடலாகாது. கலியளிக்க இவர் ஒருமித்திருக்க வேண்டும் என எண்ணி அரன் அவர்களுக்குத் தனித்தனிப் பெயரிடாமல் எழுவருக்கும் சேர்த்து 'தோணுப் பொருளைத் தொடர்ந்து கண்ட மன்னவர்க்குச் 'சாணுர்' என நாமம் சாற்றினுர்''

சிவன் முதலில் சாணுர் எனப் பெயரிட்டவுடன், வேதா, **'சான்ருேர்'** எனவும்; திருமால் **'நாடாள்வார்'** எனவும்; சக்தி, **'சங்கு மன்னர்'** எனவும்; பார்வதி **'பர்ப்பமுடி மன்னர்'** எனவும்; சரஸ்வதி **'வெள்ளானை வேந்தன்'** எனவும்; பிள்ளையார் **'நகுல வேந்தன்'** எனவும்; முருகன், **'தவலோக மன்னன்'** எனவும்; வேத முனிவர்கள், **'தர்மகுல மன்னர்'** எனவும்; தேவர்கள், **'தெய்வகுல மன்னர்'** எனவும்; சூரியன், **'சூரியகுல மன்னர்'** எனவும்; வாசவன், **'விசை விசய வேந்தர்'** எனவும்; கண்ணன், **'காட்டு ராசர்'** எனவும் பெயரிட்டனர்.

இவ்வாறு சான்ருேர்க்குத் தேவ சங்கத்தினர் பதின் மூன்று பெயர்களை இட்டு வாழ்த்த அவ்விடத்தில் சரசுவதி அன்னை மக்களை எடுத்துத் தாலாட்டுப் பாடினுள்.

பாலருக்கு அமுது படைத்தல்:—இனி மண்ணகத்தில் வாழப்போகும் இந்த ஏழு மகவுக்கும் அவர்கள் பரம்பரையினருக்கும் காலங்கள் தோறும் ஊட்டுவதற்கு அமுது செய்ய எண்ணி சிவன் முதல் முப்பெருங் கடவுளரும் தேவர்களுக்குக் கூறினர்.

வானவர்கள் வானில் சென்று அமுதத்தினைத் தேடி எங்கும் அமுதினைக் காணுமல் நின்று திகைத்தனர். அப்போது ஒரு மறையோனும் அவன் மனைவியும் வானமுதம் எல்லாவற்றையும் உண்டு பாளைவைத்து நின்றனர். உடனே தேவர்கள் அவர்கள் இருவரையும் பிடித்து வந்து சங்கத்தின் முன் நிறுத்தினர்.

உடனே மூவரும், 'பாலருக்கு இருந்துண்ண இவர்களை அமுது சுரக்கவையுங்கள்' என்று கூற தேவர்கள் மறையோனையும் அவன் மனைவியையும் பனைமரமாக மாறும்படி சாப

மிட்டனர். இச்சாபம் எப்பொழுது தீருமென்று அவர்கள் கேட்டதற்குச் சிவன் 'திருமால் நீசக்குலமறுத்து வையகத்தை ஆள வரும்போது தீரும்' என்று அருளினர். உடனே மறையோனும் மாதும் பனை மரங்களாகத் தோன்றினர்.

சிவன் பாலர்களை நோக்கி ''நீங்கள் இத்தால மரத்தைக் கொண்டு அமுதெடுத்து உண்டு வாழுங்கள். இது உங்களைத் தவிர வேறெருவருக்கும் அமுது சுரக்காது'' என்று வரமருளினர்.

வரம்பெற்ற பாலர் காளியிடம் வளர்ந்தனர். திருமால் தொடர்ந்து பயணம் மேற்கொண்டு ஸ்ரீரங்கப்பதியில் சென்றமர்ந்தார்.

தக்கன் வதை:—காளி தன் மக்களைக் கண்ணின் மணிபோலக் காத்து வளர்த்தாள். விதவிதமாய் வித்தைகளைக் கற்பித்தாள். அவர்களும் மாவீரராக மண்ணில் வளர்ந்திட்டார். அப்போது காளிதேவி சான்ருேர்க்குப் போர்க்கோலமிட்டு புட்டாபுரங் கடந்து பேய்ப் படையுடனே சான்ருேரையும் விட்டு தக்கனேயும் வதைத்தாள். சான்ருேர் தக்கனை வதைத்து வெற்றி மாலை சூட காளி அவர்களுக்குப் பரிசு பல ஈந்தாள்.

மைந்தருக்கு மணம்:—பின்பு பாலர் எழுவருக்கும் மணமுடிக்க வேண்டு மென்று கருதி 'விழைந்து நல்லபுத்தி விவரமிட்டுச் சொல்லுகின்ற மாமுனியான 'நாரதரை' அழைத்து பாலருக்குப் பெண் பார்க்கச் சொன்னுள்.

நிருபதிராசன் பெண்கள்:—இந்திரனுக்குப் பூவெடுத்துத் தொண்டு செய்யும் பூவையர் எழுவர் இருந்தனர். வழக்கமாகப் பூ வெடுக்கும் அவர்கள் மாச்சல் கொண்டு கடமையினைத் தட்டிக் கழிக்கத் தொடங்கினர். இதைக் கண்ட இந்திரன் இதனைச் சிவனிடம் கூறிக் காரணம் வினவினுன். அதற்குச் சிவன் ''இவர்கள் மண்ணகத்தின் வேந்தர்கள் மேல் மையல் கொண்டு விட்டனர். அதனுல்தான் விண்ணகத்து வேந்தனே உனக்குச் சேவைசெய்ய மாச்சல் படுகின்றனர்''

எனக் கூறினர். உடனே இந்திரன் இவர்கள் எழுவரையும் மண்ணகத்தில் நிருபதி ராசன் பெண்களாகப் படைக்க, அவர்கள் மண்ணில் பிறந்திருந்தனர்.

பாலருக்கு பெண்பார்க்கப்போன நாரதமுனிவன் இப் பெண் மணிகளின் பெருமையை உணர்ந்து நிருபதி ராசனிடம் பெண்கேட்டான். அவனும் இசைவுகூற பாலருக்கு அவ் வேழு பெண்களேயும மணம் முடித்து வைத்தனர்.

சோழநாட்டில் மைந்தர் வாழ்க்கை:—இந்த பாலர்கள் எல்லாம் மண்ணகத்தில் சோழநாட்டில் மனேவியரோடு வாழ்ந்து மக்களே ஈன்றனர். ஏழு பாலருக்கும் மக்கள் பிறந்தனர். சோழநாடும் வளமிக்க நாடாக அமைந்திருந்தது. மாபெரும் சோழ சாம்ராச்சியம் உலகுக்கே அணியாகத் திகழ்ந்தது. இங்கே 'இட்ட விரைகள் ஈரெட்டாய் விளேந்து' செழித்தன.

இங்கே ''நாதாந்த வேதம் நன்ருய்ச் செழித்தது. வேதப் புரோணி விளங்கியிருந்தார். மகத்தான மாமுனிவர் வாழ்ந்தனர். தாணுமாலேயன் தாமதித்திருந்தான். ஆகமக் கூத்தாடுகின்ற இந்நாடு அச்சமில்லா பூமியாகத் திகழ்ந்தது''.

இங்கே ''அரகரா என்று அபயமிடும் ஒலியும், குமுத்திரளாய் பெண்கள் குரவையிடும் ஒலியும்'' எப்போதும் கேட்டிருக்கும்.

இங்கு ஆளும் சோழமன்னன் ''எளியோர் என்று எண்ணி மிகப் பாராமல் களிகூர நன்ருய்க் கண்ட வளக்கே உரைப்பான். ஆறிலொரு கடமை அது தரவே மாட்டோமென்று. மாருருவர் சொன்னுல் மன்னர் மறுத்தே கேளான்'' இங்குள்ள மக்கள் பண்பாட்டில் சிறந்திருந்தனர். சான்ருேர் முதலாய்ச் சக்கிலியன் வரையும் உண்டான வழி ஒக்க ஒரு யினம்போல் வாழ்ந்தனர். ''தான்பெரிதென்று தப்புமிகச் செய்யாமல், வான் பெரிதென்று மகிழ்ந்திருந்தனர். கற்கதவு போலே கற்பு மனக்கதவு, தொல்கதவு ஞானத் திறவு கோலாய்க் கொண்டு, கணவன் மொழியக் கலவு மொழி

பேசாமல் துணைவியர்கள் எல்லாம் துணையாக''—வாழ்ந்திருந் தனர்.

இவ்வாறு தெச்சணத்தில் சோழன் சீமை சிறப்புற்றி ருந்த போது பாலர்க்கும் பாலர் பிறந்து மக்கள் கிளையோடு மாநிலத்தில் புகழோடு வாழ்ந்திருந்தனர்.

மைந்தர் சிறப்பு:—பாலர்க்குப் பிறந்த பாலர் பல் வகைத் தொழில்களிலும் சிறந்து செல்வம் குவித்தனர். 'தாலமரமேறி தைரியப்பால் வாங்கி' உண்டு மேலான வாழ்வு வாழ்ந்திருந்தனர். இவர்கள் மாவீரர்களாக இருந்தமையால் சோழ மன்னன் இவர்களிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந் தான். ''வீரவிருதுகளும் வேழம் பரிகொடுத்துப் பாரமுள்ள சீமை தனில் பங்கும் மிகக் கொடுத்து'', சான்றோரைப் பேணி னன். அவர்களும் சோழனுடனெதிர்த்துச் சூதுசெய்த மன்ன ரையும் வெற்றிகொண்டு'' அன்புடனிருந்தனர்.

மாயன் ஸ்ரீரங்கநாதராய் வீற்றிருந்தார்.

கஞ்சன், துரியோதனாதிகள், தக்கன் ஆகியோரை அழித்த தோடு கொடுமை மிகுந்த துவாபர யுகம் முடிவடைந்தது.

7. கலியுகம்

"திருமால் இறந்துவிட்டார்!" தேவர் செய்தி!!:—சிவபெருமான் கைலேயில் அமர்ந்திருந்தார். அப்போது குருமுனிவன் அங்கே வந்து 'பிஞ்சு மதிசூடும் பிஞ்ஞகனை' வணங்கிக் குரோணி உடம்பின் துண்டுகளில் மீதமுள்ள ஆறும் துண்டினைப் படைக்க வேண்டும் என்று வேண்டினான்.

அதற்கு சிவன் மாயன் வரவேண்டாமா? எனக்கேட்க முனிவன் "கண்ணனின் சடலத்தை நான் அரிகோணமலையில் கண்டேன் அவர் கொண்டிருந்த பொய்ச் சடலக் கூட்டை கழைந்துவிட்டு வைகுண்டம் அடைந்துவிட்டார்.

"ஒன்பதாம் பிறவி ஒடுங்கிப் பிறக்க
இன்பமறக் கீழுலகில் இறந்து கிடக்கின்றார்".
"பிறக்கத் தவசு புரியப்போய் கிழுலகில்
உறக்க மெய்ஞ்ஞான ஒளியிலிருக்கிறார்"

—எனக் கூறினான்.

இவன் கூற்றினைத் தேவர் முனிவர்களும் ஒப்பினர்.

நீசன் பிறப்பு:—உடனே சிவன், "கல்லை வலித்திழுத்து காலில் மிகப் போடுதல்போல்" குரோணியின் வாரிசைப் படைக்க இசைந்து பிறப்பினை வகுக்க நினைக்கும்போது முன்பு திருமால் பிழந்துபோட்டு மண்ணுள் புதைந்துகிடந்த ஆறுவது துண்டம் மண்ணைத் துளைத்துக் காலை மேல்நீட்டி 'மண்டை கீழ் மேல் காலாய்' வெளிப்பட்டது.

எல்லோரும் இது பெரும் மாயம் என அதிசயித்தனர். சிவனும் இவன் தலைகீழ் தோற்றத்தையறிந்து இந்த அதிசயத்தைப் பார்க்க எழுந்தார். அப்போது அங்கே நின்ற நந்தியிடம் 'பிறந்துள்ள இவன் யார்?' எனக் கேட்டார். அப்போது நந்தி இவன் நீசன் என்று கூறி அவன் வரவால்

உலகு அடையவிருக்கும் துயரத்தையும் விளக்கினர் அதனைக் கேட்ட சிவன் சித்திரபுத்திரன் மூலமும் இவன் உண்மையை அறிய உளங்கொண்டு அவரை அழைத்துக் கேட்க அவரும் நந்தி கூறியதையே உறுதிப்படுத்தி மண்ணில் இருந்து வெடித்துப் பிறந்த இவன் ஆயுட் செய்திகளையும் உரைத்தார்.

உடனே சிவன் அந்த நீசனைத் தன்னிடம் அழைத்து வருமாறு ஆணையிடத் தேவர்கள் அவனைக் கொண்டு வரப் போய் மண்ணில் புதைந்து கிடந்த அவனை சிவன் தந்த 'சுறண்டி' எனும் ஆயுதத்தால் தோண்டி எடுத்துக்கொண்டு வந்து சிவன் முன் நிறுத்தினர்.

நீசன் கேட்ட வரங்கள்:—சிவன் அவனிடம் உனக்கு ஏதுவரம் வேண்டும்? எனக்கேட்டார். அவன் என்னைப் போல ஒரு பெண்ணை படைத்துத்தாரும் பார்க்கலாம்'—என இழிவாகக் கூறினன். அப்போது சிவன் தன் தேவியை அழைத்து இவனுக்கு என்ன உபாயத்தால் பெண்ணினைக் கொடுக்கலாம்?—என்று கேட்க; சக்தி ''இவனுடைய இடப்புற எலும்பொன்றை உருவி பெண் உருக்கொடுத்து இவனுக்கு அளிக்கலாம்'' என்று யோசனை கூறினள். அவரும் செய்தார். அவள் யோசனைப்படி நீசன் வேண்டிபடி 'அழகில் அதிகமுமாய் ஆங்காரம் பாதியுமாய் அவன் எலும்பிலிருந்தே பெண்ணைப் படைத்து அவனுக்களித்தார் நீசன் அவளைத் தன் பெண் டாட்டியாக்கி மண்ணோடு மண்ணும் மருவுவதுபோல் மருவி நன்ருகத் தர்மம் நாள்தோறும் செய்து குண்டம், கண்டா ரைப் போலே கட்டினன் மங்கையரை.

அரன் மேலும் அவனுக்கு வேண்டும் வரங்களைக் கேட்க அவன் கூடுவிட்டுக் கூடுபாயும் கலையும், நீர் மேல், கனல் மேல் தானிருக்கும் மோடிகளும் தேவர்களையும் வானவரையும் ஆளும் உரிமையையும் அறவலிமையையும் கல்வி கலைப் புலமையும், வேண்டினன்.

அதனையும் கொடுத்து '**சூத்திரச்சித்தர்**' என்ற **அகத்தியரைப்**

படைத்து அவனுக்குக் கல்வி கொடுக்கும் படி கூற அகத்தியர் கல்வியை ஈந்தார்.

கலியன் ஆணவமும் கலிப்பகைவன் தந்திரமும்:—இத்தனை வரமும் பெற்ற அவன் மிக ஆணவமுற்றான். இவன் ஆணவ ஆட்சியால் உலகம் அடையவிருக்கும் கேட்டினை நினைத்த மாயன் ஒரு பண்டார வேடமாய் அவன் வரும் வழியில் நின்று ''ஈசனிடத்தில் பெருகவரமும் ஆயுதங்கள் கலையெல்லாம் பெற்றவனே இந்தத் தேச இரப்பனுக்குச் சிறிது தா' யென்று கேட்டார். நீ எனக்குத் தராமல் போனால் உனக்குச் சாபமிடுவேன்'' என்றார்.

அப்போது நீசன், இப்போது போடா இரப்பனோடு ஏது சண்டை? இப்போது

''மாயன் வரவேண்டும் வலுப்பார்த்து விட்டிடுவேன்
பேயன் உடனெனக்குப் பேச்சென்ன நீ போடா"

என்றான் உடனே மாயன் அவனிடம், 'பிச்சைக்காரனிடம் பெலமில்லை என்று நினைத்தாய்? என்பலமும் உன்பலமும் சண்டையிட்டுப் பார்த்தால் தெரியும்?'' என்று சூழ்ச்சியால் உரைத்தார்.

அதற்கு நீசன் பலமாய் நகைத்து, ''முடி விரித்துக் கந்தை உடுத்தவனோடு யுத்தமிட்டால் ஆண்மையில்லை என்று ஆயிழையார் ஏசுவாரே, ஒன்றில்லாப் பேயனோடு யுத்தமிட்டால் எந்தனையும் நன்றினியப் பெண்கள் நகைப்பார் நீ அப்புறம் போ'' என்றுரைத்தான்.

கலியன் செய்த சத்தியம்:—அதற்கு மாயன் அப்படியாயின் நீ இரப்பனோடு சண்டையிட மாட்டாயா? எனக் கேட்க அவன் 'ஆம்' என்றான். இது உண்மையாயின் நீ சத்தியம் செய்து தா என்று கேட்டார். அவன், மாயன் மாயம் அறியாமல் சத்தியம் செய்து கொடுத்தான். தவறி சண்டையிட்டால் தோற்று இறந்து வன்னரகில் போவேன் என்றும் ஆணையிட்டான்.

சக்கரம் பிறந்தகதை:—சத்தியங்களைப் பெற்றுக் கொண்ட மாயன் பின்னும் நீசனிடம் இருக்கும் ஆயுதங் களையும் பறிக்க எண்ணி ''சிவனிடம் இத்தனைக்கோடி வரங் களைப் பெற்று வந்திருக்கும் நீ இந்த வெற்று இரும்பு ஆயு தங்களை ஏன் சுமந்து திரிகிறாய்?' உனக்கு வேண்டும் போது கிடைக்காதது எது? நீ கேட்ட சக்கராயுதத்தை நிர்மலனார் தந்தாரே அது மட்டும் போதாதா? இதை எல்லாம் நீ சுமந்து திரிந்து என்ன பயன்? நீ இந்த சக்கராயுதத்தை என்னிடம் தந்தால் அதை நினைத்த போது, நினைத்த பொருளைப் பெறு வதற்கு உதவும் நாணயமான சக்கரமாக்கித் தருகிறேன் அதுவே உனக்குச் சிறந்த வாழ்வினைத் தரும்'' என்றார்.

அவனும் சக்கரத்தினைக் கொடுத்தான். உடனே மாயன் அதை பணமாக்கி அவன் கையில் கொடுத்தார். அப்போது சக்கரம் இத்துன்பம் எனக்கு எப்போது தீரும்?. எனக் கேட்க மாயன் கலி மாறும் போது கடரும் உன் துன்பம் என்றார்.

சக்கரப் பணம் பெற்ற நீசன் அதனைக் கொண்டு சென்று 'பெண்ணே நமக்குப் பெலங்கள் வந்து வாய்த்ததடி!, என மகிழ்ந்து கூறி அவளோடு வாழ்ந்தான்.

மாயன் ஸ்ரீரங்கம்போய் 'இந் நீசன் எனக்குச் செய்து தந்த சத்தியங்களை யெல்லாம் தப்பாமல் எழுதிவையுங்கள்' எனக்கூறி அரங்கத்தில் அமர்ந்தார்.

நீசன் பெற்றுச்சென்ற வரங்களை யெல்லாம் பார்த்த பார்வதிதேவி தன் நாயகனை சிவனிடம் அவனைப் பற்றிக் கேட்க—சிவன் கலியனின் '**கலியுகம்**' தொடங்கி விட்டது என்று கூறியருளினார்.

கலியனால் விளைந்த புவியின் மாற்றங் கள்:—கலியனும், கலிச்சியும் உலகில் வந்த உடன் உலகம் நலிந்தது. முன்னிருந்த சாஸ்திரமும் முறையும் பஞ்சாங்க மும் போக வழிதேடின. கடல்விளைவெல்லாம் காணாதோடின. சிலைகள் பதிகள் தெய்வத் திருச்சமூலமும் அலையுள்ளும் பூமி யுள்ளும்போய் மறைந்தன. 'கர்மக் கலியினால் கடல் கோபித்தே பார்க்க தர்மம் தலைகவிழ்ந்து தானிருந்தது அம்மானை''.

புவியில் இருந்த வெள்ளானை முதலிய விலங்குகளெல்லாம் காடுநோக்கிச் சென்று மறைந்தன. அவைகள் திருமாலை நோக்கித் துயரத்தோடு முறையிட்டழுதன உடனே அங்கே மால் பண்டாரமாய்த் தோன்றி அவைகள் கலியுகத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளைக் கூறி அனுப்பி விட்டு ஸ்ரீரங்கம் திரும்பினார். திரும்பி வரும்போது கலைமுனி ஞானமுனி என்ற இரு முனிவர்கள் தோன்றி வணங்கி நின்றனர்.

துவராபதியை மறைத்த சிவத்தூதர்கள்:- அவர்களை மாயன் விசாரித்த போது அவர்கள் ''நாங்கள் சிவனடித் தொண்டர்கள். கைலை வாசிகள். மால் மண்ணில் அவதரிக்கப் போகிறார் தர்ம யுகம் தோன்றப் போகிறது. அவருடைய துவராபதியின் சிறப்பையெல்லாம் கண்டால் கலியன் அதனைக் கைப்பற்றி விடுவான். எனவே நீவிர் போய் அதனை மறைத்துவையுங்கள் என ஆணையிட்டான். நாங்கள் வந்து வாரித்திரையிட்டு துவராபதியை மறைத்து வைத்து விட்டுத் திரும்பும் போது கலியன் வந்து விட்டான். அதனால் அவனுக்கு அஞ்சி இங்கேயே இருக்கிறோம்'' என்று கூற மால் அவர்களிடம் ''நீங்கள் இப்போது செந்தூர்க் கடலில் போய் என் வரவுக்காகத் தவமிருங்கள்'' என்று ஆணையிட்டு அனுப்பிப் பின் ஸ்ரீரங்கம் புறப்பட்டார்.

போகன் கண்ட சொர்க்கவழி:—மால் ஸ்ரீரங்கத்துக்குச் செல்லும் வழியில் போகன் என்ற முனிவன் எட்டு ஆண்டு தவசிருந்து உலகில் மனுநீதமே குலையப் பொறுக்க முடியாமல் ஒரு மலையில் தலையை மோதி உயிர்விடப்போனான். அதைக்கண்ட மாயன் அவனிடம் ஏன் என்று விசாரிக்க அவன்—''கலியன் உலகில் வந்த உடன் வேதமொன்று யாருக்கும் விளங்காதபடி மலையாக இறுக்கமடைந்து மாற்றம் அடைந்தது, அது வைகுண்டர் வரும்போது விளங்கிவிடும் என்று வேதா சபித்தார். அந்த மறையே இன்றுள்ள மலைகள். இந்த மலையில் முட்டி இறந்தால் உடனே வைகுண்டம் கிடைக்கும். எனவே மோதுகின்றேன்'' என்று கூறினான் அவர் அவனைக் கூட்டிக் கொண்டு வழி நடந்தார்.

நீராவிப் பெண்ணின் நெடுஞ்சாபம் தொலைந்தது:— வழியில் மாயன் தனக்குச் சடைவாக இருக்கிறது என்றும் நீராடவேண்டும் என்றும் கூறினர். அப்போது முனிவன் அங்கேயிருந்த அருணகிரி மலையில் உள்ள அருவி ஒன்றைக் காட்டி நீராடுமாறு வேண்டினர்.

மாயன் நீராட அதில் இறங்கினர். அப்போது அந்த அருவியின் நீர்ப்பரப்பில் இருந்து ஒரு பெண் தோன்றி மாயனை வணங்கினள். மாயன் அவளிடம் நீ யார் என வினவினர். அப்போது அவள்,

''நான் கைலையில் சிவனர்க்குச் சேவை செய்தவள். ஒருமுறை நான் ஆடையின்றி ஒரு நீராழியில் நீராடிவிட்டேன். அதையறிந்த சிவன் என்னை நீராவியாகப்போ' எனச் சபித்தார். என் சாபம் எப்போது தீருமெனக் கேட்டேன். அப்போது அவர்

''ஆவியாய் நீ கிடந்தால் அச்சுதனர் அங்கு வந்து
தாவிக் குளிக்கச் சாபமது தீரும் என்ரார்"

என்று கூறினள்.

மால் போகமுனிவனையும் அவளையும் துவராபதியில் என் கோட்டைகளும் அரண்மனைகளும் காவலின்றி இருக்கின்றன. நீங்கள் இருவரும் அங்கேசென்று அவற்றைக் காத்திருங்கள். நான்வந்து உங்களுக்கு நற்பதவி தருவேன் என்றுகூறி அவர்களை அனுப்பிவிட்டு ஸ்ரீரங்கம் போய்ச் சேர்ந்தார்.

கலிசெய்த மாற்றங்கள்:— கலியன் ஆட்சி உலகில் நடைபெற்றது. கலி பல மாயங்களைச் செய்தான். கலியன் சாஸ்திரத்தை ஆருகவும் வேதத்தினை நாலாகவும் வகுத்தான். நட்சத்திரத்தை இருபத்தி ஏழாகவும் வகுத்தான். நாளை ஏழாக மாற்றினன். சந்திரனை மங்கவைத்தான், சமுத்திரத்தைப் பொங்கவைத்தான், மந்திரத்தால் தெய்வங்களை மாடுபோல் வேலை வாங்கினன். கன்னியழித்தான், கற்பைக் கலக்கினன், மழையை மறைத்தான்.

உலகில் இவ்வாறு பெருங்கேடுகள் பிறந்த உடன் சிவன் நந்தியை அழைத்து இவற்றுக்கெல்லாம் காரணம் யாது? எனக் கேட்க நந்தி இந்த கைலேயில் இருந்து நாம் அவற்றைக் கண்டுபிடிக்கவோ கூறவோ முடியாது. பரலோகம் சென்றாலே முடியும் எனக் கூறிவிட சிவனும் நந்தியும் பரலோகம் சென்றனர்.

யோகமுனி இட்ட சாபம்:— பரலோகம் சென்ற உடன் நந்தி மெய்யுணர்வு பெற்றுச் சிவனிடம், முன்பொரு முறை யோகமுனி ஒரு உண்மை உரைத்தான். ''மாயன் வைகுண்டம் செல்லும் வழியில் தெய்வ கன்னியர் ஏழுவரைக் கண்டு மோகம் உற்று அவர்களைத் தழுவ அவர்களுக்கு ஏழு பாலர்கள் பிறப்பார்கள். பாலர்களுக்குச் சான்றோர் என்பது பெயர். அப்பாலர்கள் தர்மயுகம் ஆள்வார்கள்'' எனபதே அவன் உரைத்த உண்மை. அவன் கூறியபடி சான்றோர் பிறந்துவிட்டார்கள்.

புவியில் கலியனும் தோன்றியுள்ளான். அவன் அழிவில் தர்மயுகம் தோன்றும். கலியன் ஆட்சி இப்போது நடக்கிறது. எனவேதான் இப்புரட்டுகள் எல்லாம் நடக்கின்றன. இது இருள் கொண்ட காலமாததால் ஏற்ற தர்மம் செல்லாது'' என்று தெளிவாக எடுத்துரைத்தான். மேலும் இதற்குமேல் விவரங்கள் தேவையாயின் மாலே வரவழைத்துத்தான் கேட்க வேண்டும் என்று கூறிவிட்டான்.

சிவன் தவத்தில் மால் தோற்றம்:—உடனே சிவன் நந்தி தேவனிடம் மாலே வரவழைக்க என்ன செய்யலாம் எனக்கேட்க நீர் மாலின் வரவுக்காகத் தவமிருந்தால் அவர் வருவார் என நந்தி உரைத்தார். சிவன் தவமிருந்தார். மால் தோன்றி நீர் என்னை நினைத்துத் தவமிருந்தது ஏன்? எனக் கேட்டார்.

பேய்மாலைப் பிரான்:—மாலைக்கண்ட சிவன் மிக மகிழ்ந்து அவரைக் காணமல் பலகாலம் பெருந் துயருற்றதையும் தனக்குத் துணையாக மால் இல்லாததால் ''மனங்

கலங்கி பேய்க்கணங்களை மாலையாக இட்டு'' இருப்பதையும் கூறினர்.

உடனே மால் அந்தப் பேய்க் கணங்களாலான மாலையைக் கழற்றித் தீயில் எறியும்படி கூறினர். சிவன் அவ்வாறே செய்ய தீயில் விழுந்த மாலை வெடித்து அதிலிருந்து பல்லாயிரம் பேய்கள் வெளிப்பட்டன.

தோன்றிய பேய்கள் சிவனைச்சுற்றி நடனமிட்டு வரங்கள் வேண்டின. அப்போது மாயன் ''இவைகளை இப்படியே விட்டுவைத்தால் உலகுக்கு ஆபத்து. அதனல் இவைகளுக்குக் கொடுக்கும் வரங்களைக் கொடுத்து நாரத முனியை அழைத்து அவன் கட்டுக்குள் இருக்குமாறு கட்டளையிட்டு விடுங்கள்'' என்று கூறினர்.

சிவன் அவ்வாறே செய்யப் பின்னும் மாயன் ''கலியன் பண்டார வேசமாய் இருப்பவர்களோடு மட்டுமே இப்போது போரிடமாட்டான். எனக்குத் தந்த சத்தியம் அது. எனவே நீங்களெல்லாம் ''பண்டார வேசமாய்ப் பதிந்திருங்கள்'' என்று கூறிவிட்டு மீண்டும் சீரங்கம் சென்றுவிட்டார்:

உடைந்தது வைகை:—கலியன் ஆட்சியால் உலகுக்குத் துயர் மிகுந்தது, கலிதலைமீறி நின்றது. அதனல் மாரிபொழிய வைகை உடைத்து, ஏரிவழிந்து இராச்சியத்தை அழிக்க நின்றது.

சோழன் வைகை அடைக்க நாட்டோரை எல்லாம் அழைத்துப் பணி நடத்தினன். அப்படியும் அடைக்க முடியாமலானது. அப்போது ஒரு ஈழன் சோழனிடம் சென்று ''தெய்வகுலச் சான்ரேராய் பாலர் எழுவர் இங்கே வாழ்கிருர்கள். அவர்களை அழைத்து அடைக்கச் சொன்னல் ஒரு நொடியில் வைகை அடைபட்டு விடும்'' என்று சொல்லிக் கொடுத்தான்.

சோழன் தீவினை:—உடனே சோழன் சான்ரேர்க்கு ஆள் விட்டான். அவர்கள் வந்த உடன் அவர்களைக் கூடையெடுத்து மண் சமந்து வைகை யடைக்குமாறு கூறினன்.

சான்றோர் மறுத்தனர். தங்கள் பெருமையும் சோழ மன்னர் குலத்துக்குத் தாங்கள் ஆற்றியுள்ள சேவைகளையும் கூறிக் கூடை தொடமுடியாதென்று கூறினர். சோழன் கலியால் பீடிக்கப்பட்டிருந்தால் ''சான்றோர் கூடை தொடா மரபினர்'' என்பதையும் ஒப்புக்கொள்ளாமல் பின்னும் வற்புறுத்தினன். சான்றோர் மறுத்தனர். உடன் தன்படை வலிமைக்குப் பணிய வைக்க முயன்றான். படையே தோற்றது. உடனே சோழன் சான்றோரில் ஒருவரை ஒகு குளக்கரையிலும் ஒருவரை வைகைக் கரையிலும் யானையினைவிட்டுத் தலையிடறிக் கொன்றான்.

மால் வைகை அடைத்தார்:- இச்செய்தியை வித்தியாதர முனிவன் ஒருவன் மாலுக்கு வந்து உரைத்தார் உடனே மாயன் அங்கே சென்று ஒரு பிட்டு வாணிச்சியின் வீட்டு உறுப்பினராக தோன்றி வைகையை அடைத்துவிட்டு ஸ்ரீரங்கத்தில் வந்து கோபமுடன் இருந்தார்.

சோழநாடு அழிந்தது:— சான்றோரில் இருவர் இறந்ததும் அவர்களின் பத்தினிமார் தம் கணவர்களைத் திருப்பித்தர வேண்டும் என மாலை நோக்கித் தவமிருந்தனர். காளிதேவி சினந்து சோழ நாட்டில் மழை பெய்யாமல் செய்து பஞ்சத்தை ஏற்படுத்தினள். சோழன் நாடும் நகரும் அழிந்தன. ''பழி செய்த சோழனூரில் பகலில் நரி ஓடியது''.

இப் பெருந்துயரம் பொறுக்க முடியாமல் இத்தனைத் துயருக்கும் கேட்டுக்கும் காரணமான சோழன் கரிகாலன் அழிந்தான்.

மாயன் அனந்தபுரம் ஏகுதல்:— அக்காலத்தில் ஸ்ரீரங்க வேதியருக்குள் சூது மூண்டு ஒருவனை ஒருவன் ஏமாற்றப் பார்த்தான். அவருள் ஏழையான பார்ப்பான் ஒருவன் வேள்வி வளர்த்து அதில் மாயனைத் தோன்றவைத்தான். வேள்வியில் தோன்றிய மாயன், அவன் துயர்கேட்டுக் கலியழியும் காலம் நெருங்கி வருவதையும் உணர்ந்து முன் பொருமுறை சுகமுனிவன் தன்னைத் திருவனந்தபதிக்கு அழைத்ததையும் தான் வர ஒப்புக்கொண்டதையும் நினைவு

கூர்ந்து சிறிது நாளாவது அனந்தபுரத்தில் சென்று இருக்க வேண்டும் என்று மனதிலெண்ணி அனந்தபுரத்திற்கு ஏகினார்.

கற்சிலைகள்மேல் காட்டிய கருணை:— திருவனந்தபுரம் செல்லும் வழியில் ஓரிடத்தில் ஐம்பத்தைந்து சிலைகள் வரிசையாக நிற்பதைக் கண்டு மாயன் தன் உடன் வந்த 'அருணமுனி' யிடம் இச்சிலைகள் யாவை? எனக் கேட்டார். அதற்கு அருணமுனி ''மாயவரே, இவர்கள் பிரம்ம லோகத்தைச் சேர்ந்தவர்கள் பிரமன் வைத்திருக்கும் பிறப்புக் கணக்குப் புத்தகத்தில் மாருட்டம் செய்ததினால் பிரமன் இவர்களைக் கற்சிலையாய்ப் போங்களென்று சபித்துவிட்டான். உடனே இந்த முனிவர்கள் எங்கள் சாபம் எப்போது தீரும் எனக் கேட்டனர். அதற்கு பிரமன் மாயன் ஸ்ரீரங்கம் விட்டுத் திருவனந்தபுரம் போகையில் உங்கள்மேல் தொட்டிடுவார். மாயனுடைய

"இந்து திருக்கைதான் சிலைமேல் பட்டவுடன்
தீருமுங்கள் சாபம்" —என்றருளினார்''. என்று கூற மாயத் திருமால் அவ்வாறே செய்தார் ஐம்பத்தைந்து பிரம லோகத்து முனிவர்களும் உயிர்பெற்று மாயனிடம் எங்களை இரட்சிக்க வேண்டும் என்று வேண்டினர். அப்போது மாயன் ''நீங்கள் ஆளுக்கொரு சீமைக்குச் சென்று வல்ல திருமால் வரங்கொடுப்பார் என நம்பி பிச்சை எடுத்துத் துறவுக் கோலத்துடன் வைகுண்டம் உண்டென்று வாழ்ந்திருங்கள்'' என அருளி மீண்டும் தன்வழியில் நடந்தார்.

மலையாய் நின்ற மாது! 'எக்காள துர்க்கை':— மாயன் தன் வழியில் செல்லும்போது காட்டு வழியில் ஒரு பெரிய மலை தாடகை போல் உருக்கொண்டு நிற்பதைக் கண்டு அதைத் தன் காலால் உதைத்தார். உடனே அம் மலை ஒரு பெண்ணாய் எழுந்து நின்றது. அப்பெண் மாயனை வணங்கி நின்றாள். உடனே மாயன் தன்னுடன் வந்த தேவர்களிடம் இது என்ன அதிசயம் எனக் கேட்டார். அப்போது தேவர்கள் மாயவரே இவள் செந்தீரிஷியின் மனைவி.

இவள் பெயர் 'எக்காள மடந்தை' எமன் இவள்மேல் மோகம் கொண்டான். இவளை அடையும் முயற்சியில் எமன் இவள் கணவனைக் கொன்று விட்டான். அப்போது இவள் சிவனிடம் தான் எமனுடன் உறைந்தே அவனை அழிக்கவரம் கேட்டாள். அதற்குச் சிவன் சிறிது பொறுமையாக இரு என ஆணை யிட்டார். இவள் மீண்டும் மீண்டும் தன் எண்ணத்தை வற் புறுத்தி வரம் கேட்க சிவன் சினந்து மலையாகச் சாபமிட்டு மாயன் கால்பட இம்மலை உரு நீங்கும் எனவும் அருளினர், அதனாலேயே இவள் மலையாகக் கிடந்தாள்''-என்று கூறினர்.

அப்போது மாயன் அவளிடம் இப்போது உனக்கு ஏது வரம் வேண்டும் எனக்கேட்டார். அதற்கவள் சிவனிடம் கேட்ட வரத்தையே மீண்டும் கேட்டாள். உடனே மாயன்— "பெண்ணே இப்போது நீ தவத்தினை மேற் கொண்டிரு. எமனை இப்போது அழித்தால் உலகில் நருள் பெருக்கம் தாங்காது. தர்மயுகத்தில் உனக்கு இச்சை உடைய உன் கணவனாலேயே நான் எமனை அழிக்க வகை செய்வேன்'' என்று உறுதியளித்தார். அவள் தவம் மேற்கொள்ளச் சென்றான். மால் தொடர்ந்து அனந்தபுரம் சென்றார்.

மீண்டும் தவம் செய்க:— அவ்வாறு அவர் சென்று கொண்டிருக்கும்போது கைலையிலும் கலியன் துயர் பொறுக்க முடியாமல் தேவர்கள் எல்லோரும் சான்றோர் குலம் ஆளப்போகும் தர்மபதியில் தாமும் சான்றோராய்ச் சென்று பிறக்கத் தவம் மேற்கொண்டனர். தங்கள் தவம் முடிந்து நற்கதியடைய அருளுமாறு மாயனிடம் வேண்டினர். மாயன் அதற்கு மகிழ்ந்து 'நன்று நன்று தேவர்களே அந்த நற்பேறு கிடைக்க நீங்கள் இனியும் தொடர்ந்து தவம்செய்துவர வேண்டும்' என்றருளி நடந்தார்.

பசுவுக்கும் — பெண்ணுக்கும் காட்டிய வழி:—சிறிதுவழி சென்றபோது ஓரிடத்தில் ஒரு பசுவும் பெண்ணும் தவமிருந்ததைக் கண்டு இது ஏன் என்று மாயன் கேட்டார். அப்போது பசு, 'மாயவரே இவள் என் மகனைக் கொல்லத் தவம் இருக்கிறாள். இவள் தவம் பலித்தால் என்

மகன் சித்திரன் கன்றாய் உடன் பிறக்கவேண்டும்' எனக் கேட்டுக்கொண்டது.

பின், பெண் தன் குறையைக் கூறத் தொடங்கி — ''மாய மாலே எனக்கொரு மகன் பிறந்து பதினாலு வயதாய் பக்குவ மாய் வளர்ந்து வந்தான். நான் மகிழ்ந்திருந்தேன். அப் போது இப்பசுவின் மகன் உருக்கமுடன் என்பேரில் உள் ளாசை கொண்டது நான் அதை உறுக்க அது, என் மகனைத் திடீரெனக் குத்திக் கொன்றுவிட்டது என் துயரம் தாங்காமல் பிரமனிடம் சென்று என் மகனின் ஆயுட்கணக்கைப் பார்த் தேன். அவன் இப்போது சாக ஏதும் விதியில்லை என்பதை யறிந்தேன். விதியில்லா திருந்தும் என் மகன் சாக ஒரு சூழ்ச்சி நடந்துள்ளதைக் கண்டு வேதனையுற்றே இப் பசுவின் மகனைப் பழிவாங்க நான் தவமேற்கொண்டேன் என்று கூறினாள். உடனே மாயன் பெண்ணிடம் நீ உருத்தாய்த் தவமிருந்தால் உன் கோரிக்கை நிறைவேறும் என்று கூறி பசுவிடம் நீயும் தவமிரு. உந்தனுக்குச் சித்திரன் கன்றாய்ப் பிறந்து எந்தன் மகனார்க்கு ஏவல்செய்ய வைத்திடுவேன் என்று கூறித் திருவனந்தைப் பயணத்தை மேற்கொண்டார்.

அனந்தபுரத்தில் கலியாட்சி:— அப்போது திருவனந்தை மன்னன் கலியின் வசப்பட்டுக் கலியனாகவே நாடாண்டான். நாடு துயருற்றது. சான்றோர் மக்கள் மிகத் துன்புற்றனர். அப்போது மாயனுடன் திருவனந்தத்திற்கு வந்த கேத்திரன் வேதியன் ஆகிய இருவரில் கேத்திரன் மாலி டம் மாயவரே உமது சான்றோர் மக்கள் அனந்தபுர ஆட்சி யில் படும் அல்லல்களைக் கண்டும் நீர் ஏன் இப்போது அங்கே செல்கிறீர்? எனக்கேட்டான். அதற்கு மாயவர் தக்க உத்தரம் கூறி திருவனந்தபுரம் சேர்ந்தார்.

புலச்சிகண்ட இறைவன்:—மாயவர் திருவனந்த புரம் வந்ததை முதலில் ஒரு புலச்சி கண்டு எல்லோர்க்கும் உரைத்தாள். உடனே அங்கு ஆண்ட நீசன் மாயனுக்குக் கோயில் குளங்களும் வைத்துப் பூசைக்கு ஏற்பாடு செய்தான்.

அவனுக்குப் பிள்ளை இல்லை எனவே அவன் மாயனை வணங்கித் தனக்கு மகவு வேண்டும் எனக்கேட்டான்.

கலியனுக்குக் காசி வழி:—மாயன் அவனிடம் நீ காசிக்குச் சென்று சிந்தாநதியின் கரையில் தவம் இரு எனப்பணித்தார். நீசன் அவ்வாறே சென்று தவம் இருந்தான்.

கொக்குபெற்ற வெள்ளைப் பிள்ளை:—நீசன் தவமிருந்த போது நதிக்கரையில் ஒருமறையவன் தன் மனைவியைத் தழுவினன். அதைக்கண்ட நீசன் மோகவயப்பட்டான். அவன் விந்து இளகிக் கங்கையில் சாடிவிட்டது. அப்போது அங்கே இருந்த ஒரு கொக்கு அதனை விழுங்கியது. உடனே கொக்கு கர்ப்பமாகி வெள்ளை நிறத்தில் ஒருமகனை அவ்விடத்தில் ஈன்றது. அம்மகவு நீசனுக்குக் கிடைக்கவில்லை அம்மகவை 'புனவரிஷி' என்பவன் கண்டெடுத்து வளர்த்தான். அவனுக்குத் திருமணப் பிராயம் வந்த உடன் புனலரிஷி குரோணி வம்சத்தில் தோன்றிய செங்கோ, மட்டி என்ற இரு மங்கையரை அந்த வெள்ளை மகனுக்கு மணமுடித்து வைத்தான்.

'மருமக்கள் வழி'மரபுத் தொடக்கம்! பிள்ளைக்காகத் தான் மேற்கொண்ட தவம் பெரும் பழியாய் முடிந்து விட்டதால் நீசன் மீண்டும் திருவனந்தபுரம் வந்து மாயனைப் பணிந்து வணங்கினன். மாயன் ஒருசோதிடனைப் பார்த்து இவனுக்குப் பிள்ளைப்பலன் உண்டா எனப்பார்த்துக் கூறு என்றார் அவன் சோதிடத்தினைப் பார்த்து நீசனே உனக்கு பிள்ளைப்பேறு இல்லை உனக்குப்பின் உன் மருமகன் நாடாளப் பலன் இருக்கிறது என்று கூறினன். சோதிடன் கூறியபடியே நீசனுக்குப் பின் அவன் மருமகன் வசுபக்கிரி என்பவன் பட்டத்துக்கு வந்தான் இவன் பழைய வருடத்தை மாற்றினன் 'அரிநமா' என்ற மந்திரத்தை மாற்றி 'விரியா அனுதி' என்று கூறச்சொன்னன் தன்வேதத்துக்குப் பணம் கொடுத்து ஆள் சேர்த்தான்.

வேசை மகன் தேசமன்னன்:—அக்காலத்தில் தெய்வமாதரின் சாபத்தால் சோழ பாண்டியருக்கும் வாரிசு இல்லாமல் போகவே அந்த இரு நாட்டினையும் ஆள மன்னரில்லா நேரத்தில் 'வேசை ஒருதாதி விழிநுதலாள் தன் வயிற்றில் பேசரிய ஒரு மதலை பிறந்தது மாயமுடன்.'' அம்மதலை வளர்ந்து அவ்வாட்சியை ஏற்ருன்.

வசுபக்கிரிக்கு மாயன் துணை:—இவ் வேசை மகன் நீசன்மேல் படையெடுத்தான் நீசன் மாயன் அருளால் வேசை மகன் படையினை வென்ருன். அதன் பின்னுல் அவன் தன் ஆட்சிமுறையையும் — படையையும் திருத்தி அமைத்துப் பகையால் வெல்லமுடியாத அரசாய் தன்னரசை மாற்ற எண்ணி தன் அமைச்சர்களிடம் யோசித்தான். அரசின் முக்கிய மான உயர் பதவிகளுக்கும் பல அறிஞர்களும் திறமைசாலி களும் தேவைப்பட்டனர்.

சான்ருேர் துணையாலுல் பேரரசு:—அமைச்சர்கள் இப்போது நாம் தேடும் எல்லாத் தகுதியும் படைத்தவர்கள் சான்ருேர்களே எனக் கூற நீசன் சான்ருேர்க்குத் தூதனுப்பி அவர்களை அழைத்துப் பல உபகாரங்கள் செய்து சிறந்த பதவிகளையும் அளித்தான். தனக்கு மெய்க் காவலர் களாகவும் அவர்களையே நியமித்தான்.

நீசனிட்ட சாபம்:— புறக்கணிக்கப்பட்டுக் கிடந்த சான்ருேர் திடீரென மிக உயர்ந்த நிலையடைந்துவிட்டதைக் கண்ட நீசன் சாதியார் வஞ்சகமாகத் திட்டமிட்டு ஒருநாள் நீசனைக் கொன்று தீர்த்தனர். ஆனுல் இவ் வஞ்சனையை அறியாத நீசன் தமக்கு மெய்க்காவலராக அமைத்த சான்ருேரே தம்மைக் கொன்றுவிட்டதாகத் தவருக எண்ணி ''என் குடும்பத்தோர்கள் இராச்சியத்தை ஆளுமட்டும் உன் குடும்பத்தோர்கள் ஊழியங்கள் செய்து மிக, அழுந்தப் படுவாரென'' சாபமிட்டான். அது பலித்தது.

நீசராட்சிச் செய்த கொடுமைகள்:—அதன் பின்பு ஆட்சிக்குவந்த நீசர்குலம் சான்ருேர்மீது வஞ்சம் கொண்டு கொடுமைகள் செய்தது. நீசன் சான்ருேர்க்கு;

தாலிக்கும், கன்று காலிக்கும் பனைக்கும், பனையேறு வதற்கும் கருப்புக்கட்டிக்கும் வரி வைத்தான். சான்றோர் வரிகட்ட வேண்டாத பொருளே இல்லை.

சான்றோரிடம் பதனீர் கேட்டடித்தான், கருப்புக்கட்டி நாருவட்டி, சீரகமிட்ட சில்லுக் கருப்புக்கட்டி, தோண்டி பாய் முதலியவற்றையும் கேட்டு அடித்தான்.

"உய்கொண்ட சான்றோர் உடம்புருகும்
தேட்டெல்லாம்
நெய்கொண்ட நீசன் நைசாகப் பறித்தான்''.

''குளம் வெட்டச்சொல்லிக் கூலி கொடுக்காமல் களம் பெரிய சான்றோரைக் கைக்குட்டை போட்டடித்தான். ஈப் புலிபோல் நீசன் ஈயைப்போல் சான்றோர் நாய்ப்புலி போல் நீசன் நல்லாடுபோல் சான்றோர். பம்பழித்துச் சான்றோரைப் பலசாதியின் கிழாய் தும்பழித்து வேலை தூறு படக்கொண் டான். கோயில் சிவாலயங்கள் கூப சிங்காசனங்கள்,

"நாலுலகும் கள்ளாய் நாடி யிருந்தாலும்
சாணுன்கள் ளேறியென சண்டாள நீசனெல்லாம்
வீணுகச் சான்றோரை விரட்டி யடிப்பான்.
சாணுடம்பு கொண்டு தரணி மிக ஆண்டாலும்
சாணுன் சாணுரெனவே சண்டாள நீசனெல்லாம்
கோணுத உளத்தோரைக் கோட்டி
செய்தேயடித்தான்"

மாயன் எச்சரிக்கையும் மாநீசன் பதிலும்: இத்தகைய அநீதிகளையெல்லாம் கண்டு மாயன் மிகுந்த சினமுற்று ''நீசா நீ குலத்தோடு அழிவாய்'' என்று கூறி எச்சரித்தார். நீசனுக்கு மேலும் பல புத்திகள் உரைத்தார். மேலும் —

"கற்புள்ள சாணுத்திக் கதறி உன்னைச் சாபமிட்டால்
அப்படியே உன்கோட்டை அழிந்து பொடியாகுமடா".

என்றும் எச்சரித்தார்.

அதற்கு நீசன் தன் நடவடிக்கை எதனையும் மாற்றப் போவதில்லை எனவும் ''நீர் இங்கிருந்து பெயர்ந்து சாணாரின் ஊரில் உறைந்திருக்கப் போனாலும் சாணாரின் சங்கடங்கள் கேட்பதில்லை'' — எனவும் திடமாகக் கூறிவிட்டான்.

இவ்வாறு மாயனை நீசன் அவமதிப்பாகப் பேச அவர் மிகுந்த சினமுற்று மீண்டும் அவனுக்குச் சில உரைகள் உரைக்கத் தொடங்கினார். அப்போது நீசன் ''உன்னோடு எந்தனுக்கு உறவென்ன நீ போடா, முன்னெல்லாம் நீதான் உதவியோ எந்தனுக்கு''? உன்தனுக்குச் செய்த பூசை முதல் பணிகளையெல்லாம மறந்துவிட்ட நன்றிகெட்டவன் நீ'' என்று மாலைப் பழித்தான்.

மாயன் செந்தூர்ப் பயணம்:-அதற்கு மாயன், ''பூசை செய்தாய் நீயும் பிராமண நம்பூரிகட்கு, தேசமறி யாதோ செப்பாதோ சாட்சியது?'' என்று கூறி,

> ''போறேன் நான் உன்னுடைய புரத்தை
> விட்டு செந்தூரில், வாறேன் நான் உன்னை
> வதைக்க ஒரு கோலமிட்டு, நாடாள்வார்
> தனக்கு நான் பட்டமும் சூட்டி;
> ஒரு புத்தியாகி உள்ளென்னைக் கொண்டோர்க்கு
> புதுப் புத்தி யீந்து பூலோகம் ஆளவைப்பேன்,
> தருணம் வரும்போது சாணாரிடம் வருவேன்''.

என்று சபதமிதமிட்டு அனந்தபுரத்திலிருந்து செந்திலுக்கு ஏகி 'வாரிக்கரையாண்டி' எனக் கோயில் கொண்டிருந்தார்.

இதற்கு முன்பு செந்தூரில் தேர்தொட்டுக் கொடுக்கும் பொறுப்பும் சான்றோரிடமே இருந்தது. இதற்கு அவர்கள் தானமும் பெற்றுவந்தனர். கலியாட்சியில இதுவும் மறுக்கப் பட்டது.

கலிக் கொடுமை:—மாயன் திருச்செந்தூர் சென்ற விட பூமியில் கலியன் கொடுமை கட்டுக்கு அடங்காததாயிற்று.

அவன் சான்றோரை வேண்டுமென்றே பகைத்துப் பகைத்துக் கெடுத்தழித்தான். இவ்வாறு கலியால் மானம் வரம்பு மகிமை கெட்டுச் சான்றோர்கள் ஈனமடைந்து இருக்கின்ற வேளையிலே வானவரும் தேவரும் வந்து மாலினை வணங்கிச் சான்றோர் துயரம் தீர்க்க வேண்டினர்.

சக்தியின் வேண்டுகோள்: அப்போது சிவசக்தியும் வந்து மாயன் கழல் பணிந்து, மாயன் தங்களை விட்டுப் பிரிந்தது முதல் கடுந்துயரங்கள் அனுபவிப்பதாகவும் இப்போது கலியின் கொடுமை சகிக்கவே முடியவில்லை என்றும் கூறி கலியனை அழித்து உலகைக் காக்குமாறு வேண்டினாள்.

மாயன் அவளிடம், ''உன் நாயகனாகிய சிவனே என்னிடம் கூட யோசனை கேட்காமல் கலியனைப் படைத்து விட்டார். அதனால் தானே இப்பெரிய துயரம் ஏற்பட்டது'' என்று சிவன் மீது குற்றம் சொன்னார். எல்லாவற்றையும் கைலையில் வைத்துப் பேசிக் கொள்ளலாம் என்று கூறி மாயனைக் கைலைக்கு அழைத்தாள் மாதுசக்தி

மாயன் கைலை சென்றார்:—தங்கையின் கெஞ்சுதலுக்கு மாயன் இரங்கிக் கைலைக்குச் செல்ல இசைந்தார். தூய்மையான வெள்ளாடைப் புனைந்து தன் தங்கை பேணி வளர்த்த முப்பத்திரண்டு அறங்களையும் உடலில் அணிந்து கொண்டு சக்தியோடு கைலை சென்று சேர்ந்தார் கலியழிக்க வந்த மாயன்.

அப்போது, மாலிடம் ஆலோசனை கேளாமல் கலியனைப் படைத்துத் தான்பட்ட துயரங்களை யெல்லாம் கூறி இனி ''எல்லாம் உமது இச்சைபோல் நடத்தும் சொல்லொன்றுக் குள்ளே சூட்டி நீர் ஆளும்? என்று

> "மாலுக்கு மனது மகிழ்ச்சி வரும்படிக்கு
> பாலுக்கு மோரோன் பகர்ந்தார் காண் அம்மானை."

சூடில்லை சிவனுக்கு:—''சான்றோரைப் படைத்த பின்பு துயரமெல்லாம் தீர்ந்ததென்று நான் ஸ்ரீரங்கத்தில் போய் இருந்தேன். அப்போது நீர் என்னை நினையாமல்

கலிமனிதனைப் பூமியில் ஏன் படைத்தீர்?.......... சிவனே உமக்குச் சூடெண்ணம் சற்றுமில்லை. இருப்பில் இருந்து கொண்டு எனக்கு அலைச்சல் செய்வதுண்டு.''

என்னோடு யோசிக்காமல் நீர் கலியனைப் படைத்து விட்டீர், அவன்பாடு உம்பாடு. அதற்கு நான் என்ன செய்வது?'' என்றார். உடனே சிவன்—

'தன் வரத்தால் தான் அலைந்தான்'—''நான் என்ன தவறு செய்துவிட்டேன்? ஆதியில் நீர் பூமியில் தவமிருந்தபோது நான் வேள்வியில் தோன்றினேன் அப்போது குறோணியைத் துண்டாருக்கிவிட நீர்தானே வரம் கேட்டீர்? அதன் தொடர்ச்சிதானே இத்துயரமெல்லாம்? உமது வரம் தான் உம்மை அலைக்கிறது'' என்றும்; ''நீசனைப் படைக்கப் போகும்போது நான் உம்மை நினைத்தேன். தேவர்களும் வானவர்களும் நீர் கட்டையைப் போட்டுவிட்டுப் போய்விட்டீர் உலகில் இல்லை என்று வந்து கூறினர். அதனாலேயே நான் உம்முடன் கலந்து ஆலோசிக்கவில்லை'' என்றும் கூறினார்.

தேவர்கள் நடுங்கினர்:—உடனே மால் ''என்னை இவ்வுலகில் இறந்து கிடந்தாரெனச் சொன்னவரை யெல்லாம் சுறுக்காய் அழையும்'' என்று கூற, சிவன் வானவர் தேவர்களை அழைத்தார் கிருஷ்ணசடலத்தை மலையில் கண்டு மால் உலகில் இல்லை என வந்து கூறிய அனைவரும் மால் முன் பயந்து நடுங்கி நின்றனர். மால் அவர்களைக் கண்டித்து மன்னித்தார்.

சான்றோர் குலத்தில் ஏழுலோகத்தவரையும் படைத்தல்:—அப்போது சிவன் மாயனிடம் கலியை அழிக்கவேண்டும் என்று வேண்டினார். அப்போது மால் தான் கலியழிக்கப் பிறக்கும் போது தனக்குத் துணை நிற்பவர்களையும் அங்கே சான்றோர் குலத்தில் படைக்க வேண்டும் எனக் கூற சிவனும் இசைந்தார். பின் மால் ஒவ்வொரு லோகத்தவரையும் பூமியில் படைக்கத் தொடங்கினார்.

தேவலோகத்துச் சம்பூரணத்தேவன் செய்திகள்:—முதலில் தேவலோகத்தவரைப் பூமியில் படைக்கத் தொடங்கினர். அப்போது தேவர்களில் ஒருவனை சம்பூரணத்தேவன் தான் ஆசைகொண்ட பரதேவதை என்ற பெண்ணையும் தன்னோடு படைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான் அதற்கு சிவன் மறுத்து ''நீ தேவன் அவளோ எமலோகப் பிறவி. தேவருலகத்தவன் எமலோகத்தவளை மணப்பது சாதிமுறைக்குக் கேடாகும். ஆகவே அவளை உன்னோடு சான்றோர் குலத்தில் பிறப்பிக்க முடியாது'' என்று கூறி மேலும்

''ஆனை மதமாய் அடர்ந்து மிகத்தேவா
பூனை யோடுவந்து புல்குமோ?-பூனை
நாயோடு புல்குமோ? நல்லறிவில் லாதேவா
ஈயோடு சேர்மோ இசல்?''

எனக்கேட்டார்.

அதற்கு சம்பூரணத்தேவன்,

''காவலரே மாமோகம் கண்டஇடம் மன்றல்லவோ,
ஆவலது கொண்டஇடம் அச்சுதரே சம்மதங்காண்.

எனக்கு அவளைத் தந்தருளி வைத்தால் தர்மமுண்டு உங்களுக்கு!'' என மிகவும் வேண்டினான்.

சம்பூரணருக்குத் தவம் விதித்தல்:—உடனே மாயன் குறுக்கிட்டு சம்பூரணத்தேவனே கீழுள்ள பெண்ணை மேலாக்க வேணுமென்றால் நீங்கள் இருவரும் தவம்செய்ய வேண்டுமென்று கூறினர் அதற்கு தேவனும் பரதேவதையும் சம்மதித்துத் தவம் மேற்கொண்டனர். பின்பு மாலும் சிவனும் சேர்ந்து. எம-சொர்க்க-பிரம-வைகுண்ட-சிவ-பர; லோகத்தவர்களையும் படைத்தனர்.

தர்மயுகக் காட்சிகள்:—பின்பு மாயன் சிவனிடம் இனி ஏது செய்யலாம்? எனவினவ அது உம்விருப்பமே

என்று சிவன் கூறினர். அப்போது மாயன் தர்மயுகம் பற்றிய செய்திகளை உரைத்து ''நான் தர்மயுகத்தினை ஏற்படுத்த நிச்சயித்திருக்கிறேன். அங்கே துவரம்பதி இருக்கும். அதை மாசற்றவர்கள் காண்பார்கள். மற்றவர்கள் காணர்''. அவ் யுகத்தில்:—

''சிந்துபயில் வானம் சிறந்த ஒரு பெண்வானம்
வான மதிலுறையும் வளர்நிலவு நேராக
ஈனமில்லா ததுதான் இலங்கு மென்னேரமும்
ஒளியாய்
வாயுவே பூப்போல் மலரெடுத்து வீசிநிற்கும்
ஆயுங்கலைத்தமிழும் அறிவொன்று போல்பரவும்
மிக்க திருச்சாதி மேல்சாதி, சான்ருேராய்
இருப்பார் வயது எண்ணிலக்கு இல்லாதபடி
மண்ணெல்லாம் தர்ம வயல்போல் விளைந்திருக்கும்
துவரம் பதியும் உவரியதுக் குள்ளிருக்கும்''

என்று கூறியருளி அங்கிருந்து சென்ருர்.

ஏழு கன்னியர் தவம் நிறைவடைதல்:— அப்போது ஏழு மக்களைப் பெற்றுவிட்டு மாயனே தங்கள் மணவாளராக வரவேண்டும் என்று தவமிருந்த கன்னியர் ஏழுவர் தவமும் முற்றிவிட்ட செய்தியை சிவனிடம் சக்திகூறி அதற்குச் சிவன் அருள்பாலிக்க வேண்டுமென்ருள். மாலும் உடனிருக்க வேண்டுமென்று கூறினர் சிவன். உடனே சக்தி தன் தமயனிடம் வந்து வணங்கி செய்திகூறி அவரையும் அழைத்துச் சென்ருள். பின்பு சிவன், சக்தி, மால் மூவருமாய் கன்னியர் தவமிருக்கும் இடத்துக்கு வந்தனர்.

அப்போது கன்னியர்கள் சிவனைத் தொழுது மாயன் தங்களை மணக்கவும், தம் பிள்ளைகளை உலகை ஆளவைக்கவும் வேண்டும் என்று வேண்டினர். அப்போது சிவன் மாலிடம் இவர்கள் வேண்டுகோளுக்கு நீர் என்ன சொல்லப்போகிறீர்? எனக்கேட்க, அவர், 'இவர்கள் கேட்பதெல்லாம் நிறைவேறும்

என உறுதியளித்தார். பின்பு, முன்பு தான் இப்பெண்களிடம் நடந்துகொண்ட முறைகளையெல்லாம் உவந்துரைத்தார். அவர்கள் நாணி நின்றனர்.

இரு மக்கள் இறந்தனரே:—பின் மாயன் தன் பிள்ளைகளில் இரண்டை சோழன் கொன்றுவிட்டதையும் மற்றவர்கள் ஐவரும் கலியில் படும் துயரங்களையும் கூறினர். அதைக்கேட்ட பாலகரின் அன்னையர்கள் வருந்திப் புலம்பினர். தன் பிள்ளைகள் ஏழுவரையும் மீட்டிக் கலியழித்துத் தர்மயுகத்தில் அரசாளவைக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். அவ்வாறு செய்யாவிடில் எங்களைப்போல் நீரும் துன்பமுறுவீர், என்று சாபமிட்டனர். அப்போது தக்க நேரத்தில் குழந்தைகளை மீட்டுத்தருவதாக உறுதியளித்தார். வெறென்னவேண்டும் என மாயன் கேட்கத் தம்மையும் புவியில் படைக்கவேண்டினர்.

பூமியில் தங்களைப் படைக்க வேண்டிய விதம் கன்னியர் வேண்டுகோள்:—பூமியில் எங்களை நீர் பிறவிசெய்தால் எங்களை நீர்வந்து ஏற்றுக் கொள்ளும் வரை

"மாதவிடை மாமணங்கள் மலர்ந்து உறக்கம் இல்லாமல், நன்மையறியாமல் நளிப்பேச்சுக் கேளாமல், கொங்கை திரளாமல் கூறுடம்பு வீசாமல், செங்கனிவாய்த் தேமல் தேகமதில் வீழாமல், பக்குவஞாயப் பருவம் வந்து வாய்க்காமல், இவ்விதப்படியே எங்களையும் நீர்படைத்து"—

அருள வேண்டும் என வேண்டிக் கொண்டனர். மாயனும் அவ்வாறே அருளினர் உடனே கன்னியர் நீர் அவ்வுலகம் வருவது எப்போது? எனவினவ மாயன் தன் வைகுண்ட அவதாரக் காலத்தினை அவர்களுக்கும் கூறி அவர்களைப் படைத்தருளினர்.

கைலைக்குக் காளி வந்தாள்:-அதன்பின் சிவன், சக்தி, மால் மூவரும் கைலைசென்று அங்கே இருக்கும்போது காளிதேவி அங்கே வந்தாள்.

காளி மாலிடம் பேச்சுக்கொடுக்க அஞ்சி முதலில் சிவனிடம் பேச்சுக்கொடுத்தாள். கரிகாலன் மாயன் மக்களில் இருவரைக் கொன்றதையும் தான்செய்த கேடுகளையும் சொன்னாள்.

காளிக்குக் கடுஞ்சிறை:— அப்போது மாயன் குறுக்கிட்டு அவள் மேல் குற்றமுரைத்து மாய்ந்த உடனே கிடினும் வந்தாளோ சிவனே? 'புத்தியேல் நெஞ்சரிப்பாய் போவோமென்றேகி வந்தாள்'. தன் மதலை என்றால் தலை வைத்திருப்பாளோ? என்று கூறி அவள் குற்றத்துக்காகத் தீட்டு வடவாமுகத்தில் செய்ய வன்னி மண்டபத்தில் சிறை வைத்தார்.

காளியைச் சிறை வைத்தபின் மாயக் கண்ணன் சிவனிடம் "காளியையே சிறை வைத்தால் வையத்தில் யாருக்கு சுகம் வரும்? சிவனே முதலில் கலியை அழிக்க வழிபார்க்க வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்?" என்று கேட்டார்.

அதற்கு சிவன், "நானே தடுத்தேன் நாட்டுக்கலித் தீட்ட றுக்க, எப்போ கலியறுத்து எங்களுக்கு நற்பேறு, தருவீர் என்று எண்ணி மிக வாடுகிறோம்" என்று கூறினார்.

மகரலெட்சுமி:— உடனே மாயன் இலட்சுமியை அழைத்துக் கண்மணியே நான் மாயக் கலியறுக்க நிச்சயித் திருப்பதால் நீ "பூனிரசப் பொன்மகரப் பொன்மயில் போல்" செந்தூர்க் கடலில் வளர வேண்டும் என்று கூறினார்.

செந்தூர்க் கடலில் அவளுக்குக் கிடைக்கும் சுகபோகங் களையும் கூறி அங்கே நீ மகரமாக வளரும்போது 'கலியுகத்தை முடிக்கக் கண்ணனை ஒருயிரை வலியுடனே உன்னுடைய வயிற் றில் பிறவி செய்து நாட்டு நருளின் நகர் சோதனைப் பார்த்துத் தீட்டுக் கலியறுத்து செவ்வுமனுதானெடுத்து நானுன் மகன் தனக்கு நல்ல முடியுங் கொடுத்து தேடுந் தர்மசீமை செலுத்த செங்கோல் கொடுத்து அரசாள வைக்கவோர் ஆண்பிள்ளை தான் பெறவே துரைசானி போவெனவே சொன்னார் காணம் மையுடன்"

இதனைக் கேட்ட அம்மை மகரமாகப் பிறக்க மகிழ்ந் திசைந்தாள். நான் அங்கு பிறந்தால் நீர் அங்கே வரு வதற்கு அடையாளம் யாது? எனக் கேட்டாள்.

உடனே மகரமாக இலட்சுமி மாது தோன்றும்போது தான் அங்கு வருவதற்குரிய அடையாளங்களும் கூறி, ''அங்கு நாமிருவரும் ஒரு சேயீன்று கலியழிக்க அனுப்பவேண்டும். நம் மகவு உலகாளும்'' என்று உரைத்தார்.

செந்தூர்க் கடலுக்குள் சீதை மகரச்சிலைபோல் வள ராமல் அரனிடம் நாம் ஒரு பாதையும் தேடாமல் இருப்பது முறையோ? என்று கேட்க ''உம் விருப்பம் போல் நடத்தும்'' என அரன் கூறிவிட்டார்.

சம்பூரணன் தவம் பூரணம்!:-உடனே திருமால் சிவனிடம் சம்பூரணன் பரதேவதை தவம் நிறைவேறும் வேளை நெருங்கிவிட்டது என்பதை அறிவித்தார். அவனைக் காண்பதற்காக மாலும், சிவனும், இந்திரனும் கானகத்திற்கு வந்தனர். உடன் வந்த இந்திரன் தங்க நவரத்தினத்தால் எங்கும் ஒளிவீசும் இரத்தினத் திருமுடியை சூடி இருவருக்கும் நடுவில் வந்தான்.

சம்பூரணன் தவம் குலைதல்:— இதைக் கண்ட சம்பூரணத்தேவன் நிஷ்டைமறந்து பரதேவதையிடம் ''இந்த வானவர்கோன் தலையில் சூடியிருக்கும் முடியை என் தலை மீது வைத்து அவனுடைய இரத்தின சிங்காசனத்தில் நாமிரு வரும் இருந்து வாழ்ந்தால் எத்தனைச் சிறப்பாக இருக்கும்?'' என்று கேட்டான். அந்த நேரத்தில் மூவரும் சம்பூரணத் தேவன் அருகில் வந்து நிற்க தேவனும் தேவியும் துதித்து நின்றனர்.

அப்போது சிவன் மாயனைப் பார்த்து, ''மைத்துனரே பார்த்தீரா? தவம் முடியும் நேரத்தில் இந்த தேவன் சிற்றின்ப மாக இந்திரன் முடிமேல் ஆசைகொண்டு தவப்பேற்றை இழந்துவிட்டான் எனக் கூறினர்.'' அதை ஒப்புக்கொண்ட

மாயன் தேவனிடம் இனி உன் சிந்தனை யாது? எனக் கேட்டார். சம்பூரணன் 'ஊமை மொழிபோல ஒதுக்கில் உரைத்தாற்போல், நாமறியப் பெண்ணறிவாள், நாடறியாதென்றிருந்தோம் இவர்கள் அறிந்துவிட்டார்களே' என வருந்தினான்.

பர தேவதை:— பரதேவதையான பைங்கிளியும் அவர்களைத் துதித்து சம்பூரணனை மன்னித்து, அருள்பாலிக்க வேண்டினாள்.

பரதேவதைக்குப் பரமன் செய்தி: பர தேவதை பிறப்பு:— அதற்குத் திருமால் அவளை நோக்கிப் பெண்ணே எமலோகத்தில் உன் கணவனாக வாய்ந்தவன் இன்னும் உன்னை எண்ணி ஏங்கித் தவிக்கிறான். நீ அவனை விட்டு தேவருலகத்தவனான இந்த சம்பூர்ணன்மேல் ஆசை கொண்டு இவனோடு வந்து இங்கும் இவன் தவம் முடிவுறாமல் செய்துவிட்டாய்.

இந்தத் தவக்குறைக்குத் தண்டனையாக நீ இன்னும் பூமியில் உன் பழைய கணவனோடு பிறக்கவேண்டும். அவனோடு மிகுந்த துயரப்பட்டு வாழவேண்டும். அங்கே இந்த சம்பூரணனும் பிறப்பான் அவன் உன்மேல் கொண்ட பச்சத்தாலே கோதையரே உனையும் கண்டு இச்சை கூர்ந்து கர்மக் கருவினையால் உன்னோடு தொடர்பு கொள்வான். அப்போது பருவாப் பருவத்தில் பாவையரே நீ இவனோடு இருவரொருவரென இச்சைமிகக் கூர்ந்து, வாழ்வாய், நீ உன் முதற்புருஷனை மறந்து இவனே புருஷனாகக் கொண்டு வாழ்ந்து பின், வீட்டை விரித்து மேலே தெய்வ வழியாய் நாட்டை அரசாண்டு நாச்சியார் போலிருப்பாய். என்று கூறிட அவள் பூமியில் எமக் குலத்தில் பிறந்தாள்.

சம்பூரணனுக்குப் பூரணனின் செய்தி:— அவள் தெச்சணபூமியில் எமக்குலத்தில் பிறக்க மாயன் சம்பூரணனிடம் இச்செய்தியைக் கூற அவள் அவரைத் துதித்தாள் இனியதுசெய்யலாம் என மாயன் அரனிடம் கேட்டார். அப்

போது சிவன் இந்த தேவனுக்குள்ள வலிமையைக் கூறிச் சான்ருேர் குலத்தில் அனுப்புக எனக்கூற மாயனும் அவனிடம், தேவனே—

'பாசம் அறுத்தல்லவோ பரகதியைக் காணுவது?' தவத்தில் உன் நினைவு மிக்க பிழையல்லவோ? என்று கூறி இத்தவறுக்காக சிலநாள் பூமியில் பல துயரங்களையும் தாங்கி பின்,

''கண்டந்த மங்கையரைக் கருவால் வசமாக்கி கொண்டு திரிந்து'', வாழ்வில் உனக்கு வெறுப்பு ஏற்பட்டு—உன் சீவனை மாய்க்க உனக்கே மனதாகி பின்னும் சிலநாள் கழித்துப் பெண்ணேடு உறவாடி பின் தனித்திருக்கும் வேளையிலே. உன்துயரம் எல்லாம் தீர்த்து உன்னை என் மகவாய் எடுத்து என் வரிசைத்தானம் எல்லாம் உனக்களித்து பொன்னரசு தந்து புவியாள வைத்திடுவேன்' என்று கூறினர்.

கலியன் உலகில் கண்ணன் வரும் அடையாளம்:—அப்போது தேவன் கலியன் ஆளும் பூமியில் நான் சென்ருல் அங்கு என்னென்ன நடக்கும்? நீர் எப்போது வந்து என்னை ஆட்கொள்வீர்? எனக்கேட்டான்.

உடனே மாயன் தெச்சணு பூமிதனில் தேசபரசோதனைக்கு நிச்சயமாய் நான் வரும் நிசத்துக்கு அடையாளம் இனிநான் கூறப்போகிறவையாகும் தேவனே நீ கவனமாய்க் கேட்டுக்கொள் என்று முகமனுரைத்து:

''பூமியிலோர் திக்குப் பொருந்தி மிகவாழும். சுவாமி வேதம் மறந்து சுழல் வேதம் உண்டாகும். சாதி வரம்பு தப்பி நிலைமாறும் பூமி முழங்கும் பொழுதுமிகச் சாய்ந்துவிடும். பொய்ச்சேத்திரக் குருக்கள் பூமிதனில் மேவிவரும். கிணறுபாழாகும் கீழூற்றுப் பொய்யாகும். காமோக வெறியால் கனபழிகள் உண்டாகும். மாட்டின் வயிற்றில் மனிதர் போல் தான்பிறக்கும். காணிக்கை வேண்டல் கைக்கூலி தான்மீறும். கோதையர்கள் கொங்கை கூடாமலே வாழ்வார். தானமழியும் சாத்திரங்கள் பொய்யாகும். பொய் வேதம் பூமிதனில் பொருந்திமிக உண்டாகும். சட்டம் அழியும் சந்தியம்

பலம் இடியும். நாட்டை அரசாங்கம் நாலுரண்டு மூன்ருளும்'',—என்றுரைத்தார்.

சம்பூரணன் வேண்டுகோள்:—இவைகளை எல்லாம் கேட்ட சம்பூரணன் பின் மாயனைப்பார்த்து ''அய்யாவே கலியன் புவியில் சாதியைப் பதினெட்டாகப் பிரித்துவிட்டான். ஆகவே நீர் என்னை ஆதிச் சாதியில் பிறப்பிக்க வேண்டும்'' என வேண்ட அவ்வாறே படைப்பதாக உறுதியளித்தான். சம்பூரணன் மாயனை வணங்கி நின்ருன்.

கிருஷ்ணன் உடலில் சம்பூரணன் தோற்றம்: அப்போது மாயன் தேவர்களை அழைத்து, ''ஆறுமுறை என்னைத் தாங்கி நான் ஸ்ரீரங்கம் போகும்போது விட்டுப் போன என் சடலத்தை தேடிகொண்டு வாருங்கள்''—எனக் கட்டளையிட்டார். அவர்கள் தேடி அச்சடலத்தைக்கொண்டு வந்து கொடுத்தார்கள். உடனே மாயன் அதைப்பார்த்து ''நீ செய்த நன்றி நினக்குரைக்கக் கூடாது. நான் உனக்குச் செய்யும் நன்றி மிகக்கேளு''.

இத்தனை நாளும் எனைச்சுமந்து பாடுபட்டாய் இனி நீ என்தன் மகனுய் அவதரித்து உபதேசமும் பெற்று என்தன் துயரம் நீக்க யுக சோதனைகள் கழித்துக் கலியழிக்க வேண்டும் என்று 'கதலீவாய்நாதன்' கற்பித்து சம்பூரணனை அக்கூட்டில் பிறவிசெய்தார்.

சம்பூரணனைப் படைத்ததேன்?:— துவாபர யுகத்திலுள்ள கிருஷ்ணன் உடலில் சம்பூரணனை மாயன் படைத்ததைக் கண்டு அனைவரும் ஆச்சரிய முற்றனர். இதன் மாயம் அறியாது மயங்கினர். இவ்வாறு செய்ததேன் என மாயனைக் கேட்டார்கள். அப்போது மாயன் முன்னர் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறினுர்.

''நான் கிருஷ்ணுவதாரம் செய்து பஞ்சவர்க்கு உதவி செய்து இருக்கும்போது கலியன் வந்துவிட்டதைக் கண்டு அஞ்சி ஓடினேன். அதைக்கண்டு கலைக்கோட்டு மாமுனி மாயவரே நீர் ஓடுவது ஏன்? எனக் கேட்டார் அதற்கு நான்

''இவனை நான் முன்னின்று கொல்ல ஞாயம் இல்லை, மற்ற மூவராலும் இவனைக் கொல்லவும் முடியாது. ஆகையால் நான் இவனைப் பின்னின்றவனால் பேசாதே மாழ வைப்பேன்'' என்று கூறியிருந்தேன்

அப்போது ''பின்னின்றவன்'' என்று நான் குறிப்பிட்டது கலியுகத்தில் எனக்குப் பின்னால் என் உடலில் பிறந்து என்னைத் தன்னில் தாங்கிக் கலியழிக்கப்போகும் இந்த சம் பூரணனையேயாகும். இதெல்லாம், ''நடந்தால் அறிவார் நடக்குமுன்னே மற்றொருவர் அறியமுடியாத மறைபொரு ளாகும்'' என்று கூறினார் மேலும், மாமுனி, நீர் அவ்வாறு வருவதற்கு அடையாளம் யாது எனக்கேட்டார். அதற்கு அங்கே நான் சம்பூரணனாக வரும்போது ''வல்லமையும் காட்டேன் மாநீசன் கண்ணின் முன்னே நில்லாமல் நின்று நீசன் தலையறுப்பேன்'' அங்கே நான் வந்திருக்கும்போது உலகத்தவர் எனைப்பார்த்து

> ''இதோ வந்தான் என்பார் இவனில்லை என்றிடுவார்
> அதோ வந்தான் என்பார் அவனில்லை என்றிடுவார்
> இப்படியே சூச்சமொன்று எடுப்போம் நாம் முனியே
> எப்படியும் உற்றறிவார் எனையறிவார் மாமுனியே''

என்று கூறினேன்.

மீண்டும் முனி அப்போது உமக்கு உவப்பானவர்கள் யார் எனக்கேட்டார் அதற்கு நான் ''எனக்காகும் பேர்கள் இனங்கேளு மாமுனியே, புனக்காரம் இல்லை, பூசைமுறை யில்லை. ஆடுகிடாய்க்கோழி அறுத்து வெலியிடார்கள் மாடு மண்ணுருவை வணங்கித் திரியார்கள். என்பெயரைச் சொல்லி யாரொருவர் வந்தாலும் அன்போடவரை ஆதரிக்கும்பேரா கும்'' என்றும் கூறியிருந்தேன்.

என் அன்பு மைத்துனரே சிவபெருமானே! அவ்வாறு நான் கூறியதெல்லாம் நடக்கவேண்டிய காலம் வந்து விட்டது.

இப்போது என் உடலில் சம்பூரணத் தேவனைப் பிறப்பித்துவிட்டேன். அவன் இப்போது மணவைப் பதியில் இருக்கிறான். அவனைத் தூய்மைசெய்து என் மகனாகவே கலிய ழிக்க அனுப்பவேண்டும். அதற்காக இலட்சுமி செந்தூர்க் கடலில் மகரமாக வளர்கிறாள்.

இத்தகைய அற்புதங்கள் நடக்கும் காலமிது. நமக்கு மகிழ்ச்சி விளையப்போகும் காலமிது. ஆகவே சிவனே இம் மகிழ்ச்சியைக் கொண்டாட நீர் இப்போது ஒரு நடனமாட வேண்டும் என்று வேண்டினார்.

நடராஜன் நடனம்:— மாயன் வேண்டுகோளின் படி சிவபிரான் தன் மனைவி உமையோடுசேர்ந்து ''மாலுக்குப் பிறப்பு ஒன்பதென்றும், தேவனுக்கு ஆயிரம், உமைக்கு ஏழு, திருமகளுக்கு பத்து, நாலு மறைகளுக்கும் ஏழு, சாஸ்திரத் துக்கு நாலு, இந்திரனுக்கு மூன்று, வானவருக்கு ஏழு, சரஸ்வதிக்கு ஆயிரம் என்றும், தொண்டர் தனக்குச் சூல் பிறவி ஒன்று — அது இறப்புப் பிறப்பில்லாப் பேறு'' — என் றும் கூறி நடனமாடினார். நடனம் முடிந்தபின் சக்தி சிவ னிடம் மாயன் கலியழிக்கும் காட்சியைக் காணத் தாமும் போகவேண்டும் என்று கூற சிவன் மாலிடம் நீர் கலியழிக்கப் போகும் காலம் எது என்று கேட்டார்.

திருவாசகத்தின் சேவை:– அப்போது மால் அர னிடம் 'நாம் கலியழிக்கப் போகும் காலத்தை இனியும் ரகசியமாக வைத்திருப்பதில் பயனொன்றும் இல்லை ரகசிய மாக வைத்திருந்தால் கலியின் பழிப்புக்கே ஆளாவோம். ஆகவே அந்த செய்திகளை எல்லாம் உலகுக்கு அறிவிக்க சரசுவதியை அழைத்து திருவாசகம் எழுதச்சொல்ல வேண் டும் என்றார்.

திருவாசகம் பாட கலைமகளால் முடியுமா?:— உடனே சரசுவதி மால் முன் தோன்றினாள், அவளிடம் மால், நீ, 'திசை வென்ற சான்றோர் பிறப்புச் செய்தியும் கலியுக

அழிவும் நம் அவதாரமும் கூறித் திருவாசகம் ஒன்று எழுத வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அப்போது சரசுவதி இது தன்ஞல் இயலுவதா? என வியந்து கேட்டுநிற்க மாயன் பெண்ணே இது உன்ஞல் மட்டுமே முடியுமென்று உண்மையை உறுதியாக உணர்த்தி— திருவாசகச் செய்திகளேயும் அவள் உள்ளத்தில் நின்று உணர்த்த அன்னே கலேவாணி அரிய திருவாசகம் படைக்க எண்ணி; .....

கலேமகள் திருவாசகம் படைத்த நிலே:— மலேயொடு மலேயைத் தாண்டி வளர்ந்தவென் பாதத்தை மனதில் நினேத்து சிவனும் கிருபைசெய்ய வேண்டும் என்று நினேவில் ஒருமுகப்பாய்க் கொண்டு இடகலே பீங்கலே ஒருங்கு இணேயும் யோக நிலேயில் இருந்து, கண்ணே ஒருநிலேயில் நிறுத்தி கருணேயைக் கண்ணில் தாங்கி அலேகலே முழக்கம் போலே அவள் திருவாசகத்தைக் கூறிஞள்.

அந்த அற்புதத் திருவாசகத்தில் வீரபுரம் தர்மராசா வம்சத்திலே வெயிலாள் வயிற்றில் ஒருமதலே பிறப்பது பற்றியும் அம்மதலே தர்மபூமியை ஆள்வது பற்றியும் தர்மபூமியின் இயல்புபற்றியும் கூறப்பட்டிருந்தது. இது 998-ல் எழுதப் பட்டது.

திருவாசகத்தில் கூறியபடி வைகுண்ட அவதாரம் ஏற்பட வேண்டிய காலம் வந்தவுடன் மாயன் தன் மனேயாள் மகரமாக நிற்கும் செந்தூருக்குப் பயணமாஞன். அப்போது தேவர் முனிவர்களும் உடன் வந்தனர். முருகன் வரவேற்று உபசரித்தான்.

முனிவர் வேண்டுகோள்:— அவன் உபசாரத்துக்குப் பதில் சொல்லிவிட்டு மாலும் மற்றவர்களும் நேரே செந்தூர் கடற்கரைக்குச் சென்றனர். கடற்கரையை இவர்கள் அடைந்ததும் முன்ஞல் மாலால் அனுப்பப்பட்ட இரு முனிவர்கள் வந்து வணங்கித் தாங்கள் கூறியபடியே நாங்கள் இதுவரை, ''சூரியப் பிரகாச சுத்த வைகுண்டர் இக்கடலில்

பிறந்து எங்கள்தனைக்கூட்டி பக்கத்தில் வைத்துப் பவிசுதர வேணுமென்று'' தவசிருந்ததாகவும் — நாதன் அவ்வாறே பிறந்து பவிசுதர வேண்டும் என்றும் வேண்டினர். அதை ஒத்துக்கொண்டார் மாயன்.

பின்பு உடனிருந்த தேவசங்கத்தவர்க்குத் தன் மகனாய்ப் பிறக்க இருக்கும் சம்பூரணத்தேவரின் கலியுக வாழ்வுச் செய்திகளை எல்லாம் கூற உளங்கொண்டு முதலில் அவர்களுக்குச் சம்பூரணத்தேவன் சான்றோர் குலத்தவனாய் இருந்து வரும் மணவைப்பதியின் பெருமையைக் கூறலானார்.

மணவைப்பதியின் மகிமை:— தேவர்களே; மணவைப்பதி மண்ணுக்குத் திலகம் போன்றது. இப்பதிக்குத் தாமரைப்பதி என்ற பெயரும் உண்டு. ''சிவசிவா வளரும் தச்சணாபுரி நாட்டில்'' தவத்திற்குகந்தது தாமரையூர் நற்பதி. வேதம் புகழ்பதி அது பாசுபதம் வாங்கப் போர்விசயன் தவம்புரிந்த ஊர். பஞ்சவர்க்குப் பகவான் உதவிசெய்த ஊர். அவ்வூரிலேயே என் இனிய சம்பூரணத்தேவன் வாழ்கிறான்.

மகாவிஷ்ணு சடலத்தின் மணவைப்பதி வாழ்க்கை:— அவன் இப்போது சாதாரண பூலோக மக்களைப்போலப் பிறந்து வாழ்கிறான். புவி வாழ்வில் அவன் தாயாக **"வெயிலாள்"** அம்மை இருக்கிறாள். அவன் தன் மனையில் எனக்குப் பூசை செய்தே இன்பம் கொள்கிறான். எனக்காக ஒரு கோயிலையே அவன் வீட்டில் வைத்திருக்கிறான்.

யாருக்கும் பொல்லாங்கு செய்யாமல் எச்சாதியருக்கும் நல்லவனாய் வாழ்கிறான். அவனை ''ஊருக்குத் தலைவன், உடையவனுக்கும் தலைவன், ஆருக்கும் தலைவன் என்று அவன் பெற்றோர் வளர்க்கிறார்கள்;'' நியாயமிருப்பதனால் நாடாள்வான் என்று சொல்லி'' இவன் சுற்றத்தார் அவனைத் தாங்கிப் போற்றுவார்கள்.

மேலுமவன் சொல்லுக்கு வல்லவனாய் சூராதி சூரனாய் மங்கையருக்கேற்றவனாய் மாமோகக் காமீகனாய் வாழ்கிறான்.

அவனுக்கு வயது பதினேழு ஆனபோது தேவர் உலகத்தி லிருந்தபோதே அவன் கண்டு விரும்பிய பரதேவதை என்ற பெண்ணின்மேல் இச்சைகொண்டான். அது பண்டை விதிப் பயன். அவளை அடைய அவன் விரும்பி இருவரும் தவம் இருந்ததால் மண்ணகத்தில் அவன் அவளை அடைய வாய்ப் பளிப்பதாக வாக்களித்தேனல்லவா, அதன்படியே அவன் அவளை அடைந்தான். அதனால் அவன்மேல் பழியேதும் இல்லை.

நான் முன்பு விதித்ததைப்போலவே சம்பூரணன் பிறப்ப தற்கு முன்பே பரதேவதை பூமியில் பிறந்து அவளுடைய எமலோகக் கணவனோடு வாழ்ந்தாள். இவனைக் கண்டதும் ஜன்ம வாசனையினால் இவன்மீது அன்புகொண்டு முதல் கணவனை துறந்து இவனோடு சேமமாக வாழ்ந்தாள்.

சம்பூரணன் பரதேவதையோடு பதினேழுமுதல் இருபத்தி ரண்டு வயதுவரை ஆறுண்டுகாலம் வாழ்ந்திருக்கிறான். அவனுக்குப் பகைவனான ஒருவன் அவனுக்கு இடறு செய்துவிட்டான். அதனால் அவனுக்கு உடல் நோய் ஏற்பட்டுவிட்டது அவன் நோயால் பெருந் துயருறுகிறான். இப்படி இவனுக்கு நோய் வந்தது இவன் பரதேவதையைப் பெற மேலுலகில் தவமிருக்கும்போது இந்திரன் கிரீடத்தைக் கண்டு மயங்கி தான் இந்திரலோகம் அனுபவிக்க விரும்பி தவத்தில் பிழை செய்ததற்கு ஏற்பட்ட தண்டனையாகும்.

இவனுக்கு இந்த நோய் வந்தும் ஒரு வருடமாகி விட் டது. அவன் உடல்நோய் பெற்றதுமுதல் உள்ளம் என் நினைவால் ஒளிபெற்று வருகிறது. அவன் உடலின் அழுக் கெல்லாம் கழிந்தாகிவிட்டது. இனி அவனைச் செந்தூருக்கு அழைத்து இலட்சுமி மகவாகப் புதிய பிறவி செய்ய வேண்டி யதுதான் என்று கூறியருளினார்.

அன்னைகண்ட அருங்கனவு:- ''நாடாள்வான்'' என்று எல்லோரும் நினைக்கும் அளவுக்கு வாழ்ந்த தன் மகன் நோய்வாய்ப்பட்டு ஒருவருடம் ஆனபிறகும் குணமாகாததால் அன்னை பெரிதும் துயரமுற்றாள்.

ஒருநாள் அவள் பெருந்துயரோடு திருமாலைத் துதித்து விட்டு தூங்கும்போது மாயன் அவள் கனவில் தோன்றி, ''மகளே, இப்போது நடைபெறும் திருச்செந்தூர் மாசி மாதத் திருவிழாவுக்கு உன் மகனை நீ அழைத்து வருவாயானால் இப்பிணியும் தீர்த்து நற்பேறு கொடுப்பேன்'' என்று கூறி யருளினார்.

தூக்கத்தில் கனவுகண்டு திடீரென விழித்த வைகுண்ட ராய் அவதரிப்பதற்கென்றே மனு அவதாரமாய்ப் பிறந்துள்ள நாராயணரின் மானிடத் தாய் கனவில் நாரயணனே வந்து கூறிய செய்தியை அனைவருக்கும் கூறினாள். உடனே தன் மகனைத் திருச்செந்தூர் திருவிழாவுக்கு அழைத்துச்செல்ல வேண்டும் என்று கூறினாள். எல்லோரும் அதற்கு இசைந் தனர்.

திருச்செந்தூர்:— உடனே அனைவரும் செந்தூர் செல்ல நடைக்கோப்புக் கூட்டினார்கள். வேண்டும் பொரு ளும் தேடினார்கள். நல்ல தொட்டில் ஒன்றும் கட்டி நாளைக் கடத்தாமல் வழி புறப்பட்டனர்.

கூடங்குளம், சுக்குப்பாரு, தோட்டாவழியாறு சூருவளிக் காடு முதலிய இடங்களைக் கடந்து மகனை அழைத்து மாதா வுடன் அனைவரும் நடந்து, ஓர் வனத்தில் நல்ல தண்ணீர் கண்டு, கொண்டுவந்த பலகாரங்களை உண்டு தண்ணீர்க் குடித்துத் தகையாறியிருந்தனர்.

எதிரழைத்த முனிவர்கள்:— இவர்கள் இங்கிருக்க தன் பிள்ளை வருவதறிந்த 'துறவி முதலோன்' வைகுண்டரை எதிரே ஆள்விட்டு அழைக்க வேண்டுமென்று எண்ணி முனி வர் இருவரையும் அழைத்து,

> ''நான் நியமித்த நல்ல உயிரானது இங்கே
> தானே வருகுது காண் எந்தன் தவத்தாலே
> எதிரே போய் நீங்கள் எதிரழைத்து
> வருகவென்றார்",

அவ்விருவரும் சென்று வைகுண்டரைத் தோள்மீது இருத்திச் செந்தூரில் சந்தன வீதியில் நிறுத்திவிட்டு மாலிடம் வந்து கூறினர். அப்போது மாயன் அவர் வரலாற்றினைப் பிற தேவர்க்கு உரைக்குமாறு அவர்களிடம் கூற அவர்களும் இவர் வரலாற்றினை விளக்கிக் கூறினர்.

செந்தூரில் கிருஷ்ணச் சடலம் உலா:— பின் நாயன், முனிவர்களைப் பார்த்து, 'முனிவர்களே நீங்கள் இந்தச் சடலத்தை இச்செந்தூரிலுள்ள நாலுதெருவிலும் உலாவாகக் கொண்டு சென்று நோயால் நடக்க முடியாத நிலையில் இருக்கும் இவனைத் தரையில் நடக்கவைத்து இவன் பழவினைகளையெல்லாம் உள்ளம் உணரக்காட்டி வாருங்கள்'' என்று முனிவர்கள் கிருஷ்ணசம்பூரண வைகுண்டரை நாலு தெருக்களிலும் அழைத்துச் சென்றனர்.

கடலினுள் கனல்:—செப்படி வித்தை நாதனாகிய மால் கடல் உள்ளே சென்றார். உடனே தமிழ்மறைவாணர் போற்றினர். 'ஞானமாம் தமிழர்' வீணை நாலுதிசையிலும் அதிர்ந்தது. தேவர் 'ஓம் நமோ' வென்று ஓலமிட்டு ஆடினார்கள். அப்போது மாயன் கனல்வடிவமாக அன்னையை நெருங்கினார். அவள் அஞ்சிநடுங்கிட பின் தன் மெய் உருவைக் காட்டினார்,

பின், மாயன் தன் மனைவியிடம் ''சீலப்பேறு உடையவனாய் சிவனுக்கு உகந்தவனாய் ஏகாப்பரனுமாய்'' யானும் நீயுமாக தர்மச்சிறப்பதிகத் தலைவன் தனைப் பெறவேண்டுமென்று கூறினார், மாதா அதற்கு இசைந்தாள்.

பெருமயக்கம்:—உடனே மாயன் அண்டம் முழுவதையும் அதிமயக்கத்துக்குள்ளாக்கினார். அந்த மயக்கத்திற்கு மகரமாயிருந்த திருமகளும் உட்பட நாராயணர் மகரத்துள் சென்று மகனை மிகநினைக்க உகரமுனி கூட்டி வந்த உற்றசடலமது ''விரைந்து கடலுக்குள் சென்றது.''

உடனே மாயமால் மகனைக் கண்டு ஆவியெடுத்து மகரத்துக்குள் கொண்டு சென்றார். அங்கே மகனுக்கு வேண்டிய

பரிசெல்லாம் செய்து கோலமணிந்து பாலனைப் போல் காட்டி, பதிறுடன் காட்டி, நாலுரண்டு காட்டி நல்ல மகவதுக்கு கலியுகம் முடிந்தபிறகு உதிக்கும் தர்மயுகத்தில் நடக்க விருக்கும் செய்திகளை விஞ்சையாக உரைத்திட்டார்.

விஞ்சை

1

''ஆண்டாயிரத்து எட்டதிலே யதனே மாத மாசியிலே, நாந்தான் கடலின் கரையாண்டி நாராயணனே பண்டாரம், கூண்டாந் தெச்சணுபுரியில் கொண்டோம் பள்ளித்தர்ம முற்று, ஒன்ரும் விஞ்சையது மகனே உரைப்பேன் இரண்டாம் விஞ்சையதை.''

2

''வேண்டாம் வேண்டாம் காணிக்கையும் மிகவே வேண்டாம் கைக்கூலி, ஆண்டார் நாராயணர் தனக்கு அனுப்போல் வேண்டாம் காவடியும், வேண்டா மெனவே நிறுத்தல் செய்து வாய்த்த இறையாய்க் கவிழ்ந்திருக்க, இரண்டாம் விஞ்சையது மகனே நவில்வேன் மூன்ரும் விஞ்சையதே.''

3

''கொற்றவர் தானுமாண்டு குறும்புகள் மிகவே, உற்றதோர் துலுக்கன் வந்து உடனவன் விழுந்தோடி, மற்றதோராண்டுதன்னில் வருவோமென் ருகமம் போல், முத்தளத்தோரும் காண உரைத்தனர் மூன்ருப் விஞ்சை''.

4

''ஒருநெல் எடுத்துடைக்க நாடு கேட்டுக் கொள்ளும் இருநெல் எடுத்துடைக்க நாடு தாங்காது மலைகள் உதிர்ந்துவிடும், வானமிடிந்துவிடும் தலை நட்சத்திரம் தானுதிரும் ஆல்காய்போல் நாலாம் விஞ்சை இதுதான் என் மகனே'' என விஞ்சை உரைத்தார்

மகனுக்குத் தந்தை அறிவுரை:—மேலும் தன் மகனுர்க்கு அறிவுரையாக; ஊர்ந்துதிரியும் உயிர்ப்பிராணி

யாதொன்றையும் இரத்தவெறி தீபதாப நிலைப்பட்டை கூடாது

''பொய்யரோடன்பு பொருந்தியிருக்காதே மெய்யரோடன்பு மேவியிரு என்மகனே! வர்மமதைத் வதைக்க வந்தேனெனச் சொல்லிமிக, தர்மம் பெரிதெனவே சாற்றியிரு என் மகனே!'' என்றெல்லாம் கூறினர்.

மண்ணகத்தில் மகன் செய்தி:-உடனே மகன் தந்தையை நோக்கி இக்கலியுகத்தில் போனல் வரும் துயரங்களையெல்லாம் எடுத்துரைத்து நான் அங்கே சென்ருல் என்னை நீர் ஏற்கவரும் நாளைச் சொல்லி அனுப்பும் என வேண்டமாயன் நீ தரணியில் போயிருந்தால் தவம் மூன்று உண்டு: அதில்

''முதத்தான் தவசு யுகத்தவசு என்மகனே
தத்தமுள்ள இரண்டாம் தவசு சாதிக்காமே
மூன்ரும் தவசு முன்னுரைத்த பெண்ணுர்க்கு"

இவ்வாறு மூன்று வகைக்காகவும் ஆருண்டு நீ தவமிருக்க வேண்டும். அத்தவசில்

''நீ, மூக்கு நடுவே மும்முகமும் முத்தி முத்தி
நாக்குச் சுளிதாங்கி நாரணு நானெனவே
கொண்டை யமுதுண்டு குவித்திரு யென்மகனே
இப்படியே ஆருண்டு இருநீ யுகத்தவசாய்
அப்படியே இருந்து ஆருண்டு கழித்தால்
நினைத்த தெல்லா முனக்கு நிச்சயமாய் முடியுமப்பா".

மேலும் ''உனைத்தள்ளி வேறே யொருமூப்பு யுகத்திலில்லை. நீ செய்ததெல்லாம் நிரப்புத்தான் என் மகனே. நான் நீயேயல்லாமல் நடப்பதுவும் வேறிலையே. தானீதனை சர்வபராயென்மகனே உனக்கேக்க நின்றவர்க்கு உதவி கொடு என் மகனே எனக்கேக்க நிற்பவரை இரட்சிப்பதுன் மனந்தான். சிவனும் நீ! நாதனும் நீ! திருமாலும் நீ! என் மகனே

தவமும் நீ! வேதனும நீ! சங்கமுதல் எங்கும் நீயே'' என்று மாலுரைக்க வைகுண்டர் அதற்கு மேலுள்ளவற்றையும் உரைப்பீர் எனக் கேட்டார்.

மேலும், இம் மூணு தவமும் மேல்வாய் நிறைவேற்றி மும்மூவருக்கு முதல்வனய் வந்தாக்கால்—

"தாணய் நீயும் தலைவனும் நீ என் மகனே
சாணரின் நாயகமே சாதித் தலைவன் நீயே''.

இவ்வாறு நீ இருக்கும்போது அந்நீத மாபாவிகள் பல தீவினைகளை உனக்குச் செய்யவருவர். அப்படி வந்தாலும் நீ தாழ்ந்திரு மகனே, சட்டைக்குள்ளே பதுங்கி சார்ந்திரு மகனே, மனதில் மிகநினைந்து கோபமதாய் விள்ளதே. குவியச் சிரியாதே. பாவத்தைக் காணுதே, பராக்கிரமம் காட்டாதே. இல்லாதாராகிடினும் போதப் பகையாதே. வாரஞ் சொல்லாதே. வழக்கோரம் பேசாதே. இப்படி நீ வாழ்ந்தாலும்:—

"பொறுதிதான் என்மகனே பெரியோராகுவது
உறுதிமிக உண்டாகும் உகநாதா என்மகனே
பொறுமை பெரிது புவியாள்வார் என்மகனே"-

என்ற உபதேசங்களைக் கேட்டபின் வைகுண்டர் தந்தையிடம் எந்தனக்கு இத்தனையும் சொன்னீரே கலியுகத்தை முடித்துக் கட்டான தர்மபதி வலியுகத்தைக் காண்பதெப் போது?'' எனக் கேட்டார்.

தர்மபதி காணும் காலம்:— உடனே மால் தன் மகனுக்கு — ''ஆயிரத்தெட்டான திருமண்டபத்தில் வாயிதமாய் ஆண்டொன்றில் நொடிப்பேனேரான் தோற்றுவிப்பேனுர்க்கும் தூதுமிக நடந்து'' அதன் பின் ''பத்தாண்டுக்குள்ளே பல சோதனை பார்த்து, ஒக்க ஒருகுடைக்குள் உன் கையிலே தந்து, துக்கக் களையறுத்து சுத்தமாய் ஆளாக்கி, உன் மூப்பு உயர் மூப்பாய் உல்லாசமே தருவேன்''.

இவ்வாறு நடக்கும் காலத்தை நீ அறியக் காட்டும் குறிகளையும் உனக்கு உரைக்கிறேன் என்ருர்.

காலம் காட்டும் குறிகள்: —''வடக்கு வெளிவாசல் மலைமீதில் ஒரு புதுமை உண்டாகும் மகனே உனக்கு நற் காலமதே. தண்டாயுதத் தோடே சத்தமொன்றே பிறக்கும். மேல்கால் மண்டபமும் மேல்மூடி தான்கழன்று காலத்தால் காணும் கண்ணுமணி உன்காலம். தெட்சணமூலை தென்பால் கடலருகே மெச்சுபதிமூலம் விளக்கெரியக் கண்டுனது காலமிது மகனே. கன்னித்திரு தென் திசையில் கோபுர மண்டமும் கொடிமரமும் வீதிகளும் தாபுரமாய்த் தன்ஞல் தலங்கள் மிகத்துலங்கும்''......

''சிலையுள்ளே தோன்றிச் சிவத்தோத்திரமாக நிலை யொன்ருகி நீயாள்வாய் உன்காலம். வாரிக்கரையில் மண் டபமொன்றே வளர்ந்து நாரியர்கள் கூட நாடெங்கும் வாச மிட்டு ஒரு குடைக்குள் ஆள்வார் உன்காலம் என் மகனே. வாரிமூன்றுகோதி வளைந்திருக்கும் ஓர்தீவை சாதியொரு நிரப் பாய்த் தாளுள்வாய் உன் காலம்''. ஆகவே

''பொறுமை பெரிது பெரிய திருமகனே
தர்மம் பெரிது தாங்கியிரு என் மகனே
பொல்லாதாரோடும் பொறுமை உரை மகனே"

இன்னமும்; ''தன்னத்தன்ஞலே சாதிக்கு சாதிமாழும். நல்ல நினைவோர்க்கு நாளெத்தனை யாளுலும் பொல்லாது வாராமல் புவிமீதில் வாழ்ந்திருப்பார்.'' என்றும் கூறியரு ளிஞர்.

படியளக்கும் பெருவிஞ்ஞை:-மகனே, உனக்கு இத்தனை விஞ்சைகளும் நான் தந்தாலும் இன்னும் ஒரு விஞ் சையை உனக்கு அளிக்கவில்லை அவ்விஞ்சை..... பல்லுயிர் களுக்கும் படியளக்கும் விஞ்சை, சீமை அரசாள வரும் போது சொல்லும் விஞ்சை என்று கூறி, பின் அவ் விஞ்சையையும் தன் மகனுக்குக் கூறியருளிஞர்.

மகனுக்கு மேலும் அறிவுரை:— மேலும் மகனுக்கு அறிவுரையாகப், ''பெரியோர்க்கு வாழ்வு பெருகச் சிறந்தாலும் மரியாதியே இருக்கும் மகனே நீ கேட்டிரு! முள் முருக்கம் பூவு மினுக்கு மூன்றுநாளை கள்ளருக்கு வாழ்வு காணுமதுபோல் மினுக்கு! விள்ளாதஞாயம் மேல்ஞாயம் என் மகனே! அடக்கம் பெரிது அறிவுள்ள என் மகனே! கடக்கக் கருதாதே சுற்றோரைக் கைவிடாதே! நன்றிமறவாதே நாம் பெரிதென்றெண்ணாதே! அண்டின பேரை அகற்ற நினையாதே! ஆபத்தைக்காத்து அகலநீ தள்ளாதே! சாபத்தைச்கூருதே தன்னழிவு வந்தாலும்! கோபத்தைக் காட்டாதே கோளோடு இணங்காதே! பாபத்தைக் காணுதே பகட்டுமொழி பேசாதே! எளியோரைக் கண்டு ஈந்து இரங்கிடு நீ! அழிவென்ற பேச்சு அனுப்போல் நினையாதே! பரம்பூமிகண்டு பாவித்திருமகனே! சட்டம் மறவாதே தன்னளவுவந்தாலும்! நட்டங்காணுதே நாடாள்வாய் என்மகனே! பதறியிருமகனே பம்மியிரு கண் மணியே! பொறுதிமகனே பெரியோராகுவது உறுதிமகனே உலகமதை ஆளுவது!'' என்றெல்லாம் கூறி—மேலும்.

''கலியன் மாய்மாலம் செப்ப எளிதலவே செயிக்க ஏலாது. ஆனாலும் இப்போது உன்னோடு உரைத்த இயல் விஞ்சைக்கு அகப்படுங்காண் அப்பனே கலி பம்மலிலே அகப் படும்! 'கலி என்பது வலிமாய நினைவு மாய்மாலம்!' அத னால் ஆயுதங்கள் அம்புதடி வேண்டாமே. மானமாக இருந் தால் மாழுங்கலி தன்னாலே!''

''இன்னமொரு விஞ்சை இயம்புவேன் கேள்மகனே. உகத்தடக்கு முன்னே ஒருவரையும் சீறரிது. தாழ்ந்திருக்க வென்றால் சகலத்துக்கும் தாழணுமே. சத்துருவோடும் சாந்த முடனேயிரு. ஆர்க்கும் மிக ஈந்தால் அந்த தர்மமே காக்கும் போர்க்கு நினைத்தாரைப் பலிகொடுக்கும் தர்மமது. தர்மந் தான் வாழும் சக்கரங்களல்ல. சாதி பதினெட்டும் தன்னால் கேடாகும்வரை நீதி யழியாதே. நீ சாபங்கூருதே. இங்கே நான் கூறியவற்றை சிந்தை மகிழ்ந்து முறைநடந்தால் சிவ னும் உனக்குள் வசமாகும்'', என்று கூறி,

"கொடுக்கும் வரங்கள் உனக்கீந்தேன்
கொடுத்த வரத்தைப் பறிப்பதற்கு
உடக்கு வரமும் தந்தேன் நான்
உந்தன் ஆணை திருவாணை
அடக்கும் உடக்கும் தந்தேன் நான்
ஆதி சிவனார் அவராணை
நடக்கும்படியே சட்டமெல்லாம்
நாராயணனே தந்தேனே."

என்று கூறியருளி மேலும்;

''மகனே நீ சாதியையும் பேய்களையும் அழித்துவிடு. உயிர்க்கொலையை நிறுத்து. பஞ்சவர்களைக் காத்துக்கொள். முன்னாலேயே நான் சில பெண்களுக்கு வைகுண்ட அவதாரத்தில் அதிகபலம் தருவதாகக் கூறியிருக்கிறேன் அவர்களுக்கும் உதவு. சிலரை உன் மனைவியராக்கிக்கொள்.''

கலியுகத்தில் தொப்பிவேதம் சிலுவை வேதம் முதலியவை தோன்றி நான் பெரிது நீ பெரிது என்று போட்டிபோடும். அவர்கள் ஒருவரை ஒருவர் குறைகூறுவதிலேயே கவனமாக இருப்பார்கள். இத்தகைய வீண் வேதமுள்ளோர் ''குறுகி வழிமுட்டிக் குறைநோவு கொண்டு உடைந்து, மறுகித் தவித்து மாழ்வார்கள்''–என்றும் தன் மகனுக்கு அருளினார்.

மகரத்திலிருந்து மகன் வெளிப்பாடு:—இவ்வாறு பல விஞ்சைகளையும் கேட்ட வைகுண்டநாதர் மகர உந்தியை விட்டு வெளியே வந்தார். 'ஒருசொல் ஒரு மொழிக்குள் உலகாளவந்த—சகல கலைத்தமிழ் ஆய்ந்தவரான—தராசு நிறையிலும் துல்லியமாய்ச் செங்கோல் செலுத்தவந்த வைகுண்டரைச் சரசுவதி, தங்கமாம் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுப் பாடினாள். அதனைத் தொடர்ந்து தேவர்கள் திருப்பள்ளி எழுச்சியும் பாடினர்.

தந்தை மகனுக்கு அறிவுரை:— அப்போது நாராயணர் மகனே ஆவிமிக இல்போதென் மகனே இயம்பு

கின்ற புத்தியைக் கேள் ''பகையாதே என் மகனே பஞ்சவரைக் காத்துக்கொள்ளு. அஞ்சு பூக்கொண்டு ஆசாரஞ் செய் தோர்க்கு வஞ்சகமிலாத வாழ்வுகொடு என் மகனே''. என்று கூறி வைகுண்டருடன் இரு முனிவரையும் விட்டு 'சாட்சி யாய்ப் பாத்திருங்கோ தரணிவளப்பமெல்லாம்' என்று உரைத்து அனுப்பினர். உடனே வைகுண்டர் உள்ளம் மிக மகிழ்ந்து கடலைத்தாண்டி வந்தார்.

இதுவரை காட்டாட்சி புரிந்த கலியன் மருண்டான். அவன் ஒளி இருண்டது. வெற்றிகள் மங்கின. அவன் ஆட்சியின் முதல் தோல்வி வைகுண்டர் அவதாரமே! இனி தோல்விகள் தொடரும் கலி அழிவை நோக்கி யாரும் தடுக்க முடியாத வேகத்தில் ஓடுகிறது!

அ. வைகுண்டர் அவதாரம்.

நாரணர் தன் மகனைத் 'தானனவைகுண்ட மூர்த்தி' யாகவே மண்ணில் அனுப்பினர்.

"நாரணர் வைகுண்டமாகி நாட்டினில் வந்த அன்றே
காரண மெல்லாம் ஆச்சு கலியுகம் அழிந்து போச்சு"

என்பதை அனைவரும் உணர்ந்தனர்.

ஒவ்வொரு யுகத்திலும் கொடுமைமிஞ்சி தீயவர் பெருகி அறம் அழியும்போது அறத்தை நிலைநாட்ட அவதரிக்கும் திருமாலே கலியன் கைஓங்கிய இந்நேரத்தில் 'தன் மகவாய்த்' தானே அவதரித்துள்ளார். யுகக் கொடுமையைத் தீர்க்க அவதரிக்கும் ஒவ்வொரு அவதாரத்திலும் திருமால் கொடி யவர்களோடு போரிட்டு அவர்களை கொன்றழித்து அறத்தை நிலை நாட்டியுள்ளார்.

இவ்வுலகத்திலும் அவர் வைகுண்ட மூர்த்தியால் அவதரித்து விட்டார். மானமாய் வாழ்ந்தால் மாழுங்கலி தன்னாலே, — என்று அவர் அருளியபடி அவர் வாழ்ந்து கலியை மாழ வைப்பார்.

கலியோடு வைகுண்டர் நடத்தவிருக்கும் இந்த அறப் போரின் இறுதியில் சக்கரத்தைப் படையாகக்கொண்டமாயிக்கலி அழியும். அப்போது கலியுக முடிவுக்கான குறிகள் தோன்றும். தர்மபதியும் அலைகடலினுள்ளே நல்லோர்க்குக் காட்சியளிக்கும். இப்போது கலியுகத்தில் கலியோடு வைகுண்டர் அறப்போர் நடத்தத்தொடங்குகிறார். கலியுகம் அழியத்தொடங்குகிறது.

தேவர் துதி:— கலியுகம் தானே அழிய நாராயணர் வைகுண்டமாய் அவதரித்த உடன் தேவர்கள் அவரை நோக்கி வழிபட்டு கலியழிக்க வேண்டுமென்று அவர் பாதத்தில் விழ, 'மறுகிநீர் தவிக்கவேண்டாம் வருவேன் நான் சான்றோர் அண்டை குறுகலி யதனைத் தாண்டி கொள்வேன் நான் குலத்தைத்தானே நீங்கள் மனஞ்சடைக்க வேண்டாம்' — என்று கூறியருளினார்.

தாய்க்குக் காட்சியும் உரையும்:— உடனே வைகுண்டர் —

"கூண்டாங் கடலின் கரைதாண்டிக்
குதித்தே கரையில் ஓடிவந்து
தாண்டாய் முன்னே பெற்றதொரு
தாய்க்கோர் சடல உருக்காட்டி,"

"நானே பிறந்த சமுத்திரத்தின்
நடு மேல் கடலின் அன்னாபார்
ஏனே பதியும் மேடைகளும்
எண்ணிப்பாரு தேர் நிறமும்

மானே பொன்னே மண்டபமோ
வறடே உனக்குச் சாட்சியிது
யானே காட்டும் சொரூபமெலாம்
யாதாயினும் நீ மறவாதே."

"ஆண்டாயிரத்து எட்டு முன்னே
அன்னை யெனவே நீயிருந்தாய்
கூண்டா மெட்டாம் மாசியிலே
குணமாய் நாரா யணர்மகவாய்
சான்றோர் கதிகள் பெற்றிடவே
தர்மகுண்டம் பிறந்து வொரு
குன்றுக் குடைக்குள் அரசாளக்
கொண்டே பெற்றேன் கண்டிருநீ"—

என்று தாய்க்குக்கூறி,

பொய்கொண்ட பேரைப் பலிசெய்தரசாள அன்று வைகுண்டர் தெச்சணம் புறப்பட்டார்.

தேவர்க்கு வைகுண்டர் ஆணை:—அப்போது தேவர்கள் எல்லாம் வைகுண்டர் பதத்தினை வணங்கினர். உடனே மாயன் அவர்களிடம் நீங்கள் எவ்வாறு என் வரவை அறிந்தீர்கள் எனக்கேட்க, அவர்கள்—'நாங்கள் சிறிதுமுன் சிவனின் ஏவலர்களைக் கண்டோம். அவர்கள் சிவனிடமிருந்து யுகக்கணக்குகளை எல்லாம் பெற்றுத் தங்களிடம் ஒப்படைக்க வந்தனர். அவர்களே உங்கள் அவதாரச் செய்திகளை எங்களுக்குக் கூறினர்'—என்றனர்.

வைகுண்டர் செந்தூர் வருகை:—உடனே வைகுண்டர் தெச்சணம் புறப்பட்டு, கந்தன் இருக்குமிடம் வந்தார் கந்தன் அவரைப் பணிந்தான், அப்போது அய்யா வைகுண்டர் கந்தனுக்குப் பல அறிவுரைகள் கூறி அவன் நடந்து வரவேண்டிய ஒழுக்கங்களையும் கூறினர். கந்தன்

அவர் அறிவுரைப்படியே நடப்பதாக உறுதிகூறிப் பணிந்தான்.

'நிசத்துக்கு அடையாளம்':—உடனே வைகுண்டர் நீ இப்போது ஒப்புக்கொண்டதெல்லாம் நிசமே என்றால்– ''உன் கோபுரத்தின் உயர்ந்த வடமூலையில் பின்கோபுரங் காணப் பிழந்துபோடு''—என்றார்.

பின்னும் வைகுண்டர், ''நிலையழியா திருங்கோ நீதியாய் நின்றிடுங்கோ, உலகறிய நானுமொரு நெல்லெடுக்கு முன்னே பலசோதனையும் செய்து நடுத்தீர்ப்புச் செய்வேன்''– என்றெல்லாம் கூறி கந்தனுக்கு எச்சரிக்கையும் செய்துவிட்டு; மலர்மாரி சலமாரி தூவியே வானவர்களிசை கூறிப் பின் வர தெட்சண பூமிக்குப் புறப்பட்டார்.

உடனே புறப்படுவது ஏன்?:–தேவரும் பிறரும் வைகுண்டரே நீர் ஏன் இப்போது புறப்படுகிறீர்? என வினவினர். அதற்கு வைகுண்டர் 'கேள்வி கேளாநீசன் கெடுவதறியாமல் நாள் வழியாய்ச் சான்றோரை நியாயமில்லாதடித்தான். நான் சொன்ன புத்தி ஒன்றையும் அவன் கேட்கவில்லை. அதனால் திருவனந்தம் சென்றிருந்த நான் செந்தூர் வந்தேன்.

செந்தூரில் சிறுமை:—இங்கே;—''வெங்கப்பயல்கள் சிலர் வேசையுட ஆசையினால், என்னைக் கெணியாமல் என்கோவிலுள்ளேதான், பெண்களுடன் சரசமிட்டு எச்சிலிட்டான். ஒருவன் ஒருபெண்ணை ஒரு நப்பூரி பிடித்து, எனக் கேவல் பண்ணி ஏந்திழையாள் போகுகையில், மங்கை மனங் கலங்க வாரிப்பிடித்திழுத்து, கொங்கைதனைப் பங்கமதாய் கூறழியவே கிழித்து, வேதனைகள் செய்ய, மெல்லியவள் கோபமுற்று, நாரண கந்தா நானுனக் கேவல் பண்ணி, காரணங்களாச்சு கடைசிநாள்தானாச்சு, உனக்கு மிந்தபதிதான் உறவுகே டாச்சுதையா, செந்தூர்த்தலங்கள் சிலநாட்கள் செல்லுமுன்னே, மண்தூர்ந்து போகுமென்று மாதுமிக சாபமிட்டு, தவறாத மங்கை தானுரைத்த சாபமதால், எனக்கு இங்கே இருக்க மனங்கூடவில்லை.'' மேலும்;

''கோவிலிலே பூசைசெய்யும் குறும்பர் மிகத் துணித்து தேவியர்க்கு ஈயத் திருடுகிறார் என்முதலே, கணக்கன் முதல் நம்பூரிகள் கள்ளப்பெண்ணார்களுக்கு, இணக்கமதாய் இருந்து என் முதலைக் கொள்ளைகொண்டு போகிறார்கள்.'' - ஆகையால் இவ்விடத்தைவிட்டு — மானமழியுமுன்னே மாமுனியே தெச்சணத்தில். பள்ளி கொண்டிருந்து களியாட்டு காவடி கைக்கூலி முதலாய் நிறுத்தல் செய்து, பொறுத்தரசு தர்மம் புவியாளப் போறேனினி.'' — என்று கூறி நடந்தார்.

'தாங்க எனக்கு ஐவர் உண்டு':— உடனே பூத கணங்கள் அவரைத் தாங்கவந்தன. அவைகளை நோக்கி அய்யா, ''நீங்களெனைச் சுமந்தால் நீணிலத்துச் சோதனையில், நீங்கள் மீறி நடந்தால் தகுமோ நான் கேட்பதற்கு?'' ஆகவே வேதாளங்களே உங்கள் உதவி எனக்குத் தேவையில்லை. எனக்குப் 'பாண்டவர்களான பஞ்சவர்கள் துணை உண்டு' — என்று கூறி வழிநடந்தார்.

தென்குமரித் தலம் வந்தார்:— நடந்து தெச்சணம் வந்த வைகுண்டர் கன்னி பகவதி கோயில் கொண்ட இடம் வந்து அறைக்குள்ளிருந்த அவளை அழைத்து — 'பகவதியே நீயும் ஆதியிலென்னோடு, தேனினிய தங்கையராய்த் திட்டித்த ஏதுவினால், உன்னோடுசில உரைக்க உளம் கொண்டேன்'.

'பொன்மோகினியே! பிள்ளாய்! நான் சொல்வதைக் கேள்; நீ காணிக்கை முதலியவற்றை இனி நிறுத்திவிட வேண்டும். நான் ஒரு குடைக்குள் நாடாளப்போகிறேன்?' என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

மணவைப் பதிவந்தார்:- ''தென்காசி என்ற தெச்சண பூமியிலே, கண்காட்சி சூழக் கண்ணர் மிகநடந்தார்'' மணவைப் பதிவரும்போது:—

தவமிருக்கத் தக்க இடம்:— தேவமுனியை அழைத்து நான் தவசிருக்கத் தகுந்த இடம் ஏது? என்று வினவினார். உடனே வேதமுனிவனான 'கல்லாத கல்வி

கலைக்கியான காண்டம் எல்லாமறிந்த இயல்முனிவன்'' — ''நல்ல வைகுண்டம் நாற்பிறவியாய் வளர்ந்து வல்ல கலியுகத்தில் வாய்த்த தெச்சணுபுரியில், ஆடவராய்ச் சமைந்து ஆண் பெண் போலேயிருந்து, சுத்த கிழவரைப்போல் சூரப் பிராயமுமாய், நாலுபிராயம் நாளதுக்குள்ளேயெடுத்து தர்மத்தால் கலியைத் தன்னந்தன்னால் கரைத்து, கர்மத்தை யீடழித்துக் காந்தக் கோலமெடுத்து, உகத்து வழக்கு எல்லாமொரு தலத்தில், தொகுத்து நடுத்தீர்ப்புச் செய்து மிகத்தெளிந்து செல்ல வைகுண்டர் சீமையன்பத் தாறதையும், அல்லலகற்றி அரசாள்வதும் — அவ்வாறு அரசாளப்போகும் நீர் அதற்குத் தவசிருக்க வேண்டியதுமான பூமி 'செந்தமிழ் மணவைப் பதி'யே'' என்று உரைத்து மேலும் அப்பதியினுடைய வரலாற்றை உரைத்தார்.

மணவைப்பதியின் பழைய வரலாறு:—

''முன்னொரு காலத்தில் முத்தி விரும்பி ஒரு முனிவன் ஒரு வனத்தில் தவசிருந்தான். அவன் தவசிநிலையைச் சோதிக்க சிவனும் தேவியும் காராவும் கன்றும்போல் அவ்விடத்துக்கு வந்தனர். அப்போது சிவனருளால் ஒரு கடுவாய் கன்றான தேவியைப் பிடிக்கத் தாவியது. அப்போது பசுவாக இருந்த சிவன் அந்த முனிவன் பக்கம் ஓடி தன் கன்றைக் காப்பாற்ற வேண்டினார். இருந்த இடத்திலிருந்து ஒரு சத்தம் போட்டாலும் போதும் கடுவாய் ஓடிவிடும் என்று பசுச் சிவன் கூறினார். அப்போதும் அந்த முனி இரக்கமின்றி அசையாமலிருந்தான். சிவனருளால் வந்த கடுவாய் தேவியான கன்றை கௌவி கைலையில் கொண்டுவிட்டது. முனிவன் பின்னும் பன்னாள் தவமிருந்தான். அப்படியும் முகுந்தன் பதம்காணாமல் அவன் வருந்தி கன்றைக் காக்காத தோசம் கழிக்க தெட்சணுபுரியில் சென்று தவம்செய்ய வேண்டுமென்று உணர்ந்து இங்கு வந்து மணவைப் பதியில் தவமிருந்து தோசம் கழிந்து அருள்பெற்றான்.''

அத்தகைய பதி மணவைப் பதி. ஆகவே இங்கே — பச்சைமால் மகனே நீரும் பண்ணலாம் தவம்—என்று கூறி

ளுன். உடனே வைகுண்டர் இசைந்து ',வெல்லமர் மணவை வாரி மேன்முகத்திலே நின்று, அல்லல் நோய் பிணிகட் கெல்லாம் அறமதால் தண்ணீர்தன்னுல், தொல்லே நோய் தீர்ப்போமென்று தெட்சணுபதியில் வந்தார்.'' அப்போது முனியைப் பார்த்து—

மன்னனுக்கு விட்ட மடல்:— ''இந்தமா நகரில் வாழும் ராஜனுமறியவென்றே, விந்தையாய் அறிவு வொன்று விதித்தெழுதியனுப்பு'' என்ருர்.

முனியும் அவ்வாறே மன்னனுக்கு; ''வாலேராமச் சந்திர சூரிய நாராயணர்தானே வைகுண்டமாய் ஆயிரத்தெட்டா மாண்டு மாசியில் கடற்கரையாண்டி நாராயணம் பண்டார மென நாமமும் கூறி எளிய கோலத்தோடு தெச்சணம் பள்ளி கொண்டு தர்மமாகத் தாரணியோர்க்கு தண்ணீரினுலே சஞ் சலநோய் கர்மம் வர்மம் வாதை கோதை பயங்களேயும் பிறவிநாசமும் பொய்வினே சஞ்சாரமும் பீடைகோடை வாடை தீர்க்கவும் பிள்ளேயில்லார்க்குப் பிள்ளே கொடுக்கவும் கண் ணில்லார்க்குக் கண் கொடுக்கவும வந்திருக்கிருர். ஆகலின் எல்லோரும் அவரிட்ட சட்டம்போல் நடந்துகொள்க. ஐயா தவசியிருக்கிற ,படியால் இன்றுமுதல் நிச்சயித்திருக்கிற நாள் வரையும் பூசை புணக்காரம் சேவித்து அர்ச்சனேயோடு நீராடுதல் தீபாராதனே சாந்தி காழாஞ்சி கைவிளக்கு காவடி காணிக்கை தெருமுகூர்த்தம் கோபுரமுகூர்த்தம் திருநாள் முகூர்த்தம் குரவை குழாங்கூட்டம் மஞ்சனே குழிநீராட்டல முதலியவற்றை நிறுத்திவிட வேண்டும்''—இது நாராயண வைகுண்ட சாமி திருவாக்கு உபதேசம். கருணேயினுல் மாமுனி எழுதிய வாசகம்—என்று ஒருமடல் எழுதியனுப்பினுன்.

''உலகினில் மனுவாய்த் தோன்றி ஒரு இருபது நாளுக் கப்பால், தலேமுறை வினேகள் போக்கி சடலத்துள் ஊறல் ஒட்டி, மலேச்செந்தூர் அலேயினுள்ளே மகரத்துள் இருந்து பெற்ற, அலேகடற்கரையாண்டி நாராயணரென ஒரு வெள்ளி நாளில் பஞ்சமி கூடிய வைகறை நேரத்தில் மணவைப் பதியில் வந்தமர்ந்தார்.

தோப்புப் பதியில் முதற்பணி:—"பத்துமாதம் வரையும் பார் நடப்புள்ளதையும் மேல் நடப்பையெல்லாம் வித்தார நாரணரும் தூர நடப்பதாகக் துறந்து துறந்தே படித்தார். கண்டவர்கள் எல்லாம் கருத்தோடறியாமல் வண்டப் புலப்பமென வாக்குரைத்தே போனர்".

வைகுண்டர் தவம்:— அதன்பின்னல் மாதவனர் வைகுண்டர் தெச்சணத்தில் ஒரு 'மாவருத்து மாவடியில்'— "தவமேல் தவமெனவே தானிருந்து வையமதில்' பொறுதி சதமாய்ப் புண்ணியனர் தானிருந்து, மனுநீதமாய் வந்து மனுவைச் சோதித்தெடுக்க, தனுவை யடக்கி,

"நீதிய ரோமம் வீசி
நினைவொன்றைக் கருணை வாசி
சாதிக ளுரைக ளாறிச்
சடத்துற வாசை யற்று
வாதியாங் கார மற்று
மலசலம் மதங்க ளற்று
ஆதியைக் கருணை காட்டி
அவர்தவம் புரிந்தா ரையா!"

"கர்த்தனர் கர்த்தனுக கலியுகத் தீர்வையாக
உற்றவை குண்டசாமி ஒருகுடைக் கரசு பெற்றர்'"

அவரிருந்த தலத்தில் எல்லாச்சாதி மக்களும் வந்து மொய்த்தார்கள். அவர் எல்லோர்க்கும் நோய்முதல் துயர மெல்லாம் தீர்த்துவைத்தார். 'கோதிக் குளிக்கு மொரு கிணற்று நீராலே குறையெல்லாம் நீக்கப்பட்டது.'

சான்றோர்க்கு அறிவுரை:—பின்வைகுண்டர் தன் னைப்பணிந்திருந்த மக்களிடம் எனக்குக் காணிக்கை, கைக் கூலி எதுவும் வேண்டாம். "உற்றதுலுக்கன் வந்து உடனேடி. மற்றெரு பத்தாண்டில் வைண்டர் வருவார்"—என்ற முன்னு கமப்படி வந்தவன் நான் "முளிக்கப் பட்டது முளிச்சிருக்கும்

தன்னே! முளிக்கப்பட்டது கண்டுகொள்ளும் தன்னே' ஒரு நெல் எடுத்துடைக்க நாடு கேட்டுக்கொள்ளும் தன்னே! இரு நெல் எடுத்துடைக்க நாடு தாங்காது தன்னே! முளிக்கப் பட்டது கண்டுகொள்ளும் தன்னே!'' என்று கூறி உபதேசித் தார்.

பேயை எரித்த பெருஞ்செயல்:--பின் ஒன்றரை ஆண்டு காலம் உகம் சோதித்து வரும்போது ஓர் அநீதம் கண்டு பேயை எரிக்க வேண்டுமென்று நாராயண வைகுண்டசாமி நினைத்தார்.

உடனே வேதமுனிவனை அழைத்து பேய்க்கு விதியினைப் பாரும் என்றார். அவர் பேய்களின் விதியினைப் பார்த்து 'நாரணர் வைகுண்டமாகி நாட்டினில் வந்த உடனேயே பேய்களுக்கு அழிவு ஏற்படும் என்ற விதி இருக்கிறது'—என்று கூற உடனே வைகுண்டர் பேய்களை அழிக்கப் புறப்பட்டார்.

பேய்களின் கடைசி முயற்சி:--உடனே பேய்கள் நடுங்கி ஓரிடத்தில் கூடி சிவனிடம் செல்லத்திட்டமிட்டு முன்பு சிவனிடம் வரம் வாங்கத் துணைநின்ற முனிவனிடம் முதலில் போவோம் எனப்பேசி நாரத முனிவனிடம் வந்தன. அவர், 'இனிதுண்டமே பெரியதென்றும் பேய்களுக்கு ஆயுள் தீர்ந்து விட்டது எனவும் வேண்டுமாயின் வைகுண்டரிடம் வேண்டத் தானும் வருவதாகவும் கூறி' பேயொடு வைகுண்டரிடம் வந்தார். வைகுண்டர், 'கணக்குப்படி பேயின் காலமெல்லாம் தீர்ந்தது'. என்று கூறிவிட நாரதர் மௌனமானார். வைகுண்டர் பேய்களை 'வடமலையில் போய் தீயில் எரிவீர்' எனச்சபித்தார். அவ்வாறே பேய்கள் எரிந்தன.

'மலையரசர்கள் மாட்டிக்கொண்டார்கள்': இவ்வாறு பேய்கள் துடித்துப் பதறி எரியும்போது இறையோனருளால் காட்டுவிலங்குகளெல்லாம் கூடி ஓடி மலையில் வாழும் பேய் முதலியவற்றை அடக்கியாளும் மந்திர தந்திரம் வாது, சூது வல்ல மலையரசர் இல்லங்களைச் சூழ்ந்து கொண்டன. மலையரசர்கள் செய்வதறியாமல் திகைத்திட ஒரு குறத்தி அவர்களுக்கு 'இனி உங்கள் ஆட்சியெல்லாம்

தீரப்போகிறது. நீங்கள் தெட்சணத்தில் மணவைப் பதியில் நாராயணமே வைகுண்டமாய்த் தோன்றியுள்ள, மனு அவதாரத்தைப் பணிந்தால் உய்வீர்கள்' என்று கூற அவர்கள் மணவைப் பதி வந்து மண்டியிட்டனர். அய்யா அவர்களிடம், 'மந்திரதந்திர சாத்திரம் முதலானவற்றையெல்லாம் என் முன்னே வையுங்கள்'—என்று ஆணையிட அவர்கள் எல்லாம் வீட்டில் இருக்கிறது எடுத்து வருகிறோம் என்றுரைத்தனர்.

மலையரசர் சத்தியம்:— அதற்கு வைகுண்டர் ' நன்றது தூரம் நம்முடைய கைக்குள்ளாக சூட்சமுண்டு பிள்ளாய்'' என்று கூறி இப்போதெல்லாம் கீழ்வைத்தோம் என்று சத்தியம் கூறினால் போதுமென சத்தியமும் வேண்டி அவர்களை அனுப்பினர்.

மக்களே மனந்திரும்புங்கள்!:—பின் தன்னைப் பணிந்துநின்ற மக்களுக்கு இக்காட்சியெல்லாம் காட்டி இனி பேயால் மந்திரத்தால் உங்களுக்கு பயமில்லை. ஆகவே இனி காணிக்கைக் கைக்கூலி இவைகளைக் கொடாதீர்கள்.

"வைகுண்டர்க்கே பதறி வாழுவ தல்லாமல்
பொய்கொண்ட மற்றோர்க்குப் புத்தி அஞ்சாதுங்கோ
அவனவன் தேடுமுதல் அவனவன்
வைத்தாண்டிடுங்கோ
எவனெவனுக்கும் நீ பதறி இனிமலைய வேண்டாமே."

என்றும், இனி —

"பொய்யில்லை பசாசு இல்லை பில்லியன் வினைகள்
இல்லை
நோயில்லை நோவுமில்லை நொம்பலத் துன்பமில்லை
தோயில்லை இறைகளில்லை சுருட்டுமா ஞாலமில்லை
மையில்லை உலகத்தாரே வாழுமோர்
நினைவாலென்றார்.''

"கண்ணரைப் பிடிக்கக் கலியன் வந்தான்":— இவ்வாறு மக்களுக்கு உபதேசங்கள் கூறி, அச்சம் நீக்கி ஒரே சொல்லுக்குள் அய்யா நாட்டை ஆளத்தொடங்கும் போது இதனைக்கண்டு பொருமைகொண்ட கலியன் அவரைப் பிடிக்கவந்தான்.

சுசீந்திரத்தில்:— வந்தவன் சுசீந்திரத்தில் கூடார மிட்டு மந்திரிமார்களிடம் 'இந்த மாநிலத்தில் எனக்கெதிரியா யிருப்பவனை விசாரித்து வருக' வென ஏவினன்.

கலிப்பகை கண்டது:—அவர்கள் தாமரைக்குளம் என்ற தோப்புப்பதிக்கு வந்து விசாரித்துப் பார்த்து சாமி யிருப்பிடம் சென்று அங்குள்ள நிகழ்ச்சிகளையெல்லாம் கண்டு வந்து மன்னனிடம் 'அங்கே வேருெரு அதிசயத்தையும் காணேம். மணவைப்பதியில் மட்டும் குமுக்காயினம் பெருத்த கூண்ட சாணுரிடத்தில், வைகுண்டமாக வந்து பிறந்தோ மென்றும், மெய்கொண்ட பூமியெல்லாம் வேருெருவராளாமல், நான்தான் ஆள்வேன் என்றும் உரைபகர்ந்து, சாதிபலவும் வருத்தி வைகுண்டசாமி என்பவர் அதிசயம் நிகழ்த்துகிருர்'' என்று கூறினர். அதைக்கேட்டு மன்னன் மிக அயர்ந்தான்.

வைகுண்டர்பற்றிச் சோதிடன் கூறியது:— பின்பு அவன் சோதிட சாஸ்திரியை வருத்தி இதன் நுட்பம் கேட்டான். சோதிடனும் முன்ணுகமப்படி மகாவிஷ்ணுவே இங்கு வைகுண்டமாய் அவதரித்துள்ளார். இனி அவர் ஆட்சியே நடைபெறும் என்று கூறினன். மன்னன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

"சாணுர் குலத்தில் சாமி வருவாரோ?":— மகாவிஷ்ணு அப்படியே வந்துபிறக்க வேண்டுமென்ருலும், "போற்றி நம்பூதிரி பிராமணக் குலத்தில் பிறக்காமல் இந்த பிறர் தீண்டாச் சாண்குலத்தில் பிறக்க வருவாரோ' எனக் கேட்டுப் பரிகசித்தான்.

அமைச்சனுக்கு ஆணையிட்டான்:— பின் தன் அமைச்சனைப் பார்த்து-'சுமமா இந்த சாணுன் சாமி

யெனச் சமைந்தது எல்லாம், பம்மாத்தாய்க் காணுது; எனவே நீ ஒரு நொடியில் சென்று அவனைப் பிடித்து என் முன் கொண்டுவா' என ஆணையிட்டான்.

மன்னன் ஆணையிட, அப்போது அவ்விடத்தில் இருந்த இடையர் குலத்தில் வந்த பூவண்டர் எழுந்து வணங்கி நின்ருர். மன்னன் அவரிடம் நீ என்ன சொல்கிருய் எனக் கேட்டான்.

பூவண்டர் ஞானமொழி:—உடனே பூவண்டர் மன்ன, தேவகிவயிற்றில் கிருட்டிணன் பிறந்து இடைக்குலத்தில் வாழ்ந்ததும் அவர்;

''ஐவர்க்குத் தூதனுகி அங்கு மிங்கோடிச்சென்று, மைகுழல் சிலர்கள் தன்னை மணங்களும் மிகவே செய்த செய்திகளையெல்லாம் கேட்டதில்லையோ?'' ''சாணனைக் குலத்தில் மாயன் சார்வரோ என்றெண்ண வேண்டாம், பாணனுய்த் தோன்றிநிற்பார் பறையனுய்த் தோன்றிநிற்பார், தூணெனத் தோன்றி நிற்பார் தேவனுமாய்த் தோன்றி நிற்பார், ஆணெனத் தோன்றி நிற்பார் அவருருக் கேட்டிலீரோ'' என்றும்; அதுபோல இவரும் சாதாரணமானவர் அல்லர் என்று கூறி, இங்கு அவரித்திருப்பது நாராயண வைகுண்ட மூர்த்திதான். நாம் இவ்விடம் விட்டு நம் ஊருக்குப் போவோம் என்ருர்.

பூவண்டருக்குச் சிறை:— உடனே மன்னன் வெகுண்டு அவரைக்கண்டித்து, ''நித்தமுன்னுலே இலட்சம் தேடிய பொன்களிட்டு, சித்திரச்சாலை தோறும் தர்மமும் அளித்து நாமள், சித்திரைத் திருநாள் நித்தம் செய்கிற குலத்தை விட்டு'' கேவலம் இந்த சாணுன் குலத்தில் சாமி தோன்றுவாரா? எனக்கூறி, நீ ''கர்ப்பிடிச்சாணுன் கையில் கைக்கூலி வாங்கிக்கொண்டு இப்படி மழுப்பவந்தாய் ஏதடா செய்தி?'' என்று கூறி அவரைச் சிறையில் போட ஆணையிட்டான்.

"நாரணர் உரைத்தார் சொன்னேன்":— உடனே அந்த இடையன் மன்னா நான் சொல்வதில் மழுப்போ, மறைப்போ இல்லே. நீ என் கருத்தை மீறிச் சென்றால் உனக்கு அழிவே மிஞ்சும்—என்றார்.

மேலும், "ஆனையும் படையுமுன்றன் அரண்மனைக் கோவில் காவல், சேனையும் படையும் வியாழச் செல்வமும் சிறப்புமெல்லாம், ஏனமும் மிகவே தோற்று எரிந்து நீகரிந்து சாவாய், தானிதைச் சொல்லவில்லே நாரணர் உரைத்தது என்றார்.'

கௌடனுக்குக் கட்டளை:—மன்னன் ஒன்றையும் கேளாமல் அவரைச் சிறையிட்டுவிட்டு அந்த சாணனைப் பிடித்துவருவார் யார்? எனவினவ அக்குழுவில் 'கௌடன்' என்ற கெவிடசாஸ்திரி 'கடிகன்' என்பவனையும் அனுப்பவேண்டும் என்று கூற மன்னன் அவனுக்குச் சிறுபடையும் கொடுத்து 'நீ சென்று அத்த சாணான் தன்னைச் சூழ்ந்து நூல் கயிற்றால் கட்டி விழிப்புடன் நமது முன்னே கட்டுடன் கொண்டுவா' என்று கூறி வரிசையும் கொடுத்தான்.

கள்ள சுவாமி:— கௌடனும் சிறுபடையோடு தோப்புப்பதி நோக்கி வந்தான். இவன் வரவையறிந்த வைகுண்டர், ' கறணிக்கமொன்று கருத்தில் மிகநினைத்து, நன்மையதாய்ச் சொல்லி நாடுவது மெச்சாதி? தின்மையதாய்ச் சொல்லிச் சிரிப்பதுவு மெச்சாதி? என்று நாம் பார்ப்போமென்று மனதிலுன்னி, ஆடையணியாமல் அரைக்கயிறு மில்லாமல், நாட்டைக் கெணியாமல் நடந்தார் கடல்நோக்கி, ஓடத்துணிந். தார் ஒருவேசமுமிட்டு பண்டு தாம்பிறந்த பாற்கடலை நோக்கி அவரோடு, செல்லமனுவோர் திருப்பாதமும் தொழுது கூடி நடந்தார் குருவே குருவேயென! தேடிவந்த கௌடன் படையினர் — "பதறியிவன் போறான் படைவருகுதென்று சொல்லி, கதறிமிக ஓடுகிறான் கள்ளசாமியிவனும், சுவாமி யென்றால் நருளுக்குத் தோற்றுமிக ஓடுவானோ? நாமிவனைத் தேடிவந்து பெருமை கெட்டோம்" என அவரைப் பரிகசித்தனர்.

தந்தையைச் சென்று கண்டார் தனயன்! சுவாமியோ தன் அன்பர்களைக் குறித்து, 'எப்போதும் வாழ் வார் எனக்காகும் மக்களெல்லாம்' — என்று வாழ்த்தியருளி ''பண்டெனைப் பெற்றதாதா பாற்கடலுள்ளே யென்னை, சென்றிட அழைக்கார் நீங்கள் செகல்கரை தனிலே நில்லும்''— என்று கடலினுள் சென்று நாராயணமூர்த்தியை வணங்கி, அப்பனே ஒப்பில்லாத அலைகடல் துயின்ற மாயா! நான் மணவைப்பதிக்கு வந்து ஆண்டுபல ஆகிவிட்டதே என விச னத்துடன் கூறினர்.

மகனுக்கு நல்லுரை:— அவர் மகனே கவலை கொள்ளாதே. உனக்கெனவே சிம்மாசனம் வளர்கிறது. ''வண்ணப் பதியின் அலங்காரம் வகைகளின்ன தென்று சொல்லி, எண்ணத் தொலையாது என்மகனே இரத்தின சிங்கா சனப்பவிசு கண்ணைப்பறித்து நீசனுடைய கருவை யறுத்துக் கலியழித்து, எண்ணும் வளர வாழவைப்பேன் என்னுணையிது நிசம் மகனே '' என்று உறுதியளித்து, ''நீ இப்போது தவமிருந்த இடத்துக்குச் செல். சென்ருல் கலியன் உன்னை உலகமறியக் கட்டியிழுத்துச் செல்வான்.

நீ மூன்றேமுக்கால் மாதம் சிறையில் இருந்து கலியைச் செயித்து மீள்வாய். கண்டாய் கண்டாய் உடன் புதுமை கண்ணே உனக்கு நற்காலம்! அதன்பிறகு உனக்கு காட்சிச் சிறப்புக் கலியாணம் கவரிவீசிக் கொலுவாரம் காட்சிக் கணக்கு முன்வருத்திச் சந்திர வர்ணக்கொடி நிறுத்தி, வாச்சி உனக்குத் திருநாளும் வாய்த்த டம்மானம் முழங்க, காச்சி, உனது முன்காணும் கருணை மகனே கலங்காதே! 'பல்லக்கேறி தெருவீதிப் பகலில்தேரு நீ நடத்தி செல்லப் பதிகள் மிக மூகிழ்த்துத் திருநாள் கண்டு மகிழ்ந்திருநீ! செல்லக்கொடிகள் மரம்நிறுத்தி வருவாய் நித்தம் வாகனத்தில், பொல்லாக் கலியன் கண்டுழைந்து பொடிவான் நித்தம் மடிவானே''. என்றும்கூறி ஆசிவழங்கினர். அதோடு இவ்வதாரக்காலத்தில் வைகுண்டர் வாழ்வில் நடக்கவிருக்கும் காரியங்களையும்கூறி ''காணுவோர் காண்பார் காணுதார் வீணுவார், தாணுவே

நீயொருவன் தானுக ஆண்டிருப்பாய்! பதருதே போயிருநீ தவசியிலே!'' என்றுகூற வைகுண்டர் வந்து மீண்டும் தவசில் இருந்தார்.

'சாமி கைது! சான்ருேர் போர்க்கோலம்!! உடனே கௌடன் படையொடுவந்து அய்யாவைப்பிடித்தான். சாட்டையால் அடித்தான். அதுகண்டு சூழ்ந்திருந்த மக்கள் வெகுண்டு கௌடன் படையொடு போருக்கெழுந்தனர். உடனே வைகுண்டர் — 'பொறுத்திருந்தவரே பெரியோராய் ஆகும் மக்கா, அறுத்திட வென்ருல் அபூர்வமோ என் தனக்கு?' — நீங்கள் பொறுத்திருங்கள் என்றுகூற அவர்கள் பொறுமையடைந்தனர்.

வைகுண்டருக்கு இழைத்த கொடுமை:— கௌடனும் அவன் படையினரும் மீண்டும் வைகுண்டரைத் துன்பப்படுத்தினர். வைகுண்டரைக் கட்டியிறுக்கி கீழே போட்டிழுத்து மிதித்து தலைமுடியைப் பிடித்துத் தாறுமாரு யிழுத்து பலவாறு துன்புறுத்தினுன். ''பனைச்சிரங்கு இன்னும் பற்றித் தெளியலையே, உனைச் சாமி என்ருல் ஒருவருக்கும் ஏராதே!'' 'நாராயணசாமி என்றது நீதானு? உன்னை யானைக்காலில் கட்டிக் கொல்வோம். நீ சாமி என்ருல் இந்த கயிறு தானே அருதா? நீ சாமி என்ருல் எங்களையெல்லாம் மருளச்செய்து அழித்துவிடு பார்க்கலாம்' — என்றெல்லாம் கூறிப் பரிகசித்தனர். ஐயா கவிழ்ந்து கண்டு களிகூர்ந்தே மகிழ்ந்து வழிநடந்தார். சான்ருேர் புலம்பினர்.

சான்ருேருக்கு ஆறுதல்:— அப்போது அய்யா அவர்களிடம் ''ஒன்றுக்கும் அலையவேண்டாம் உபகர நாதனுணை என்றுக்கும் மலையின்மீது ஏற்றிய தீபம்போலே, கன்றுக்குப் பாலுபோலும் கண்ணுக்குப் புருவம்போலு'' உங்களை நான் காய்பேன் என்று கூறினுர்.

கடவுளைக் கல்லெறிந்தனர்:— கௌடன் படையினர் ஐயாவை ஒரு கள்ளனைக் கட்டிக்கொண்டு போவது போல நீசக் குலங்கள் வாழும் தெருக்கள் வழியே கொண்டு

சென்றனர் சிறு குழந்தைகள்வரை பைத்தியக்காரன் என்று கூறி கல் கட்டி எடுத்து எறிந்தனர். சாமியை நீசர்கள் சுசீந்திரம் கொண்டுவந்தனர்.

சுசீந்திரத்தில் சோதனை:— சுசீந்திரத்தில் வந்த உடன் இவரைப் பரீச்சைபார்க்க எண்ணி நீசன் ஒருவருமறியாமல் ஒரு மோதிரத்தைக் கழற்றி இன்னொருவன் கையில் கொடுத்து 'இவன் கைக்குள்ளே இருப்பதென்ன?' சொல் என்றான். அதற்கு இப்போது விடை சொல்வது சான்றோர்க்குத் தீங்காய் முடியும் என எண்ணி அய்யா அப்போது மவுனமாக இருந்தார்.

பாலான நஞ்சு!:— கௌடன், உடனே இவனைச் 'சறடன்' முன்னால் கொண்டுபோங்கள் எனச் சேவகர்க்குக் கூற அவர்கள் சறடன்முன் கொண்டுமோய் நிறுத்தினர்.

அவன் இவரைச் சோதிக்க எண்ணி சாராயத்தில் ஐந்து வகை நஞ்சைக் கலந்து பாலென்று குடிக்கக் கொடுத்தான். அவரும் பாலாக வாங்கிப் பருகித் தீங்கின்றி இருந்தார்.

சுசீந்திரத்தில் இருநாள் சிறை:— இதைச் கண்டு மருண்ட சறடன் இவனைச் சிறையில் அடைப்போம் என்று கூறி மொழு மொழுவென்று புழுக்கள் நெளியும் மோள்குழியான சுசீந்திரம் டாணாவில் சிறைவைத்தான். அய்யாவும்,

"ஏழைகளுக் காக ஈரோன் ஒருநாளாய்
மீளாச் சிலுவையிலே முள்ளி லறைபட்டு
மரித்துப் பிறந்ததுபோல மாயக் குருநாதன்
ஏழைச் சான்றோர்க் கிரங்கி இருந்தார்
சிறையினிலே".

தக்கலையில் ஒருநாள் சிறை:— மறுநாள் கலியன் மேற்கே புறப்பட்டான். இவரையும் மேற்கே கொண்டுவருக எனச் சேவகர்க்கு ஆணையிட்டான். சேவகர் வைகுண்டரைக் கோட்டாறு வழியே கொண்டுசென்றனர்.

கோட்டாறுப் பாடகையும் கடந்து பத்மநாபபுரம் வழியாகத் தக்கலைக்கு அழைத்துச் சென்றான். அய்யாவைத் தக்கலைப் புரையிலும் சிறைவைத்தனர்.

அனந்தபுரச் சிறையில் அய்யா:-அங்கிருந்து அவரை அழைத்துக்கொண்டு திருவனந்தபுரமேகினர். முன்பு அனந்தபுரத்திலிருந்து புறப்பட்டதை நினைத்து அய்யா உடன் சென்றார். அங்கே காவலில் வைத்தார்கள். நீசன் சிறைக் காவலனிடம்—''போகாதபடிக்கு இப்பேயன் தனை விலங்கில் போட்டுவை என்றும், புள்ளி பதனம் என்றும் கோர்ட்டுக் காரர் தனக்கு'' உத்தரவு கொடுத்தான். காவலர் அய்யாவை விலங்குமாட்டிச் சிறையில் வைத்தனர்.

சிறையிலே பக்தர் கூட்டம்:—சோலையில் சிறையில் அய்யா இருப்பதையறிந்த மக்கள் அங்கு வந்து தொழுதனர். அவர் அங்கும் பிணிநோய் தீர்த்தார். சந்ததி தந்தார் குட்டம் முதலியன போக்கினார். மக்கள் அவரை வணங்கி அவர் பெருமையைப் பேசினர். இவர் சிறையில் இருப்பது ஏதோ ஒரு காரணத்துக்காகவே என்று பெண்களும் பேசிக்கொண்டனர்.

பகைவனுக்கு அருளிய பண்பாளர்:மேலும் அய்யாவைச் சோதிக்கக் கருதிய கலிமரசன் சேவகரை அழைத்து. 'இவனைச் சோதிக்க கடுவாய் வேண்டும். நீங்கள் போய் ஒரு மணிக்குள் கடுவாயோடு வரவேண்டும் தப்பினால் உம் தலை தப்பாது',—என ஆணையிட அவர்கள் பயந்து; அய்யாவைப் பணிந்து அய்யாவே உம்மைச் சோதிக்க மன்னன் எங்களைக் கடுவாய்க் கொணர ஆணையிடுகிறான். கடுவாய் சீக்கிரம் கிடைக்க நீரே அருள்புரிய வேண்டுமென்று வேண்டினர். அய்யாவும் அவ்வாறே ஆக அருளினார்.

காட்டுக்குக் கடுவாய் பிடிக்கச்சென்ற சேவகர்கள் வலை வைத்துக் காடு கலைத்தனர். ஒரு கடுவாய் மாயன் அருளால் வலைக்குள் நுழைய அவர்கள் அதனை அமர்த்திக் கூட்டினுள் அடைத்து. தாமரைக்குளத்தூர் சன்னியாசி அருளால் நாமும்

பிழைத்தோம். நம் உத்தியோகமும் பிழைத்தது''—என்று மகிழ்ந்து ஓடுவாயை மன்னனிடம் கொண்டுவந்தனர்.

புலிக்கூண்டுக்குள் கலிப்பகைவர்!:— சாமியைச் சூழ இருந்த சான்றோர் கலங்கினர். அய்யா மேல்நடக்க விருப்பதை உணர்ந்து மகிழ்ந்திருந்தார். மன்னன் அன்று கடுவாய்க்கு இரைபோடாமல் அடைத்துவைக்கச் சொல்லி ஆணையிட்டான்.

மறுநாள் சாமியைச் சோதிக்கத் தொடங்கினர் இலட்சக் கணக்கான மக்கள் சோதனை பார்க்கக் குழுமிட்டனர். கலியரசன் அய்யாவைக் கடுவாய்க் கூண்டுக்குள் போகவிட்டான். அவர் கடுவாய்க் கூண்டுக்குள் போக கடுவாய் அவரைக் கொல்வ தற்குப்பதில் வாலை மடக்கி வலம்வந்தது. அவருக்குப் பணிந்து படுத்தது அவர் காலடியில்! உடனே மன்னனின் சேவகர்கள் வெடியால் குத்தினர். அது எழ மறுத்தது. பின்னும் ஈட்டியால் குத்தினர் கடுவாய் ஈட்டியைப் பிடித்துக் கொண்டு ஈட்டியைப் பிடித்திருந்தவனைத் தள்ளிவிட்டது. ''விட்டிடவே அருகில் நின்றிருந்த வேதியனைக், குத்தியதே ஈட்டி குடல் பீற அம்மானை!''

வேதியன் இறந்தான். கலியர் மிக வருந்தினர். இவ்வளவும் நடந்தபின் மன்னனின் உள்ளுணர்வில் கலக்கம் ஏற்பட்டது. மன்னன் தனக்குள் 'தோசம் ஒன்று ஏத்தோம் எனச் சொல்லி மிகப்போனான்'' சோதனை பார்க்கவந்த மக்கள் பலதிசையிலும் இச்செய்தியினை யாருமறியும் வண்ணம் கூறிப் பரப்பினர்.

பூவண்டர் மீண்டும் அறிவுரை:— இதற்கிடையில், முன்னால் வைகுண்டருக்காக ஞாயத்தை எடுத்துப் பேசியதற்காகச் சிறைப்பட்ட பூவண்டர் விடுதலை பெற்றிருந்தார். பூவண்டர் முன்னே ஒரு யுகத்தில் சூரிய நாராயணருக்கு அன்னம் — அமுது — பால் அருந்தக்கொடுத்து அருள் பெற்றவர் ஆய்குடியில் தோன்றியவர். அவர் இப்போது மீண்டும் மன்னனை அணுகி, சுவாமியைச் சிறைவைத்திருப்பது

ஞாயமல்ல......... நம்முடைய இராச்சியத்தில் எங்களுட தன்னினத்தில், எம்முடைய ஆளாக இருக்கின்ற இச்சாணுன், சாணுரில் நல்ல தன்மைமிகு மானம் உள்ளான் கோணு மனமுடையோன் குணமுடைய நல்லவன் காண், நேர்மை ஒழுங்குள்ளான் ''... ஆகவே மன்ன இரங்கி இவரை விட்டுவிட வேண்டும் என்று வேண்டினர்.

வாக்குறுதி தந்தால் விடுதலை:— மன்னன், 'இவனை நாம் விட்டுவிடுவோம். ஆனல் சில வாக்குறுதிகள் எழுதித் தரவேண்டும்'—என்ருன். உடனே பூவண்டர் என்ன எழுதித் தரவேண்டும் எனக் கேட்டார்.

அப்போது அரசன் எல்லோருமே கேட்க, ''இப்போது இவன் இனத்தில் எத்தனை பேர்க்காணுலும், ஒப்போடு உறவா ஒத்திருந்து வாழ்வதல்லால் மற்றுமொரு சாதிகளை வாவென்று உரையாமல், இனத்துடன் சேர்ந்து இருப்பேன் நான் என்று சொல்லிக், கனத்தோ டவனும் கைச்சீட்டு எழுதி வைத்து விட்டுப் போகச்சொல்'' என்ருன். இதற்குப் பூவண்டர் இசைந்து வைகுண்டருக்கு உரைத்தார்.

சிறையிருப்பேன்! சீட்டு எழுதேன்!!:— உடனே வைகுண்டர் கையில் ஒரு சீட்டு கொடுக்கப்பட்டது. அவர்;

> "கைச்சீட்டை வாங்கி கைகொண்டு தான்கிறி
> வச்சிக்கோ என்று மண்ணில் மிகப் போட்டார்".

கீறி எறிந்த ஓலையைக் கலியன் பொறுக்கி கொண்டான். அய்யா அப்போது, 'நான் போகும் காலம் நானறிவேன் போவேன்' என்றுரைத்து தன் சான்ருேர் மக்களைப் பார்த்து ''மாசிப் பத்தொன்பதிலே கிழக்கு நாம் போவோம்''—என்று கூறினர்.

மாசி 19-வரை இவரை வைத்திருந்தால் கேடு விளையும் என்று அஞ்சிக் கலியன் உடனே அவரை விடுதலை செய் தான்.

மீண்டார் வைகுண்டர்!: – அய்யா தான் கூறிய படி மாசி 19-ல் புறப்பட்டார். சான்ேறார் மக்கள் தொட்டில் கட்டி அய்யாவைச் சுமந்துவந்தனர். அதைக்கண்டு கலியர் பரிகசித்தனர். அய்யா மீண்டும் தாமரைப் பதிக்கு வந்து சேர்ந்தார்.

சான்ேறார் தவம்:— வைகுண்டர் தாமரைப் பதியில் அமர்ந்து தனக்குரிய காலம் நெருங்கிவருவதை உணர்ந்து சான்ேறாரைத் தவத்துக்கு அனுப்பவும்—நாராயணர் கூறிய படி எல்லாச் சிறப்பும் நடத்தவும் மனதில் நினைத்தார்.

அந்நினைவு சான்ேறார் மனதிலும் தோன்றவே அவரெல் லாம் வந்து அய்யாவைத் தொழுது தாங்கள் தவமிருக்க விரும்புவதாகக் கூறினர். அய்யாவும் அதற்குச் சம்மதித் தார். தவமிருக்க விரும்பும் சான்ேறாரிடத்தில், ''மூணு நேரம் துவைத்து உச்சியொருநேரமதாய், வேணும் பச்சரிசி வெற்றிச் சிறுமணியும், வேகவைத்து நன்றாய் விரைவாய் மணலில் இட்டு, தாகம் இல்லாமல் தவசிருக்க வேணும்''— என்று கூறிடச் சான்ேறாரும்;

''பெண்ணும் ஆணும் பிறந்த பிள்ளை தன்னோடும், சூலி இளம்பிள்ளை திரண்ட மாதும்''—சேர்ந்து வீடு மனை மறந்து வந்து விலைகள் செய்து தவத்துக்குப் புறப்பட்டனர். அவர்கள்

''மண்ணுடன் மனைகள் ஆசை
மாடுடன் வீடு ஆசை
பெண்ணுடன் பொருளின் ஆசை
பூதவப் பொன்னின் ஆசை
எண்ணுடன் எழுத்தின் ஆசை
இலகுபொல் லாசை வேசை
ஒண்ணுடன் ஆசை நீக்கி
உடையவன் ஆசை கொண்டார்''

இத்தகுதியோடு தவம் மேற்கொண்ட அவர்கள் துவார கைப்பதியின் வடவாசலாக இருக்கும் வாகைப்பதி என்னும்

இடத்தினை அடைந்து கடலில் மூழ்கித் தவம் மேற்கொண்டனர்.

''உவரி நீர்துவைத்து உவரி நீர் குடித்து
உவரி நீர்தன்னில் உற்ற அன்ன மேசமைத்து
உச்சி ஒரு நேரம் உணவு மிகவருந்தி
விடிய ஒருசாமம் உகப்பாட்டும் ஓதி''.........

அவர்கள் தவத்தினைச் சிறப்பாக நடத்தி வந்தனர்.

தவச் சோதனை:—அய்யா இவர்கள் தவத்தையும் சோதிக்க நினைத்து தெள்ளு, பேன், சிரங்கு, நண்டு முதலியவற்றை அவர்கள்மேல் ஏவிவிட்டார். அவர்கள் தாங்க முடியாத துயரம் கொண்டனர். கரையிலும் வாழ முடியவில்லை. கடல் அலைவாயின் உள்ளும் நுழைய முடியவில்லை. ஒருமுறை கடல் அலையின் கரையில் நின்ற இரு பெண்களின் ஆடையையும் கடல் கவர்ந்து போயிற்று, இவ்வாறு ஆறு மாதமாக அவர்கள் துயரப்பட்டனர்.

முட்டப்பதியில் தவக்குழு:—அதன்பின்பு தவம் இருந்தவரில் ஒருவர் கனவில் அய்யா தோன்றி ''இதின் நேர் தெற்கு இருக்கும் ஒருபதிதான், முட்டப்பதி நாடு முகுந்தன் முன்னாள் ஆண்ட தலம், அங்கே செல்லுங்கள்''—என ஆணையிட்டார். அனைவரும் மகிழ்ந்து முட்டப்பதிக்கு விரைந்தனர்.

விரத மாற்றம்:—ஆறு மாதம் வாகைப்பதியில் அருந்தவம் புரிந்து முட்டப்பதிக்கு வந்த தவத்தோர் ''சூழ அணியாய்ச் சுற்று மதில்போலே, நீழ அரங்குவைத்து நெருங்கப் புரைகள் வைத்து, ஓர்திசையில் வாயில் ஒன்ருகவிட்டு'', பண்டை ஆசார முறைகளை மாற்றி நல்ல நீரில் குளித்து அவித்த நெல்லரிசியில் சமைத்து உண்டு கனிகாய் புசித்து பக்தியாய் வாழ்ந்தனர்.

மற்றவர்கள் பொருமை கொள்ளும் அளவுக்கு இவர்கள் தவவாழ்வு சிறந்திருந்தது. இவர்கள் இருக்க வேண்டிய

காலம்வரைத் தவம் இருந்தவுடன் அவரவர் வீட்டுக்கு அனுப்பி விட அய்யா உளம்கொண்டார்.

தவத்தோர் மனமும் அவ்வாறே எண்ணியது. ஆயினும் வீடுகூட இல்லாத நிலையில் இனி திரும்பிச் சென்று பயன் என்ன? நம் தவவாழ்வுதான் சிதையும் என எண்ணி அவர்கள் முட்டப்பதியிலேயே தங்கினர்.

துறவோர்க்குத் துயர்:— அவர்களை வீட்டுக்கு அனுப்ப உளம்கொண்ட பின்னும் அவர்கள் அங்கே தங்கியதால் அய்யா எண்ணப்படி அவர்களுக்கு உணவுப் பற்றுக் குறை ஏற்பட்டது. அவர்கள் அதையும் பொருட்படுத்தாமல் ஒருவேளை மட்டும் உண்டு வாழ்ந்தனர். உடனே அய்யா அவர்கள்மேல் வைசூரியை ஏவினர். அதில் சிலர் மடிந்து விட்டனர். உடனே அவர்கள் அஞ்சி இனி நாம் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்கை அய்யாவிடமே சென்று கேட்போம் என முடிவுபண்ணி மணவைப் பதிக்கு வந்து மண்டியிட்டனர்.

தொண்டர் தொண்டன்! துறவோர் துணைவன்!! :- அய்யாவும் அவர்களுக்கு நல்லியல்பு செய்யவேண்டும் என எண்ணி தானே அவர்களுக்காகப் பிச்சை ஏற்க முன்வந்தார். கோட்டைக் கணக்கில் நெல்லும் பிற பொருட்களும் குவிந்தன. அதைத் தவத்தோர்க்கு உதவினர். பின்பு, இந்த 'துவையல் பந்தித் துறவு கூட்டத்தார்'க்கு சான்றோர் மக்கள் ஒவ்வொருநாளும் விருந்து படைக்கும் வழக்கம் உருவாயிற்று. அதுமுதல் தவத்தோர் உணவுக்குக் குறைவின்றி வாழ்ந்தனர்.

முட்டப்பதியிலிருந்து அழைப்பு:- இவ்வளவு அரும்பணிகளும் முடிந்தபின் ஒருநாள் நாராயணரும் இலட்சுமி தேவியும் முட்டப்பதியில் இருந்துகொண்டு இரு முனிவர்களை அழைத்து 'நம்முடைய பாலன் நல்ல வைகுண்டரை' இங்கழைத்து வருகஎன ஏவினர்.

முனிவர் வந்து வைகுண்டரைத் துதித்து—நாராயணர் அழைப்பினைக் கூறினர். அய்யா 'அன்று இரவில் நன்றினிய

சீடன் நாலுபேர் தானறிய' உடனிருந்த இரு முனிவர்களும் சேர்ந்துவர முட்டப்பதிக்குப் புறப்பட்டார். முனிவர் நால்வரும் வைகுண்டரைத் தொட்டிலில் வைத்துத் தூக்கிக் கொண்டு மாயன்முன் விட்டனர். மாயன் தன் மகனை ஆவி அணைத்துக் கலியுகத்தில் ஆருண்டு அரிய தவம்புரிந்த செய்தியை யெல்லாம் கேட்டார்.

தந்தை தந்த வரம்:- ''நன்றி சற்றுமில்லா நாற வெறுங் கலியில்'' — அய்யா பட்டதுயரம் எல்லாம் கேட்டு நாராயணர் தம் மகனிடம்,

''கண்ணே மணியே கருவிளமே கனகமணியே ரத்தினமே, விண்ணே ஒளியே கற்பகமே வேதச்சுடரே விளக்கொளியே, மண்ணேழ் அளந்த மலர்ப் பதத்தில் வந்தே குதித்த மலர்க் கொழுந்தே, இண்ணே முதலா உனக்கு நல்ல இயல்பே ஆகுது என்மகனே,' — என்று கூறிக் கடலினுள் அழைத்துச் சென்றார். சென்றபின்னும் இவர் தவத்தருமையை முனிமாரிடம் கேட்டு மனம் மகிழ்ந்து பாற்கடலில் மகனை நீராட்டி அமுதருத்தி 'செல்வ மகனே இனிநீ திருநாள் நடத்திப் பவுசோடு இருப்பாய்' என வரங்கொடுத்தார்.

மகனே மேலும் நீ, ''நல்லாண்டு தேதி நல்ல திவதம் பார்த்து, தெய்வன்னி எழுவரையும் மணம்முடித்துக்கொள். பணிவிடைகள் செய்கின்ற சீசனையும் பார்த்துக்கொள். வேறு கன்னியர் சிலரும் உண்டு. அவர்களுக்கு உகந்த வேடமிட்டு அவர்களையும் மணந்துகொள், பாலர் வீடுகளுக்குச் சென்று விருந்தும் கொள். நீ பூமடந்தை வீட்டில் புகுந்து கொலு விருந்து தரணியில் வந்தவுடன், நான்வந்து உன்னை எடுத்துத் தலைவனாக்கி திருவம்பலமும் அருளி, பல பதிகள் துவக்கி வைத்து ஆட்சியும் தருவேன்'' என்றார்.

இவ்வரமெல்லாம் பெற்ற வைகுண்டர் கடலைத் தாண்டிக் கரையில் வந்தார். ''அலைவாய்க் கரையில் ஆதி வருமுன்னே நிலையான சான்றோர் நிரம்பவந்து கூடினர்.''

ஆ. வைகுண்டர் திருமணங்கள்

ஏழு கன்னியர்கள்:- எல்லோரும் சேர்ந்து தொட்டிலில் வைத்து எம்பெருமான் தன்னை மணவைப் பதியில் சேர்த்தனர் அய்யா பள்ளி கொண்டிருந்தார். அப்போது சப்த கன்னிமாரை மணங்கொள்ள மனங்கொண்டார். உடனே பற்பல சாதியைச் சேர்ந்த பெண்களும் ஆண்களும் முறையே தாங்கள்—'பகவதி', 'மண்டைக்காட்டாள்', 'வள்ளி', 'தெய்வானை', 'மாயன்', 'பிரமன்', 'காலன்' எனத் தத்தமக்கு ஒவ்வோர் பெயர் கூறிக்கொண்டு ஆடிக்கொண்டு அய்யா முன் வந்தனர்.

மாயன் அவர்களின் மாயம் அறிந்து மனதுள் சிரித்து அவர்களை 'வைகுண்டம் மன்று குடைக்குள் ஆளவரும் வரைக்கும் சிறையில் இருங்கள்' என வடவாமுகத்தில் சிறையிட்டார்.

அன்னையரை அழையுங்கள்:- பின்பு சப்த கன்னிமார் எழுவரையும் மணம் முடித்து மதலை கொடுக்க நிச்சயித்து தம்மருகில் நின்ற சான்றோரை அழைத்து, 'சான்றோரே உங்களுட தாய்மார் உற்ற கன்னிமார்களை நான் மணம்புரிய வேண்டிய காலம் வந்தது'. அதனால் ''நால்திசையும் நீங்கள் நடந்து சத்தமிட்டு, மாலதியப் பெண்ணை வரவழைத்து வாருமென்றார்'' உடனே சான்றோர் தெருவில் நின்று அன்னையரே, 'தாழாமல் வாருமென்று சத்தமிட்டழைக்க - கன்னியர் எழுவரும் குரல் கொடுத்துச் சான்றோரோடு சேர்ந்து அய்யாவின் முன் வந்தனர்.

கன்னியர்க்குச் சோதனை:- அய்யா சான்றோரைப் பார்த்து இப்பெண்களைச் சோதிக்க வேண்டுமென்று கூறி ''கன்னிதானோ இவர்கள் கள்ளிகளோ பாருமென்றார்.'' சான்றோர், சோதிக்கத் தம்மால் ஏலாதெனக் கூறினர். பின் ஐயா அவர்களைக் குமைத்து உரையாடினார். நான் உங்களைக்

கண்டதுமில்லை கேட்டதுமில்லை எனக் கூறினர். உடனே ஏழுவரில் மூத்த 'சாஸ்திரக் கன்னி' தன் தங்கையரைக் கண் காட்டி ''இவர் 'வார்த்தையில் சோற்றைக் குழைக்கிருர்.' இவரை அடர்ந்து பிடியுங்கள் என்ருர். அவர்கள் அய்யாவை அடர்ந்து பிடித்து விடமறுத்தனர்.

உடனே அய்யா நான் உங்கள் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு நொடிப்பொழுதில் வருகிறேனென்று விடுபட்டார். பின் ''உங்கள் பிள்ளைகள் காட்டில் பிறந்ததென்ருல் காட்டில் போய்ப் பாருங்கள்''—என்ருர். அவர்கள் பிள்ளைகளைத் தாருமய்யா என மறுகிக் கேட்டனர். பிறந்த பிள்ளைகளை நாங்கள் பார்த்ததுகூட இல்லை. வெட்கத்தால் தலை கவிழ்ந் திருந்துவிட்டோம். எனவே நீரே தரவேண்டும்'' என வேண் டினர்.

வைகுண்டருக்கும் வனிதையர்க்கும் நெடுநேரம் விவாதம் நிகழ்ந்த பின்னும் மங்கையர் அவரை விட்டகலவில்லை. பின் அவர் அவர்களிடம், 'பாலரைக் கேட்கும் பாவைமாரே, முதலில் நமக்கு மணம் முடியவேண்டும். இப்போது இரவாகப் போகிறது. நீங்கள் நாளை காலை வாருங்கள். திருமணத்தை முதலில் நிகழ்த்துவோம்—என்று கூறி அனுப்பினர்.

திருமண ஏற்பாடு:—பின்னர்தென்றலுக்கும் மேகத் திற்கும் தேவர்க்கும் சங்கத்தார்க்கும் மணச்செய்தி அறிவித் தார். அனைவரும் வருகைதந்தனர்.

திருமணத்திற்காக 'எமன் முதலியோர் கால்களாகவும், பக்கம் பதினைந்தும் வளைப்பரப்பாகவும் வேதங்களை மேற் கட்டியாகவும் சூரியனை விளக்காகவும் வானக்காயான நட்சத் திரங்கள் அலங்காரப் பொருட்களாகவும் உடைய பந்தல் ஒன்று கட்டப்பட்டது. இதனைத் தேவர்கள் கட்டினர். இப் பந்தலில் மணமேடையாகச் சிவன் அமைந்தான். கன்னியர் திருமணத்திற்கான வெள்ளிக்கிழமை அந்திக் கருக்கல் நேரமும் வந்தது.

கடவுளுக்குச் சீதனமா?:—கன்னியர்களும் சான் ருேரும் பந்தலில் வந்துநிற்க, ஐயா சான்ருேரிடம் எனக்கு

என்ன சீதனங்கள் தருகிறீர் எனவினவினர். உடனே சான்றோர் கடவுளுக்கு மனிதர் சீதனம் தரமுடியுமா?

“மீண்டடிமை முக்காலும் உமக்கு நாங்கள்
விலையடிமை யாமேனும் காண விரையமாலே
பாண்டவரைக் காத்து ரச்சித் தாண்டாறிபோலே
பாவையரும் மக்களும் உம்பக்கம் தானே”

எனக்கூறினர்

அன்னையரைக் கைப்பிடித்துப்பிள்ளை தர வேண்டும்:—அய்யா அமைதியுற்று, பின் சான்றோர்களைப் பார்த்து நீங்கள் கைப்பிடித்துத் தாருங்கள் எனக் கேட்டார். அதற்கு அவர்கள் வைகுண்டர்க்கு நாங்களா கைப்பிடித்துத் தருவது? அன்னையரைக் கைப்பிடித்து பிள்ளைகள் தருவது எங்காவது உண்டா? என அதிசயித்து, பின் கைப்பிடித்துக் கொடுக்க ‘‘சாந்தகுலச் சான்றோர்கள் தழைத்துவாழ தாலி மிக வாழவென்று தரித்தார்தாலி’.

அதன்பின் அய்யா கன்னிமாரிடம்—‘நான் இன்னும் பலமடவாரை மணம் புரிவேன். மாலின் சூச்சம் கோடியுண்டு’ என்றுகூறி ‘‘கன்னிமட வார்க்கையைப் பிடித்துக் கொண்டு கருணைபதித் தெருவீதி’’—வந்து பள்ளி கொண்டார்.

இகனைத்திருவிழா:—அதுமுதல், சுவாமி பிறந்த நாள் ஞாயிறு ஆகையினல் ஞாயிறுதோறும் திருநாள் இகனை நடத்திவந்தனர் சான்றோர் மக்கள்.

திருநாளுக்கு, பாலுக்கு நெல்லும் சிறுமணியும் பிச்சி மாலையும், கொழுந்து, பன்னீர் சந்தனமும் வாழைக்கனி, கமுகு முதலியனவும் மக்கள் தந்தனர்.

பல்லாயிர மக்கள் தினமும் கோவிலை வலம்வந்து சேவித்தனர். பின்னர் கன்னியர் தம் மக்களைத் தருமாறு வேண்ட ‘‘தெய்வ மவராய்த் திருவுளமும் அவராய்’’ நிற்கும் அய்யா நாராயணர் மடந்தையர்க்கு மதலைதர மனதில் நினைத்தார்.

அன்னையர்க்குப் பிள்ளை தந்தார்:— பின்பு சோழன் கொன்றவர் இருவர்போக ஐந்து மக்களையும் ஒவ்வொருவருக்கும் அடையாளம் காட்டி, கொடுக்க நினைத்து மீதி இரு மதலையையும் கலியடக்கி நடுத்தீர்ப்புச் செய்யும் போது செடமெழுப்பித் தருவேன் என்று கூறினர்.

சீடரே பிள்ளைகள்:— அன்னையர்கள் பிள்ளைகளை எதிர்பார்க்க ''மாதே நான் இந்த வையகத்தில் வந்தவுடன் பாரேழில் நம்முடைய பஞ்சவர்கள் தன்வழியில், தெரிந்து தன் மக்களிலே சீடரெனத் தெளிந்து, கூர்ந்தென் கைக்குள் கொள்கிறேன் வேலையது'' என்றுகூறிச் சீடராகத் தனக்குப் பணிபுரிந்த சான்ரோரைக் கொடுத்தார்.

அதன்பிறகு பதியில் பள்ளிகொண்டு பாவையரோடு சாமிதோப்பில் பத்தாண்டு ஆட்சியில் இருந்தார். வீடுதோறும் சென்றுவந்து வாழ்ந்து வந்தார்.

மூலகுண்டப் பதியில் முன்னொருகால்!:— அய்யா அலைமேல் பிறந்தவுடன் ஒருமுறை மூலப்பதிக்குச் சென்றிருந்தார் அங்கே கடற்கரையோரத்தில் சென்றிருந்து ''நான் தவசிருந்து புதுமை நிகழ்த்தி கன்னியரை மணந்து திருநாள் கொண்டாடியஉடன் இங்கே வருவேன் என்று ஒரு லிங்கத்திற்கு வாக்குக் கொடுத்திருந்தார். இங்கே அவர் கடமையெல்லாம் கூறியபடி நடந்த பின்னும் அங்கே போகாமல் மங்கையரோடு வாழ்ந்திருந்தார். அக்காலை அய்யாவின் அடியான் ஒருவன் கனவில் பூவண்டர் வடிவில் நாராயணர் தோன்றி இவர் கூறியபடி மூலப்பதிக்கு வர வேண்டிய நாள் வந்துவிட்டது என அறிவித்தார் அந்த அடியான் அய்யாவிடம் அதனைக் கூருமல் இருந்துவிட்டான்.

இழந்தார் இருவரை:— இந்நிலையில் வைகுண்டர்க்கு அவர்வாக்கை நினைவுறுத்த, அவர் பெண்களோடு வைத்திருக்கும் உறவில் பேதம் ஏற்படுத்த ஸ்ரீ நாராயணன் சாமளாதேவியை அழைத்து கன்னியரில் இருவரை முன்னல் இருபிள்ளைகளை எடுத்ததுபோல் எடுத்துவிடு என ஏவினர். சாமளாதேவி வாந்திபேதியை ஏவி அவ்வாறே செய்துவிட்டாள்.

கன்னியர் எழுவரில் இருவர் போய்விட மக்கள் துயர முற்றனர். அதன்பின்னே கனவுகண்ட அடியான் ஐயாவுக்கு உரைத்தான். அதைக்கேட்ட அய்யா மிக வருந்தி ''பூவண்டரால் பெரிய பிதாவல்லவோ மாவண்டப்பயலே வந்து சொல்லாதிருந்தாயே'' என்று அவனைக் கடிந்து மாதொடும் மக்களோடும் மூலப்பதிக்கு வந்து வாழ்ந்திருந்தார்.

மூலகுண்டப் பதியாட்சி:— அங்கே செவ்வாய்க் கிழமை முதல் அவதாரக்காட்சியுடன் திருநாள் கண்டு மகிழ்ந்திருந்தார். அப்போது பகவதி முதல் கன்னியரை மணமுடிக்க வேண்டுமென்று நினைத்து பகவதியை மண முடிக்கத் திட்டமிட்டார்.

பகவதியம்மன் திருமணம் மாயக்கிழவன்: பகவதியைப் பத்தினியாக்கத் திட்டமிட்ட பகவான் ஒரு படுகிழம்போல் வேடமிட்டு பகவதி பதிக்குச் சென்று நேரே அவள் அந்தபுரத்துக்குள்ளேயே சென்றுவிட்டார். அவள் கடிந்துவினவ, 'தான் தீர்த்தமாடி நாடெல்லாம் சுற்றிவரு பவன் எனவும் கண்தெரியாமல் வழிதவறி அதனுள் வந்து விட்டதாகவும் தன் பெயர் இராமன் என்றும்' - கூறினார். இன்று இரவு மட்டும் தங்கிவிட்டு நாளையே புறப்பட்டு விடுவேன் என்றார்.

'நாகரியக்குமரி பகவதி':— அவர் முதுமைக்கும் நோய் குறிக்கும் இரங்கி அன்றங்கு தங்க இடம் கொடுக்க இசைந்து பொரிமாவு பிசைந்து தருவதாகக் கூறினாள். அவர் அங்கே தங்கச் சம்மதிப்பதுபோல நடித்து பகவதியிடம், ''1008 மாசியிலே வாரித் திரைமேல் செந்தூரில் வைகுண்டம் என்றொருவர் தோன்றினாராம், அவர் கலியழிக்க வந்தவராம். சப்த கன்னியரை மணந்துகொண்டாராம். அண்மையிலுள்ள மணவைப் பதியில் இருப்பவராம் நீ அறிவாயோ?''—எனக் கேட்டார்.

கன்னியரைப் பார்க்க கன்னிக்கு ஆசை: அவள் தானறியவில்லை என்றும் அது உண்மையானால் சப்த

கன்னியரைப் பார்க்கத்தான் விரும்புவதாகவும் இரவுக்குள் போய்ப்பார்த்துத் திரும்பிவிட தனக்குச் சம்மதமென்றும் கூறினுள்.

கிழவனுக்குத் திட்டம் நிறைவேறும் வழியாகையால் கிழவன் 'உன்னேடு என்னுல் நடந்து வரமுடியுமா? என்றெல்லாம் மயக்குமொழிபேசி பின் அவளை அலைவாய்க் கரை வழியே அழைத்து வந்திட்டார்.

பகவதி முட்டாங்கு போட்டு அவரோடு வழி நடந்தாள். வழிநடந்து மூலப்பதியருகில் வந்தவுடன் பக்கத்தில் பல ஓசைகள் கேட்பதை அவளுக்குக்காட்டி அதைப் பார்த்துப் போவோம் எனக்கூறிக் கூட்டத்துக்குள் அழைத்து வந்து காட்சிகளையும் காட்டினுர். அதற்குள் விடியும் நேரம் நெருங்கவே பகவதி கிழவரிடம் தன்னை விடிவதற்குள் தன்பதிக்கு அழைத்துச் சென்றுவிட வேண்டினுள்.

மூலப்பதியில் முதல்வன் விளையாட்டு:— அப்போது கிழவர் இப்போதே 'உன்னை கண்ணர் திருப்பதியினுள் அழைத்துச் சென்று விடுவேன் கலங்காதே' என்று கூறி கூட்டத்தினூடே அழைத்துப் போனுர். கூட்டிச்சென்று பகவதியாள் கண்ணுக்குத் தோன்றும் வண்ணம் கோவிலுக்குள், "பச்சை நிறமும் பவளவாய்க் கனியிதழும் நள்ளிரவில் பள்ளிகொண்ட நல்லசொருபம்போலே சச்சிதானந்த வடிவைக்"—காட்டினுர்.

அவள் அக்காட்சியையே மயங்கிப்பார்த்துக் கொண்டிருக்கும் போது கிழவன் மெல்லநழுவி அந்த இறைத் தோற்றத்தோடு இணைந்துவிட்டான். திடீரென பகவதி கவனம் சிதைந்து கிழவரைத் தேடினுள் காணவில்லை. எங்கெங்கும் தேடியலைந்து மிகவருந்திக்களைத்து 'சந்தியில் பந்தாக்கினனே' என்று புலம்பினுள். நேரம் விடியத் தொடங்கியது.

பொன்வண்டுக் குமரி:— உடனே 'சங்குள் பிறந்த சமயத் திருமணி'யும் மனிதர்கள் காணுமல் மறைந்து நின்ருன். மாது நல்லாள் அவரைத்தேடிக் காணுமல் பின் தன்னுருவை

மறைக்க புன்னைப் பூவிலொரு வண்டாக மாறிநின்ருள். பகல் பொழுதும் மெல்ல நகர்ந்தது.

'மாப்பிள்ளைக்கு வீங்கி!':— பகல்பொழுது மறைந்த உடன் ஒரு பத்துவயது நிரம்பிய குழந்தைபோல் உருவெடுத்து கிழவரைத் தேடினுள். தனக்கு வழிதெரியாமல் மயங்கிப் புலம்பினுள். 'மாப்பிள்ளைக்கு வீங்கி' வறட்டுக் கிழவன்கூட போய்விட்டாள் என்று புவியோர் சொல்வார் களே என்று நாணினுள்.

பகவதியைப் பருவப் பெண்ணுக்குதல்:— உடனே வைகுண்டர் ''இனி யிவளை இந்த ராஜ்ஜியத்தில் நம் முடைய மனிதப் பெண்கூட்டில் விட்டு மாலையிட வேண்டு மென்று நினைத்துப் பெருமாள் நேரிழையைத்தான் மயக்கி புனைந்தொரு பெண்ணுடைய பொற்கூட்டுக் குள்ளடைத்து தாண்டவமாடுஞ் சபையில் சனங்களெல்லாம் பார்த்திருக்க காண்டம்மிகப் படித்துக் கன்னி பகவதியை மனுவறிய அண்டம் வானலோகம் அறிய இனி மணங்கள் இவளை யாம்புரிய வேணுமென்று''—நிச்சயித்து;

அவ்வாறே வேருேர் கூட்டிலடைத்துக் குமரியாக்கினுர். அவளோ மிகச் சினத்தோடு இவர் தன்னை ஏமாற்றி விட்ட தாகப் பலவாறு குற்றம் சாட்டினுள். அவர் அவளிடம் ''பலம்பெற உனக்குயிந்த பருவமா மணங்கள் செய்ய நலம் பெற வரங்கள் பெற்றேன்!'' என்று கூறினுர்.

சிவன் சொன்ன சேதி:— மாது உமையாள் முதல் தேவிப் பெண்டிரனைவரும் ஒருசமயம் கூடியிருக்கும் போது கலியன் வரம்பெற்றுத் தன் தேவியோடு அலங்காரமாக அவ்வழியே போனுன். அப்போது உமையாள் சிவனிடம் 'இவன் முடிவது எப்போது?' —எனக் கேட்க அப்போது சிவன் –

சிவஞான நினைவு செல்லாத காலத்தில், போருக்கு யாரும் புத்தியாய் இருக்கும் காலத்தில், நேருக்குக் காலம் நிகழ்ந்திருக்கும் காலத்தில், பிராயம் வருமுன்னே பெண்கள்

நிலையழியும் காலத்தில் இவன் அழிவான்'' அப்போது திருமாலே வைகுண்டராய் வந்து இவனை அழிப்பார். அப்போது நாமெல்லாம் புவியில் இருப்போம்'' என்று கூறினர்.

உடனே முனிவன் 'அப்படியானல் இத்தெய்வமாதரையெல்லாம் யார் மணப்பது?' எனக்கேட்க சிவன் 'நாமெல்லாம் வைகுண்டரோடு ஐக்கியமாகி விடுவோம் ஆகவே அவரே — இந்நங்கையரையெல்லாம் மணம் முடிப்பார்!'' — எனக் கூறினர்.

திருமதி வைகுண்டசாமி:— அந்தக்காலம் இது பெண்ணே அதனலேயே நான் உனைக்கொண்டு வந்தேன் பதருதே என்று கூற பகவதி மகிழ்ந்தாள். குமரியிலிருந்து அவர் குமரியைக் கடத்திச்சென்று மூன்றுநாள் கழித்தபின்பு, அவளுக்கு மாலைசூட்டினர். குமரி திருமதி வைகுண்டரானள்.

பார்வதி திருமணம்

அதன் பின்பு பார்வதிதேவியை மணந்து கொள்ள மனதிலுற்று 'திங்கள் சடையணிந்து சிவவேடமும் தரித்து, மாத்திரக்கோல் கைப்பிடித்து மார்பில் தாவடமும் பூண்டு, காத்திருந்து பார்வதியைக் கருத்தாய் நினைக்கலுற்ருர்.' மாயன் மாய மாறியா பார்வதி தன்தோழியரோடு வந்து மாயனின் பாதத்தில் வணங்கி நின்ருள். வந்த அவள்,

''அண்ணல் நாராயணரும் அவனிதனில் வந்தாரென்று நாங்கள் பார்க்க வந்தோம்'' – என்று கூறினள். மாயன் அவளோடு மாயமொழி பலகூறி பண்டாரமாகப் பரமன் வடிவெடுத்து தாலிமிகத் தரித்தார். பார்வதிக்கு மட்டுமல்ல எண்ணற்ற ஏந்திழைமார்க்கும்!

இலட்சுமி கல்யாணம்

பின்பு தன் உரிமை மனையாளாகிய சீதாலெட்சுமியையும் புது மாலைச் சூட்டிமணந்துகொண்டார்.

மண்டைக்காட்டாள் மணம்

'மாதருக்கு மாதவனும் வானோர்க்கு நாயகமாய் தாரணிக்கு நாதனென — வாழ்ந்திருந்த வைகுண்டர்' பின் மண்டைக்காட்டாளைப் பெரிய மணம்புரிய உள்நினைத்தார். உடனே —

பெண்ணான பெருமாள்:—மண்டைக்காட்டாளை மயக்கி அழைத்துவர ஒரு மங்கைவடிவம் எடுத்தார். 'காதுக்குத் தோடணிந்து கைக்கு வளையணிந்து மார்பில் வடமணிந்து வாய்த்த தண்டை காலிலிட்டு சேலையுடுத்து'... அவர் திருக்கோலம் கொண்டார். பெண்ணானார் இந்த பெருங்கலியை முடிப்பதற்கு! இவர் அழகுக்கோலம் கண்ட மற்றவர்கள், 'கன்னிகணவர் என்றும் 'நாரணப்பெண்' என்றும்கூறி பாராட்டி மகிழ்ந்தனர்.

மயங்கினாள் மண்டைக்காட்டாள்:-வலம்புரிக்கண் மாயன் மண்டைக்காட்டாளிடம் சென்று அவளை மயக்கி அழைத்துத் தன் பதிக்குக் கூட்டிவந்தார். அதன் பின்பே அவளுக்குப் பெண்ணாய் வந்தது வைகுண்டர் என்பது தெரிந்தது.

அவள் ''சங்கை நமக்கெடுக்க சமைந்தாரே சமைந்தாரே பெண்ணாகி, பெண்ணாச் சமைந்து பேராசையுமாகி, கண்ணான எந்தன் கற்பும் இழந்தேனே'' என்று கூறினாள். உடனே வைகுண்டர் அவளைத் தேற்றி பெண்ணே 'எனக்கு உன்பேரில் பேராசை மெத்தவுண்டு! கண்ணே உனையிப்போ கலியாணம் செய்திடுவேன்!' - என்றுகூறி மாலையிட்டார்.

வள்ளித் திருமணம்

பின்பு பெருமாள் வள்ளியை மணமுடிக்க மனம்கொண்டு, 'கந்தன் சொரூபமதும் கரியமால் தானெடுத்து எந்தன் பிரானும் ஏற்றவள்ளி நாயகியை மாலையிட்டு நல்லமணம் முடித்தார்'. இவ்வாறு பல பெண்களையும் மணந்து மாயன் மகிழ்வோடு வாழ்ந்து வந்தார்.

பூமடந்தைக்குப் பூமாலை

வள்ளித் திருமணம் நடந்தபின் வைகுண்டர் கல்விக் கடவுளாக பூமேல் வீற்றிருக்கும் சரசுவதி என்ற கலைமகளை மணந்துகொள்ள எண்ணினர். உடனே பூமடந்தைக்குப் பூமாலையிட்டார்.

திருமணங்களின் பொருள்:— தெய்வானை, காளி முதலிய இவர்களையும் தவிர அய்யா பல மாதரை இகனையாக மணந்து கொண்டார். தந்தை தன் மகனுக்கு ஒண்டொடியாள் சிலரை உன்பாரி தானுக்கிக்கொள் என் மகனே'' என்று கூறியருளிய வாக்கின்படியே இவையெல்லாம் நடந்தது.

இத்திருமணங்கள் எல்லாம் ஆராதனையாகி வந்தவர்களால் இகனையாக நடந்தேறியது. இவ்வாறு மனம் விரும்பும் மாதரை எல்லாம் மாயவனுர் மணம்முடித்து மகிழ்ந்து வாழ்ந்தார். சான்ருேர் மக்கள் அவர்மீது பக்தியாய் அவருக்குக் காணிக்கை மிகக்கொடுத்து அருள் பெற்றனர்.

பகவதி தன் ஊருக்குப் போய்விடுதல்:— அப்போது ஒருநாள் அன்னை பகவதியாள் தன் ஊருக்கு மறைவாகச் சென்றுவிட்டாள். தோழி எங்கெங்கும்தேடி ஏந்திழையைக் காணுமல் அவள் பதிக்கு வந்து அவளைக் கண்டாள். சொல்லாமலே வந்துவிட்டது ஏன்? என்று அவள் கேட்க, ''முன்னம் விதியாலே இவ்வாறு நடந்தது நீங்கள் கவலை கொள்ள வேண்டாம். நீங்கள் என் மன்னருக்கும் எனக்கும் ''தீதேது மில்லாத தெய்வத்திருப் பதியில் நின்று பணிசெய்ய நிறைவாக நில்லுமென்று''—அருள்செய்தாள்.

சான்ருேர் விருந்தூட்டல்:—பின்னல் எம்பெருமான் பெரிய சான்ருேர் மக்களிடம் 'உங்கள் வீடுகளில் விருந்தேற்க விரும்புகிறேன். என்பேரால் நாட்டும் இணைத்தாங்கல் களைப் பார்க்க எனக்கு சந்தோசம். அதனுல் அவற்றைப் பார்க்க வருகிறேன்' என்று கூறினர்.

சான்றோர் மக்கள் அவ்வாறே வரவேண்டும் என்று வேண்டி அழைத்துச்சென்று தங்கள் மனைகளிலே தக்க விருந்தளித்து இணைத்தாங்கல்களுக்கு அய்யாவை அழைத்துச் சென்று காட்டி அறம்வளத்தனர். அய்யாவும் பல சோதனைகள் பாருலகில் பார்த்தபின்பு சான்றோர்களைத் தனக்கடிமை கொள்ளக்கருதி அன்பால் அவரைச் சூளடிமை கொண்டார்.

வைகுண்டம் செல்ல வைகுண்டர் விருப்பம்:—அதன்பின்பு அய்யா இப்புவி விட்டு வைகுண்டம் ஏகிட மனதில் உற்றார். சீசன்மார்களும் கூட அறியாவண்ணம் வைகுண்டம் செல்ல திட்டம்வகுத்தார். தன் அன்புச் சான்றோர் மக்களைப் பார்த்து ''நீங்கள் என்னைத்தேடியே இருக்கும் போது நான்வந்து நடுக்கேட்பேன். பேசின நூல்போல் நீங்கள் வாழ்ந்திருந்தால் தர்மபுவியில் வாழலாம்' என்று சிரித்துப்பேசி இருந்தார். அவர் இவ்வாறு சிரித்துபேசி, குதூகலமாய் இருப்பதைக்கண்ட சான்றோர் இவர் என்றைக்கும் நம்மை ஆள்வார் என்றெண்ணி இருந்தார்கள்.

வைகுண்ட லோகத்தில் வரவேற்பு ஏற்பாடு:—அய்யாவோ தன் தந்தையை நோக்கி குருவே நீர் குறித்த நாளெல்லாம் நான் புவியில் வாழ்ந்து கலிகருக அறமுரைத்து வாழ்ந்தாயிற்று. இனி என்னை அழைப்பீராக' என்று வேண்ட;

பாலனை விமானத்தில் அழைக்க வேணுமென்று ஈசுரரும் வேகத்திருமாலும் நினைத்தனர் வானோர்க்குச் செய்தி கூறினர். உடனே வைகுண்டரை அழைப்பதற்கு தேவர்கள் வைகுண்ட லோகத்தை அலங்கரித்தனர். உடனே இச்செய்தியை;

''சற்குரு வான சடாய்முனி இங்கு வந்து
மெய்க்குரு வசன வீர விசையனுக்கு''

சொன்னார்,

சமாதியில் வைகுண்டர்:—உடனே வைகுண்டர் 'மாதர்மனை மறந்து வாழ்வை மிகமறந்து தாதர் ஊன்

மறந்து சடலஉடை மறந்து, நன்மைபல சோபனமும் நளிப் பேச்சும் மறந்து செம்மைக் குருவாய் செம்மிமூல மடக்கி மூலமதிலடக்கி, உடலூற்றுத் தானிறக்கி, ஆக மடக்கிக் கண்ணனூர் தானோக்கி'' இருந்து. ''கைக்குள் நின்ற மக்கள் கலங்கி மிகப் பயந்து, நிற்கும் நினைவை நினைவில் அறிந்து வைத்து, நடக்கும் படியான நல்மொழிகளும் உரைத்து, உடற்குள் குறிப்பாய் ஒத்துமிக வாழுமென்று, சொல்லி மக்கள் கைவ்யத் திருமுகத்தோடே சேர்த்து, இல்பியல்பாய் வாழும் யாம்முழித்து வாருமென, அவர்க்கெல்லாம் சொல்லி நாமமும் கொடுத்து, திருந்து புகழ்மாயன் சிறந்த ஓராயிரத்து, ஓரிரு பத்தாறு தங்கும் இடபமதில், 'சீரியல்பாயுள்ள தெய்தி இரு பத்தொன்றில், பூர்வ பச்ச பூநச் சத்திரத்தில், வாறடைய சோம வாரமும் பொழுதூர்ந்து, பன்னிரண்டு வேளை பாவிக்கும் நேரமதில், அன்பென்ற சொல்லொன்றால் தொல்புவினைய ஆண்ட வைகுண்டர், வைகுண்டம் ஏக வழிகொண்டார் அம்மானை''

வைகுண்ட லோகத்தில் வைகுண்டர்:— விமானம் ஏறி தேவர் முனிவர் சூழ்ந்துவர வைகுண்டம் வந்த அய்யாவுக்குத் தேவர் மலர்மாரி சொரிந்தனர். தந்தை தன் மகனை ஆவி அணைத்துக் கொண்டார். தாயான இலட்சுமியும் ஆவியணைத்து இன்பமடைந்தாள்.

அய்யா வைகுண்டம் சென்றபின்பு சான்றோர் 'முன்பு மொழிந்த முறைப்படியே நம்மையா, நடந்தார் தானல் லால் ஞாயம் வேறில்லை என்று மாதத் திருநாளும் வாரம் மறவாதபடி நாதன்தனக்கு நாம் செய்வோம்—என

''பொன்மேனிக் கூட்டைப் பொதிந்துமணிக்
கோவில் வைத்துத்
தென்மேனிச் சான்றோர் திருநாள் நடத்திவந்தார்!''

8. தர்ம யுகம்

முதல்வன் பற்றி முனிவர் சாட்சியம்:— 'குழந்தை வைகுண்டர் குமாரப்பிராயமட்டும், கோலாகல ஞய்க் குருவாய்ச் சமையுமட்டும், பொல்லா தெல்லாத மழித்துப் பூவர்கொலு வாகுமட்டும்' தெச்சணத்தில் இருந்த பின், தேவர் முனிவர் தந்தையின் கட்டளைப்படி வைகுண்ட லோகத்திற்கு அழைத்து வந்தனர். வைகுண்டர் தன் நந்தை திருமுன் வந்தார்.

அவர் தன் மகனிடம் கலியுக நிலைமைகளை யெல்லாம் கேட்டறிந்தார், பின்பு அய்யாவுக்குக் காவலாக நின்ற ரிஷிமா ரையும் அழைத்துக் கேட்டார். அவர்கள்.

''கண்ணுக்குள் மணியாய் நின்ற காரணக் குருவே ஞான
விண்ணுக்குள் எவர்க்கும் ஞான வெளிச்சுட
ரானமூர்த்தி
ஒண்ணுக்குள் ஒண்ணுய் நின்று உலகிரே
ழனைத்தும் காக்கும்
அண்ணுக்கும் கடந்த சோதி அறிவுளம்
அறியாதது ஏதோ?"

எனக்கூறிட நாராயணர் நான் அறியினும் நீவிர் உரைத் திடுக என ஆணையிட்டார்.

உடனே முனிவர்கள்:—''நாங்கள் அறிய இவர் தவத்தில் ஒரு குறையும் ஏற்படவில்லை. இவர்போல் தவங் கொண்டார் எவ்வுலகிலும் இல்லை. என்று கூறினர்.

மேருவில் பொறித்தனர்:- உடனே நாரணர் தேவர்களை அழைத்து இவர் தன் பணிகளையெல்லாம் நன்ருகச் செய்து கலியழிவைத் தொடங்கிவைத்தார், ஆகவே இவரை அழைத்துச் சென்று வைகுண்டபதி வலம் வாருங்கள்'— எனக் கட்டளையிட்டார்.

தேவர்கள் அவ்வாறே செய்ததோடு மகா மேருமலையில் கலியுகத்தில் ஐயா நடத்திய ஆட்சிபற்றிய செய்திகளையும் பொறித்து வைத்தனர்.

வைகுண்டலோக ஆட்சி!:- நகர்வலம் முடிந்து வைகுண்டரைத் தேவர்கள் நாராயணர் முன்னில் அழைத்து வர நாராயணர் வைகுண்டருக்கு கிரீடமும் சூட்டிச் செங்கோலும் கொடுத்து சிங்காசனத்தின் மீது தூக்கி அமர்த்தி 'மகத்துவமாய் வாழ்க!' என்று வரமும் கொடுத்தார்.

அப்போது வைகுண்டர் தம் தந்தையான நாராயணரிடம் ''கலியில் என்னைப் பேணிய—என்னை நம்பியே வாழ்ந்த—வாழுகின்ற சான்றோரைக் காண என் மனம் விரும்புகிறது'' என்றார்.

அப்போது நாராயணர், ''அந்த சாதிக்கு இன்னம் ஈராறுகலை அடுக்கும்வரை நீ இச் சிம்மாசனத்தில் இருந்து ஆள்வாயாக'' என்று கூறினர்.

நமக்கும் சோதனை உண்டு!:- பின் தன் மகனிடம், ''உன் நெறியை உன் மக்கள் உண்மையாகவே பின்பற்றுகிறார்களா? உன்னுடைய வரலாறு கூறும் "மாநூல்" முறைப்படி வாழ்கிறார்களா?'' என்று பார்த்துவர ஒருவனை அனுப்ப மனம்கொண்டார்.

அவ்வாறே நாராயணரால் அனுப்பப்படும் ஒருவன் இனி உலகில் வருவான். மக்களைச் சோதிப்பான். அவன் சோதனையின் பிறகு தர்மயுகத்தில் அய்யாவின் அன்பு வழியைப் பின்பற்றி வாழ்கிறவர்கள் நற்கதி அடைவார்கள். இந்த நற்கதிபெறும் காலம் தர்மயுகம்! அப்போது வரும் உலகம் தர்மபுவி! அதன் பெருநகரம் துவராபதி!

தர்மபுவி தோன்றும் காலம்:- இத் தர்மயுகம், ''வடமேற்கு மூலையிலே லிங்கமொன்றிலே மூன்று இணையாகத் தோன்றியபின் தோன்றும்!''

''தர்மபுவி தோன்றும்போது வடக்கு வெளிவாசல் மலை மீதில் தென்பால் கடலருகே மெச்சுபதி மூலம் விளக்கெரியும்!''

''துவராம்பதியும் கோயில்களும் கோபுரமும் துலங்கும்!''

''பெண்கள் நாடெங்கும் வாசமிட்டு ஒரு குடைக்குள் ஆள்வார்கள்!''

''மூன்று கடல் சூழ்ந்து இருக்கும் இந்தியப் பெருங் கண்டத்தைச் சாதி ஒரு நிரப்பாய் சான்ருேன் ஒருவன் ஆள் வான்!''

அக்காலத்தில் 'சான்ருேர் கையாலே எள்ளும் நீரும் கலிக்கு இறைத்து பொல்லாக்கலியை நரகமதில் புக்க வீழ்த்தி அழிப்பேன்' என்ற வைகுண்டர் வஞ்சினம் நிறைவேறும்.

தர்மயுக இயல்புகள்:- இது 'நல்ல தர்மநாடு', இங்கு 'சாகா உலகத் தர்மபதி' யாகிய 'துவராம்பதி' இருக் கிறது. தர்மபதியில் முந்நூல் சாத்திர முறையெல்லாம் செல்லாது, 'மாநூலான அகிலமே' அங்கு நடைமுறை வேதம்.

அங்கே—ஏழைகள் இல்லே! கலியுகத்தில் தவமிருந்த எக்காள மடந்தையின் தவம் நிறைவேறி எமன் அழிவான்! இங்கே —

சாஸ்திர வேதம் சமயமொன்ருய் நின்றிலங்கும்! வாயுவே பூப்போல் மலரெடுத்து வீசிநிற்கும்! ஆயும் கலேத்தமிழும் அறிவொன்று போல்பரவும்! அங்கே அஞ்சுப்பூக் கொண்டு ஆசாரம் செய்தோருக்கு அய்யா வஞ்சமில்லாத வாழ்வு கொடுப்பார்?

கலியன் வதை:— அதற்குள் நிலத்தை அம்மியா கவும் வானத்தைக் குழவியாகவும் கொண்டு வைகுண்டர் கலியை அரைத்து அழிப்பார்.

ஒவ்வொரு யுகத்திலும் அறமழிக்கும் அரக்கனுகப் பிறந்து — கொடுமைக்குக் காவலனுகி — வாய்கொழுப்பால் இறுதியில் கலியனுய்த் தோன்றியுள்ள அரக்கனே அழிய வைப்பார்.

அவன் 'தன் விதியால் தானழிவான்'. முன் யுகத்தில் அவனுக்குக் கொடுத்த சக்கரத்தையும் முடியையும் அய்யா கைப்பற்றுவார்.

அதன்பின் முன்யுகங்களில் அய்யாவிதிக்கு ஏற்றபடி வாழ்ந்த உயிர்களெல்லாம் சான்றோரைப் போலவே அவர் பாதநிழலில் தங்கும்.

அப்போது வைகுண்டர் ஒரு சங்கினை எடுத்து ஊதுவார். இதுவரை வந்தடையாத அவருக்கு உறவான சகல உயிர்களும் அவரை வந்தடையும்.

மக்களைத் தருவார்:— தெய்வ மடவார்கள் எழுவரும் அங்கே வருவார்கள். அவர்களுக்கு மீண்டும் திருமணம் நடக்கும். வைகுண்டர் அவர் மக்களில் முன்பு கொடுக்கப் படாத இருவரையும் வழங்குவார்.

இதுவரை வடவா முகாக்கினியில் அடைபட்டிருக்கும் மாகாளி இப்போது வருவாள். அவளையும் மகா வைகுண்டர் மணந்துகொள்வார்.

தோன்றுமே தர்மபுவி!:- அப்போது தர்மபுவியின் தோற்றம் ஏற்படும். வைகுண்டரைக் கண்ட உடன் துவராம் பதி தோன்றும்.

தர்மபுவியில் புதுப்பூமி புதுநிலவு புதுவாயு புதுவானம் அமையும். 'குருபூமியான அந்த பொன்பதியில் தர்மயுகத் துக்கான எல்லா பொருட்களும் நிரம்பியிருக்கும்.

வைகுண்டர் அங்கே 'செப்பொத்த மாணுக்கர்' புடைசூழ தேவியருடன் வாய்த்த சிங்காசனத்தில் அமர்வார். எல்லா உயிர்களும் முன்னல் தர்மபுவிக்குக் கூறிய அமைதிகளுடன் வாழும்.

தர்மயுகத்தில் வைகுண்டர் ஆட்சி:—

''மும்மூர்த்தி யெல்லாம் ஒரு மூர்த்தியா யிருக்கும்
எம்மூர்த்தி யெல்லாம் இயல்மூர்த்தி
போலிருக்கும்''.

வைகுண்ட பெருமான், ''தர்மத்தால் கலியைத் தன்னந் தன்னல் கரைத்து' - அங்கே குலையாத நீதிக்கு அடையாள

மாக வாயிலில் ஒரு மணியைத் தொங்கவிட்டு சூரியனுன குடையின்கீழ் இருந்து சான்ரோர்கள் சூழ அரசாள்வார்.

"உன்னிலும் பெரியோனுக ஒருவனுள்
உயர்த்திகண்டால்
தன்னிலும் பெரியோனுகத் தழைத்தினிது
இருந்துவாழ்விர்"

என்ற அய்யாவின் ஆசி உரையின்படி அங்கு வாழலாம்!

நிறைவுரை

யுகத்துக்கு யுகம் லட்சுமியை விட்டுப் பிரிந்து உலகில் அரக்கரை அழித்து அறத்தினை நிலைநாட்டப் போய்விட்டார் திருமால். அரக்கர் வாழ்வு கலியுகத்தோடு முடிகிறது. கலி முடியும்வரை 'தலைவன் வழியை அறியாத ஒரு அடிமை போல' மயங்கிக் கிடக்கும் இலட்சுமிக்கு தர்மபுவி தோன்றிய பின் அந்தநிலை யில்லை. அவள் தன் நாயகனுடன் மகிழ்ந் திருப்பாள். அவர்கள் சான்ரோர் வாழும் தர்மபுவியை,

'பணிமாறும் காலம்வரை அரசாள்வார்கள்!'

கலியுகத்தில் நாராயணரே வைகுண்டராய்த் தோன்றி கலியழித்துப் புவியாண்ட இவ்வரலாற்றை 'அறக்காண்டத்தை' மாதவளாகிய லட்சுமி தேவிக்கு அவள் மணவாளர் மாயத்திருமால் உரைத்தார்!

திருமால் இலட்சுமிக்கு உரைத்தபடி
மேரு மலையில் பொறித்தபடி
வைகுண்டர் தம்சீடர் அரிகோபாலனுக்குக் கூறியபடி
அரிகோபாலன் அருளிய படி
வைகுண்டரின் அறக்காவியமான
அகிலத்திரட்டின்
'வசன காவியம்'
நிறைந்தது!

விரைவில் வெளிவரும்
புலவர் கு. பச்சைமால் M. A.
அவர்களின்

அய்யாவழி நூல்கள்

1. வைகுண்டர் அருள் வாக்குகள்
2. பகவான் வைகுண்டர் வரலாறு
3. அய்யா வழி
4. வைகுண்டரின் அற்புதங்களும் தீர்க்கதரிசனங்களும்
5. வைகுண்டரின் இல்லற வாழ்வும் துறவற வாழ்வும்
6. வைகுண்டர் சாதித்தலைவரா?
7. அய்யா பதிகள்—தாங்கல்கள் வரலாறு
8. அகிலத்திரட்டு விருத்தங்கள்
   (உரையும் இணைப்பு விளக்கமும்)
9. மால் பஜனை கீர்த்தனைகள்
   —வேலாண்டி உபாத்தியாயர்

— பூவாணி பதிப்பகம் —
சாமிதோப்பு-629704
குமரி மாவட்டம்

அசிசி அச்சகம், நாகர்கோவில்